
ஜன. 24 - ஜன. 30, 2010 Jan24 - Jan 30, 2010 பக்கங்கள் - 28 25.00

மாநகர சபை, யாழ்ப்பாணம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்



## ஜனநாயகத் தேர்தல் நடக்குமா?



## படையினருக்கு வந்த சோதனை

## மோசமான ஓர் அணுகுமுறை



விண்ணைத் தாண்டி வருவாயா இசை வெளியீட்டு விழாவில்

## கமல்ஹாசன்-ரஹ்மான்



## முள்ளி வாய்க்காலும் முள்ளுக் கம்பி வேலியும்

# ஜனநாயகத் தேர்தல் நடக்குமா?

## தெற்கில் சமநிலை என கணிப்பீடு; முடிவு செய்யும் வாக்குகள் தமிழர் கைகளில் !

யாழவன்

நாட்டின் ஆறாவது ஜனாதிபதி யார் என்பது இன்னும் மூன்றுநாட்களில் அதாவது 26 ஆம் திகதி இரவு தெரியவந்துவிடும்.



நாடெங்கும் வாழும் ஒரு கோடியே 40 லட்சத்து 89 ஆயிரத்து 500 வாக்காளர்கள் வாக்களித்து தமது தலைவரைத் தெரிவு செய்யப் போகிறார்கள்.

அரசு சார்பில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், எதிரணி சார்பில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவும் நேரடியாக மோதுகின்றனர்.

இந்தத் தேர்தலில் 22 வேட்பாளர்கள் களமிறங்கும் போதும் பிரதான போட்டியாளர்கள் இவர்கள்தான்.

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று புறப்பட்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் புரிந்து அந்தப் போரில் வெற்றி வாகை



சூடி, சிங்கள மக்கள் மத்தியில் அபார மான வரவேற்பையும், ஆதரவையும் பெற்றவர்கள் இவர்கள் இருவரும்.

ஒரே கொள்கையில் நின்று போரை வெற்றி கொண்ட இவர்கள் இன்று எதிரும் புதிருமாக களத்தில் நிற்கிறார்கள்.

தெற்கைப் பொறுத்தவரையில் இருவருக்கும் சமமான ஆதரவே இருப்பதால், தேர்தல் முடிவை நிர்ணயிக்கும் பொறுப்பு வடக்கு - கிழக்கு, மலையகத் தமிழர்கள், முஸ்லிம் மக்களின் கைகளில் வீழ்ந்துள்ளது என்று வல்லுநர்கள் மதிப்பிடுகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேரம் பேசும் சக்தியாக தமிழ்த் தரப்பு காய்களை நகர்த்தியது.

இருதரப்பினருடனும் தமிழ்த் தரப்பு மூன்று கட்டங்களாகப் பேச்சுக்களை நடத்தியது. அந்தப் பேச்சுக்களின் பயனாக சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என தமிழர் தரப்பு முடிவு செய்து பகிரங்கமாக அறிவித்துள்ளது.

தமிழ்மக்களின் அரசியல் தீர்வு உட்பட சகல விடயங்களிலும் மஹிந்த ராஜபக்ஷ நல்ல சமிக்ஞையைக் காட்டவில்லை. எதிரணி வேட்பாளர் ஓரளவு நல்ல சமிக்ஞைகளை வெளிப்படுத்தினார். அதன் காரணமாக அவருக்கு ஆதரவு வழங்கும் முடிவை எடுத்தோம் என தமிழர் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

யுத்தம் முடிந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவை தமிழ் மக்கள் ஏகோபித்து வரவேற்றுள்ளனர்.

ஆட்சிமாற்றம் ஒன்று - அதாவது தமிழ் மக்கள் தமது அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுக்க, அரசியல் இடைவெளி ஒன்றை ஏற்ப டுத்த இந்த முடிவு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண எந்த விதமான எத்தனமும் செய்யாத போக்கே மஹிந்த ஆட்சியில் விஞ்சி நின்றதாக அவர்கள் கூறுகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்குச் சென்று தாம் எடுத்த முடிவு குறித்து விரிவான விளக்கம் ஒன்றை வழங்கினர்.

மக்களுடன், பலதரப்பட்டவர்களுடன் பேச்சுக்களை நடத்தி னர். தமது முடிவு குறித்து மக்கள் கருத்தைக் கேட்டறிந்தனர்.

மக்கள் தமது முடிவை ஏகோபித்து வரவேற்றுள்ளனர் என்று கூட்டமைப்பின் தலைவர்கள் கூறினார்கள்.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இந்தியாவுக்கு பயணமானார்கள் கூட்டமைப்பின் தலைவர்கள்.

ஜனாதிபதி தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என எடுத்துள்ள முடிவு குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளித்தனர்.

தாம் எடுத்த முடிவை இந்தியத் தலைவர்கள் முழுமையாக வரவேற்றார்கள் என கூட்ட மைப்புத் தலைவர்கள் பின்னர் தெரிவித்தனர்.

இந்தியாவிடம் இருந்து கிடைத்த ஆசியுடன், பிரசாரக் களத்தில் தமிழ்த் தலைவர்கள் குதிக்கப்போகிறார்கள்.

கிழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடனும் வடக்கில் தமது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர்கள் முழு வீச்சில் பிரசாரம் செய்யப் போகிறார்கள்.



தேர்தல் திகதிக்கு முன்னர் மீண்டும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு தனது பரிவாரங்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரப்போகிறார். மக்களிடம் நேரடியாக ஆதரவு கோருவதுடன் பகிரங்கக் கூட்டங்களிலும் அவர் பேசப் போகிறார்.

ஏட்டிக்குப் போட்டியாக இரு பிரதான வேட்பாளர்களும் வடக்கு - கிழக்கு மக்களின் வாக்கைப் பெற இறுதி நேரத்தில் முயற்சினளில் இறங்கப் போகின்றனர்.

தெற்கில் மட்டுமல்ல வடக்கு - கிழக்கிலும் பொன்சேகா அலையே வீசுவதாக கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்ற போதும், இறுதிவரை யார்



வெல்வார்கள் என்று கூறமுடியாத நிலையே காணப்படுவதாக தெற்கு விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தேர்தல் மோசடிகள், கள்ள வாக்கும் போடுதல் ஆகியன இடம்பெறாமல் அமைதியான, ஜனநாயகத் தேர்தல் ஒன்று இடம்பெறும் போதுதான், மக்கள் தமது விருப்பப்படி ஒருவரைத் தெரிவு செய்ய முடியும்.

அராஜகச் செயல்கள் கட்டவிழ்க்கப் பட்டு தேர்தல் நடைபெறுமாயின் ஜனநாயக முறையில் மக்கள் தமது தலைவரைத் தெரிவு செய்ய முடியாத நிலையே ஏற்படும்.

தெற்கில் வன்செயல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கையில் வடக்கு - கிழக்கில் இதுவரை எந்தவிதமான வன்செயல்களும் முறைப்பாடு செய்யப்படவில்லை.

வன்முறைகள் அந்த சுதந்திரமான தேர்தலையே மக்கள் விரும்புகின்றனர். அத்தகைய தேர்தல் ஒன்று இடம்பெறுமாயின், மக்கள் தனக்கு விரும்பிய தலைவரை தெரிவு செய்ய வாய்ப்புக் கிட்டும்.

எதற்கும் இன்னும் மூன்று நாட்களில் இதற்கு விடை கிட்டிவிடும்.

***

## அவலங்களைப் பகிர்ந்துகொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர்கொண்டு இப்போது அகதிமுகாம்களில் வாடும் எமது உறவுகள் தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி'.


எழுதுங்கள்!

உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# புதிய ஜனாதிபதி யார்?

**-யாதுமானவன்**



அடுத்த வாரம் அடுத்த ஜனாதிபதி யாராக இருப்பார் என்பது தெரிந்துவிடும். அதற்கு முன்னர் ஏகப்பட்ட கருத்துக் கணிப்புகள், மதிப்பீடுகள், ஊகங்கள் எனபல அனுமானக் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஏட்டிக்குப் போட்டியான பிரசாரங்கள் நடக்கின்றன. ஆதரவாளர்களிடையே பல போட்டிகளும் மோதல்களும் நிகழ்கின்றன. நாடு பீரங்கிகள் அல்லாத தேர்தல் யுத்தத்துக்குள் சிக்கியுள்ளது. இந்த யுத்தத்தில் ஊடகங்களும் ஈடுபட்டுள்ளன. மோதல்கள் உயிர்ப்பலி வரை போயிருக்கின்றன. இவ்வளவும் எதற்காக?

நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு பதவியைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டி இது. நிறைவேற்று அதிகாரம் என்பது சாதாரணமானதல்ல என்பதை அறிய வேண்டுமானால், இந்தத் தேர்தலுக்காக ஒவ்வொரு தரப்பும் செயற்படுகின்ற விதத்தைப் பார்த்தாலே புரியும்.

அண்மையில், தமிழகத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி அளித்திருந்த இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் இலங்கையின் ஜனாதிபதி முறைமையைப் பற்றி விவரித்திருந்தார். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை என்பது உண்மையில் பலரும் சொல்வதைப் போல பெரிய சக்தி வாய்ந்த ஒன்றல்ல. ஜனாதிபதிக்கான செலவுக்கு அங்கீகாரம் வழங்குவதே நாடாளுமன்றம் தான். நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டதாகவே ஜனாதிபதியால் இருக்க முடியும் என்று புதிய விளக்கத்தை அந்த ஊடகவியலாளர் சொன்னார். அதுமட்டுமல்ல, அவர் மேலும் சொன்னார், சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக ஆட்சியில் இருந்தபோது ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி அரசாங்கமாக இருந்துகொண்டே விடுதலைப்புலிகளுடன் உடன்படிக்கையைச் செய்திருந்தார் என்று. அதாவது ஜனாதிபதியை மீறியே இந்த உடன்படிக்கை செய்யப்பட்டது. அப்போது அதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தடுக்க முடியவில்லை.

வெளிப்பார்வைக்கு இது சரியாகப் படலாம். ஆனால், சந்திரிகா குமாரதுங்க ரணிலை ஒருநாள் செல்லாக் காசாக்கினார். ரணில் அரசாங்கத்தின் அமைச்சுப் பொறுப்புகள் சிலவற்றைப் பறித்து, பின்னர் அந்த அரசாங்கத்தையே கலைத்தார். அதன்பின்னர் வந்த அரசாங்கம்தான் இப்போதிருக்கிற மகிந்த அரசாங்கம். ஆகவே, நாடாளுமன்றம் ஜனாதிபதிக்கு நிதி ஒதுக்குவதாக இருந்தாலும், அந்தப் நாடாளுமன்றத்தை, தான் விரும்பும் எந்த வேளையிலும் கலைத்து விடுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

எனவே, இத்தகைய அதிகாரச் சுவையுடைய ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவது என்பது சாதாரணமானதல்ல, சர்வ வல்லமையுடைய இந்தப் பதவியை இலகுவில் கைவிடவும் யாரும் விரும்புவதில்லை என்பதால் தான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறையை அழிப்பதற்கு யாரும் விரும்பவில்லை. இதில் மகிந்த ராஜபக்ஷவும் ஒன்றுதான் - சரத் பொன்சேகாவும் ஒன்றுதான். இந்த நிலையில் பெரும் போட்டிகளின் மத்தியில் எதிர்வரும் 27ஆம் நாள் இந்த நாட்டுக்கான அடுத்த ஜனாதிபதியாக யார் பொறுப்பு ஏற்பார் என்று தெரிந்துவிடும். சரத் பொன்சேகா கட்சி எதனையும் சாராமல் போட்டியிட்டாலும் அவரை ஆதரிப்போர் ரணிலின் ஐ.தே.க, ஜே.வி.பி, தமிழ்க்கூட்டமைப்பு, ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ், மனோ கணேசன் ஜே.வி.பியினதும் ஐ.தே.க வினதும் செல்வாக்கு மண்டலம் வெகுவாகச் சரிந்த நிலையில்தான் அவை ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்ததும் - இப்படி சரத் பொன்சேகாவைப் பொதுவேட்பாளர் என நிறுத்தினர் என்பதும் பழைய கதைகள். இதில் உண்மையுண்டு. பல்வேறு முரண்பாடுகளை உள்ளே கொண்டிருக்கும் கொந்தளிப்பான எரிமலை போல இருக்கும் கூட்டமைப்பும் இந்தத் தேர்தலில் சரத்தை ஆதரித்தாலும் அதனுள்ளே இன்றும் முரண்நிலைகள் பெருகியே உள்ளன.

இதைப்போல, மறுபக்கத்தில் மகிந்த ராஜபக்ஷவும் எதிர்பார்த்ததையும் விடக் கடினமான நிலையில் தான் போட்டியை எதிர்கொள்கிறார். யாராலும் தன்னை தோற்கடிக்க முடியாது என்று நினைத்திருந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு யதார்த்த நிலைமை இப்போதுதான் புரிந்திருக்கும். தனது கடந்தகால ஆட்சியை மக்கள் எவ்வாறு மதிப்பிட்டிருக்கின்றனர் என்பதை இந்தத் தேர்தல் அவருக்குப் புரியவைக்கும். அவர் தன்னைத் திரும்பிப் பார்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்தத் தேர்தல் அமைந்துள்ளது.

புதிய ஜனாதிபதியாக யார் வரக்கூடும் என இந்தியாவும் அமெரிக்காவும் சீனாவும் உன்னிப்பாக அவதானிக்கின்றன. இந்த மூன்று நாடுகளும் மதில் மேல் பூனைகளாக இருப்பது இன்னும் ஆழமாக கவனிக்க வேண்டியது.



போரில்லாத சூழலில் நடக்கும் தேர்தல், போர் முடிந்த பின்னர் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டிய சூழலில் வந்துள்ள தேர்தல். போருக்குப் பின்னரான சூழலில் பொருளாதார அபிவிருத்தி, புனர்வாழ்வு வேலை வாய்ப்பு எனப் பல்வேறு வேலைகள் பொறுப்புகளள் செய்யப்படவுள்ள நிலையில் வந்துள்ள தேர்தல்.

இவற்றை எல்லாம் வெற்றிகரமாக துணிச்சலாக ஆளுமையுடன் செய்து முடிக்கக் கூடிய தலைவர் யார் என்பதே இப்போதுள்ள தெரிவு.

இவற்றுக்கான எந்தப் பொறுப்பான பிரச்சினைக்கும் தீர்வை எட்ட முடியாத முட்டுக்கட்டையைப் போட்டுவிடும். எனவேதான் அடுத்த ஜனாதிபதி யார் என சிந்திக்க வேண்டியுள்ளது.

அதாவது நாடாளுமன்றத்தை தன்னுடைய ஆதரவு வட்டத்துக்குள் வைத்திருக்கக் கூடிய வல்லமையும் செல்வாக்கும் உள்ளவரே ஜனாதிபதியாக வாமுடியும். இல்லையெனில் அந்த ஜனாதிபதி சர்வாதிகார நிலைக்கே உயர்வார். அது தான் நடக்க போகிறதோ என்னமோ?

தீர்மானத்தை ஜனாதிபதி எடுக்கும்போது அதை அனுசரிக்கக்கூடிய நாடாளுமன்றப் பலமும் ஒத்துழைப்பும் ஜனாதிபதிக்கு வேண்டும் என்பது முக்கியமானது. ஜனாதிபதியுடன் இணைந்து செல்லக் கூடிய நாடாளுமன்றம் இல்லையானால், சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது ரணிலின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைப் போல மீண்டும் முக்கியமான கட்டத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் நிலைமைதான் உருவாகும். இது

மக்கள் விழிப்பாக இருக்க வேண்டிய தருணம் இது.

***


## மணமகன் தேவை

யாழ் உயர் இந்து குலத்து டாக்டர் (MBBS) ஆக வேலை செய்து கொண்டிருக்கும் 37 வயதுடைய பெண்ணுக்கு டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன் மற்றும் தகுந்த பதவி அந்தஸ்துள்ள மணமகனை

தொடர்பு 011 2471369 071 7677750

கல்கிசையில் அமைந்துள்ள வீட்டின் ஓர் அறையில் வாடகைக்கு தங்கியிருப்பதற்கு ஒருவர் அல்லது இருவர் தேவை. ஓய்வூதியர்கள் விரும்பத்தக்கது.


தொடர்புகளுக்கு 077 2378851

எமது மொழிபெயர்ப்புக் குழுவில் அனைத்துவிதமான நூல் மொழிபெயர்ப்பு வேலைகளும் கச்சிதமாகச் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு-077 2378851

உங்களுடைய பழைய TV யை எடுத்து வந்து புத்தம் புதிய TV யுடன் செல்லுங்கள்!

அபான்ஸின் விசேட LG TV சலுகை


LG Life's Good

21SA1RL
- Swivel
- XD Picture
- Real Stereo
- Turbo Sound
- Glossy Black Color
- 200 Program Memory
- Multi System
- Side & Rear AV

*Any Brand, Any Condition

விலை-44,990

சலுகை விலை 41,990

வட்டியில்லாத 12 மாத தவணைக் கட்டணங்கள்

WARRANTY 5 YEARS

உங்கள் தொலைபேசிக் கட்டணம், கடன் அட்டைக் கட்டணம் செலுத்துவதையும் மற்றும் கையடக்கத் தொலைபேசி ரீலோட் செய்வதையும் நாடெங்கிலுமுள்ள எந்தவொரு அபான்ஸ் நிலையத்திலும், அபான்ஸ் எலைட், JVC/HAIER மற்றும் A-Z இலத்திரனியல் பொருள் காட்சியறைகளிலும் செய்துகொள்ளலாம்.

Abans

சுடர் ஒளி

ஜன. 24 - ஜன. 30, 2010

85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0115738005
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## ஆப்கான் யுத்தமும் அமெரிக்காவும்

கடந்த ஆண்டு முற்பகுதியில் அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவி ஏற்றபோது, வெள்ளை மாளிகையில் ஆற்றிய உரையில், ஈராக்கில் இருந்து அமெரிக்கா தனது படைகளைப் படிப்படியாக வாபஸ் பெற்றுக்கொள்ளும்; அதேநேரம், ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் தாக்குதல்கள் தீவிரப் படுத்தப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

பராக் ஒபாமா பதவி ஏற்று தற்பொழுது ஒருவருடம் கழிந்துவிட்டது. இன்று ஆப்கானிஸ்தான் குண்டு வெடிப்புகளினால் அதிர்ந்து கொண்டிருக்கிறது.

தீவிரவாதிகளின் கேந்திர பூமியாக ஆப்கானிஸ்தான் செயற்பட்டு வருவதாலேயே ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த பராக் ஒபாமா திட்டமிட்டார். கடந்த ஒரு வருடமாக ஆப்கானிஸ்தானுக்கான தனது படைகளின் பலத்தை அமெரிக்கா அதிகரித்திருந்தது. அத்துடன் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பாகிஸ்தானின் பிரதேசங்கள் மீதும் அமெரிக்கா தாக்குதல்களை மேற்கொண்டது. ஆனால், இன்னும் தீவிரவாதிகளை ஒழித்துக்கட்ட முடியவில்லை. ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயியின் புதிய அமைச்சரவை பதவி ஏற்ற நேரத்தைக் குறியாக வைத்து தலைநகர் காபூலில் தொடராகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி மாளிகையின் நுழைவாயில் பகுதிகூட தாக்குதலில் தப்பவில்லை. 1970களின் முற்பகுதியில் தென் வியட்நாமில் வியட்கொங் கெரில்லாக்கள் இத்தகைய தாக்குதல்களை நடத்தி அமெரிக்க ஆதரவு நூயன் வான் தியூவின் அரசாங்கத்தை நிலைகுலைய வைத்தனர். 1975 ஆம் ஆண்டில் தென் வியட்நாமில் இருந்து மட்டுமல்ல, லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகளில் இருந்தும் அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானிலும் இப்படியான ஒரு நிலைமையே உருவாகி வருகிறது. ஆப்கானிஸ்தான் தலிபான் தீவிரவாதிகளிடம் வீழ்ச்சி அடையுமானால், அடுத்து பாகிஸ்தான் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கிவிடும். இந்தியாவுக்கும் ஆபத்து ஏற்படும். தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள், குண்டுத்தாக்குதல்கள் காரணமாக ஏற்கனவே பாகிஸ்தான் அரசு நிலைகுலைந்து போயுள்ளது. மும்பைத் தாக்குதல் காரணமாக இந்தியாவில் தீவிரவாதிகளின் தாக்குதல் குறித்த அச்சம் அதிகரித்துள்ளது.

ஆகவே, இன்றைய இந்தப் பதற்ற நிலைமைக்கு முக்கிய காரணம் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள்தான்.

நியூயோர்க் இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதலை அடுத்து அமெரிக்கா தனது படைகளை ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பி, பதவியில் இருந்த தலிபான் அரசாங்கத்தைக் கவிழ்த்தது. அதன் விளைவுகளே தற்பொழுது இடம்பெற்றுவரும் குண்டுத்தாக்குதல்கள்.

பதவியில் உள்ள அரசுகளைக் கவிழ்ப்பது சுலபம். அதன் விளைவுகளைச் சரியாக எடை போடத் தவறும் போதுதான் விபரீதம் ஏற்படுகிறது.

வியட்நாம் பிரச்சினையுடன் ஒப்பிடும்போது ஆப்கானிஸ்தான் பிரச்சினையை மிகவும் மோசமானதாகவே அமெரிக்கா கருதுகிறது. ஏனெனில், அணு ஆயுத நாடான பாகிஸ்தான் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கிவிடும் ஆபத்து இருக்கிறது.

தற்போதைய நிலைமைகளை அமெரிக்கா மிகவும் அவதானமாகக் கையாள்வது அவசியம். அமெரிக்கா தனது கௌரவத்தை விட்டுக்கொடுத்தாவது ஆப்கானிஸ்தானில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். *

# மோசமான ஓர் அணுகுமுறை

-யோசவ் தயாளன்-

போர் முடிவுற்ற பின்னர் புனர்வாழ்வு, மீள் கட்டுமானம், அபிவிருத்தி என்ற விஷயங்களில் பலருடைய கவனமும் திரும்பியுள்ளது.


கடந்த 05 ஆம் திகதி யாழ் நூலக கேட்போர் கூடத்தில் Invest in Peace (சமாதானத்தில் முதலிடுங்கள்) என்ற கருத்தரங்கம் நடந்தது. இதில் பல்வேறு நாடுகளிலும் இருந்து வந்திருந்தவர்களுடன் இலங்கையின் முதலீட்டாளர்கள், தொழிலதிபர்கள், துறை சார்ந்தோர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கில் வடபகுதியில் மேற்கொள்ளக்கூடிய தொழில் முயற்சிகள் பற்றியே அதிகம் சிந்திக்கப்பட்டது, கூடுதலாக விவாதிக்கப்பட்டது. வடபகுதி மக்களின் வாழ்க்கை முறைமை, அவர்களுடைய தேவைகள், ஈடுபாடு என்பன ஒரு வகையிலும் வடக்கேயுள்ள வளங்கள், பருவநிலை என்பன இன்னொரு வகையிலுமாக ஆராயப்பட்டன. எல்லாப் பார்வைகளும் மேலோட்ட நிலையில் இருந்தாலும், ஒரு தொடக்க நிலைக் கரிசனை முயற்சியாக இந்த அரங்கைக் கொள்ளலாம். குறிப்பாக, வடக்கின் பொருளாதார அபிவிருத்தி, தொழில் முயற்சிகள், வளப்பயன்பாடு, வேலைவாய்ப்பு போன்ற பல விஷயங்கள் இந்தக் கருத்தரங்கில் கவனத்தில் கொள்ளப்பட்டன. எனவே, இனிவரும் காலத்துக்கான ஒரு பிரகாசமான முயற்சி இது எனலாம். இதைப்போல இன்னொரு கருத்தரங்கு கடந்த 12 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பில், தமிழ்ப்பகுதிகளின் புனர்வாழ்வு, மீள்கட்டுமானம், அபிவிருத்தி என்ற பொருளில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடந்தது. பெருந்தொகையானோர் கலந்து கொண்ட இந்தக் கருத்தரங்கில் பல முக்கியமான விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

குறிப்பாக தமிழ் மக்களின் மரபு ரீதியான பொருளாதாரம், வாழ்க்கை, கலாசாரம், சிந்தனை முறை உள்ளிட்ட பல விஷயங்களும், போர் ஏற்படுத்திய தாக்கங்கள், விளைவுகளும் இங்கே பேசப்பட்டன.

எனவே, அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த இரண்டு முக்கியமான கருத்தமர்வுகளும் சில செய்திகளைச் சொல்கின்றன. ஒன்று - முதலாவது - போருக்குப் பின்னரான வடபகுதியில் தமது தொழில் முயற்சிகளை எப்படி ஆரம்பிக்கலாம்? அதன் மூலம் சமாதானத்துக்கான ஓர் அடிவரைவை எவ்வாறு உருவாக்கலாம்? என்ற சிந்தனையும் முன் ஆயுத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் வடக்கின் வளங்களையும் மக்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் உபாயமும் உண்டு.

இரண்டாவது - தமிழ்மக்களின் வாழ்வுக்கு எப்படி உதவலாம், போரினாலும் கடந்தகால வன்முறை அரசியற் சூழலினாலும் பின்னடைவு கண்டுள்ள தமிழ்ப்பிரதேசத்தை எவ்வாறு புனரமைத்து, மீள்கட்டுமானம் செய்து, அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்பது. இது மக்களையும் அவர்களுடைய பிரதேசங்களையும் முன்னிலைப்படுத்தும், அவர்களுக்கு உதவும் சங்கதி.



எப்படியோ இந்த இரண்டு அமர்வுகளும் முக்கியமானவையே. போருக்குப் பின்னரான முதற்கட்ட முயற்சிகள் என்பதால், இவற்றுக்கு ஒரு முக்கியத்துவமும் உண்டு. ஆனால், இங்கே கவலைக்குரிய விடயம் என்னவெனில், போரினால் முற்றாக அழிந்துபோன வன்னியைப் பற்றிய கரிசனைகள் இல்லாதிருந்ததே. இரண்டாவது அமர்வில் இதுகுறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது. பின்னர் இதனை ஆதரித்துப் பேசினார் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

உண்மையில், ஏனைய பிரதேசங்களை விடவும் முற்றாக அழிந்தது வன்னியும் மூதூர் கிழக்கு மற்றும் வாகரைப் பிரதேசங்களும்தான். கிழக்கின் யுத்தம் மூதூர் கிழக்கு, வாகரையில்தான் முடிவுக்கு வந்தது. அதைப்போல, வடக்கில் யுத்தம் முடிவுக்கு வந்தது வன்னியில். அதிலும் வன்னியில்தான் இறுதி யுத்தம் நடந்தது.

எனவே, புனர்வாழ்வு என்பதில் முதலில் இந்தப் பகுதிகளுக்கும் யாழ் குடாநாட்டின் கரையோரங்களை அண்டிய உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குமே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இதனை நம் சிந்தனையில் பகிர்ந்து கொள்வது அவசியம். அத்துடன் போர்ப் பிரதேசங்களின் வளங்கள் அழிவடைந்தும் சிதைவடைந்தும் உள்ளன. இந்த வளங்களைப் பேணுவது, மீளுருவாக்கம் செய்வது என்பதும் இப்போது கூடுதல் கவனத்துக்குரியது.

இது வரையில் வடக்கு கிழக்கு - தமிழர் பகுதிகளின் அபிவிருத்திக்கும், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமானத்துக்குமான ஓர் அமைச்சரவைக் கூட்டம் கூட தனியாக - சிறப்பாக நடந்ததாக அறிய முடியவில்லை. நாடாளுமன்றத்திலும் உறுதியாக விவாதங்கள் நடத்தப்படுகின்றனவே தவிர, பொதுவாக எவராலும் இது குறித்த கவனம் செலுத்தப்பட்டதாக இல்லை. ஏன், தமிழ்க்கட்சிகளிடம் கூட இது பற்றிய அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

அவர்களுடைய அக்கறைகளெல்லாம் அரசியல் ரீதியான விடயங்களைப் பெறுவதிலேயே இருக்கின்றன. அதுவும் கொழும்பை மையமாகக் கொண்டதாகவே உள்ளன.

எனவே, பல இடங்களிலும் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருவதைப்போல, பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைப் புறந்தள்ளியே தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வும் மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும் அமையப்போகின்றன.

இது மே 17க்குப் பின்னரான நிலைமையில் மிக மோசமானதோர் அணுகுமுறையாகும்.

மே17 இற்கு முன்னரும் இந்தப் பிரதேச மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போதும் இவர்கள்தான் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே, இது குறித்த கவனத்தை பொறுப்பான தரப்பினர் உடனடியாகக் கொள்ள வேண்டும். இல்லையெனில், இந்த மக்களின் உளவியல் வேறு திசைகளிலும் பயணிக்கும் என்பதை நாம் அடுத்துவரும் காலங்களில் அறிய வேண்டி வரும்.



*****

# ஜனாதிபதித் தேர்தலும் தமிழர் தரப்பும்

-அருள் மனோகரன்-

''சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் எந்தத் தேர்தலிலும் தமிழர்கள் சரியான - விவேகமான தீர்மானத்தை எடுக்கவில்லை. அப்படிச் சரியான தீர்மானத்தை எடுத்திருந்தால் இன்று அவர்கள் இப்படித் தோற்றிருக்கமாட்டார்கள். அத்துடன் இப்போது தடுமாறிக் கொண்டிருக்கும் அவலநிலை ஏற்பட்டிருக்கவும் மாட்டாது'' என்று சொன்னார் ஓய்வுபெற்ற யாழ்ப்பாணத்து ஆசிரியர் ஒருவர்.



இலங்கையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் இரண்டைத் தவிர, ஏனையவற்றில் எல்லாம் அவர் வாக்களித்தவர். தமிழ் மக்களின் மன உணர்வுகளுடன் ஒத்து நின்று செயற்பட்டவர். இப்போதும் அவர் வாக்களிக்கவே தயாராக இருக்கிறார். ஆனால், அவர் சொல்வதைப்போல, வாக்களிப்பது என்பது முக்கியமானதல்ல. அந்த வாக்களிப்பின் மூலம் பெறப்போகும் அரசியல் சவாரி என்பதே முக்கியமானதாகும். இந்த வகையில் அவர் சொல்லுகின்ற அல்லது கவலைப்படுகின்ற விடயம் என்னவென்றால், தமிழர்களின் அரசியல் தெரிவு எப்போதும் அவர்களையே பலவீனப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இப்போது கூட்டமைப்பு எடுத்திருக்கும் நிலைப்பாடு என்பது ஏறக்குறைய கடந்த காலத் தலைமைகள் எடுத்த நிலைப்பாடுகளை ஒத்ததாகவே இருக்கிறது. எனவே, தமிழ் மக்கள் மேலும் மேலும் பலவீனப்படக்கூடிய சாத்தியங்களே இருக்கின்றன.

வெளிப்படையாகவும் மேலோட்டமாகவும் பார்க்கும்போது ஓர் ஆட்சி மாற்றம் தேவைபோலப் படலாம். ஆனால், அந்த ஆட்சிமாற்றத்தினால் எட்டப்படும் நன்மைகள் என்ன? இந்த ஆட்சிமாற்றம் என்பது தனியே ஆள் மாற்றம் என்று பொருள்படாமல், உண்மையான அடிப்படை மாற்றத்தைத் தருமா? என்று நாம் யோசிக்க வேண்டும்.


இரண்டு பிரதான வேட்பாளர்களையும் ஆதரிக்கும் தரப்புகள் சொல்லுகின்ற அல்லது நியாயப்படுத்துகின்ற காரணங்களை மக்கள் பெரும்பாலும் பொருட்படுத்துவதில்லை. எவர் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் வாழ்க்கை நெருக்கடிகள் முற்றாகத் தீரப்போவதில்லை. அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வும் எட்டப்படமாட்டாது என்பது மக்களுக்குத் தெளிவாகத் தெரியும் என்றபடியால்தான் பெரும்பாலானவர்கள் இன்னும் தேர்தலில் அதிக உற்சாகமில்லாமல் இருக்கிறார்கள். அதுவும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மக்களின் ஆர்வம் மிகக் குறைவாகவே இருக்கிறது.

இதற்கு பிரதான காரணம் என்னவெனில், இந்த இரண்டு வேட்பாளர்களும் அடிப்படையில் ஒன்றாக இருப்பதே. அதாவது, போர்க்குற்றங்களில் இருவருக்கும் பங்கு உண்டு. அரசியல் தீர்வு பற்றி இருவருமே தெளிவாக எதையும் சொல்லவில்லை. இருவரும் இனவாதக் கட்சிகளின் தலைமைத்துவத்தையே விரும்புகின்றனர். மீள்குடியேற்றம், புனர்வாழ்வு போன்ற அவசர விடயங்களிலும் ஏறக்குறைய இருவரும் ஒரே நிலைப்பாடுகளையும் அணுகுமுறைகளையுமே கொண்டுள்ளனர். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறையில் எந்த மாற்றத்தையும் இரண்டுபேருமே கொண்டுவரப்போவதில்லை. ஒருவர் குடும்ப ஆட்சியை நடத்துபவர் என்றால், மற்றவர் குழு ஆட்சியை நடத்தும் எண்ணமுடையவர். அதாவது, தன் நெருங்கிய சகாக்களைத் தன்னுடன் வைத்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளவர். இப்படி அதிக வேறுபாடுகள் இல்லாமல்தான் இரண்டு பிரதான வேட்பாளர்களும் இருக்கின்றனர். போத்தல்கள் வேறாக இருக்கலாம். ஆனால், பானம் ஒன்றுதான் என்பார்களே! அதுதான் நிலைமை என்றபடியால்தான் ''இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? எல்லாமே நமக்கு ஒன்றுதான்'' என சர்வதேச ஊடகமொன்றின் உள்ளூர்ச் செய்தியாளரான தமிழர் ஒருவர் அலுத்துக் கொண்டார். இதே அபிப்பிராயத்தையே சில சிங்கள நண்பர்களும் கொண்டுள்ளனர்.

அடிப்படையில் எந்தப் பெரிய மாற்றங்களையும் இந்தத் தேர்தல் கொண்டுவரப்போவதில்லை. ஆனால், பெரும் மாற்றங்களுக்காகவே நாடு காத்திருக்கிறது. மக்கள் புதிய தேவைகளைக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் தேவைகளுக்கு ஏற்றமாதிரி தேர்தல் விஞ்ஞாபனங்களில் எந்தப் புதிய அம்சங்களும் இல்லை. நாட்டின் முக்கியமான முதன்மைப் பிரச்சினைகளான இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, விலைவாசிக் குறைப்பு, சம்பள உயர்வு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்களில் தெளிவான புதிய திட்டங்கள் எதையும் காணவே முடியவில்லை.

ஆனால், தேர்தல் பரப்புரைகள் அமோகமாக நடக்கின்றன. இரண்டு தரப்புக்கும் ஆதரவு தேடும் சார்பாளர்களின் துடிப்பும் ஆரவாரமும் மிகப் பெரியது. ஏதோ ''அதிசய மாற்றங்கள் இந்த நாட்டில் நிகழப்போகின்றன. நீங்கள் ஒரு புள்ளடியை அதற்காகப் போட்டால்போதும்'' என்று சொல்கிறமாதிரி தேர்தல் மும்முரங்களில் சார்பாளர்கள் நின்று கொக்கரிக்கின்றனர்.

இதற்கிடையில் நாம் கவனிக்க வேண்டிய வேடிக்கையும் முக்கியமான சங்கதியும் என்னவெனில், இரண்டு பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவருவதற்கு முன்னரே, தமிழ்க்கட்சிகள் அனைத்தும் இவர்களின் காலில் விழுந்துவிட்டன என்பதே. மக்கள் எவ்வளவோ தெளிவாக இருக்கும்போது, அதற்கு மாறாக இந்தக் கட்சிகள் இரண்டு சப்பாத்துகளையும் தொட்டுக் கும்பிடத் தொடங்கிவிட்டன.



மே 17க்குப் பின்னரான நிலைமைகளை இந்தக் கட்சிகளில் எதுவுமே சரியாகக் கையாளவில்லை. இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை; அரசியல் தீர்வே காணப்படவேண்டும் என சர்வதேச நாடுகளும், இந்தியாவும், சிங்களக் கட்சிகள் அத்தனையும், அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருந்தன. போர் முடிந்தபின்னர் தமிழர்கள் இதை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். இந்தியாவை அடிக்கடி துணைக்கு அழைக்கும் கூட்டமைப்பு இந்த விடயத்தில் எப்போதையும் போல சோம்பேறித்தனமாகவும் விவேகமற்றும் இருந்துள்ளது.



முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுடன் புலம்பெயர் தமிழர்கள் செயலிழந்துவிட்டனர். அதன் பின்னர் அவர்களுடைய பணி நாடு கடந்த தமிழீழம் என்பதுடன் முடிந்துவிட்டது. இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகரும்படி அரசாங்கத்தையோ, சர்வதேச சமூகத்தையோ அவர்கள் தூண்டவில்லை. அதுகுறித்த இராஜந்திர நடவடிக்கைகளில் தமிழர் தரப்பு இறங்கவும் இல்லை. இந்த அக்கறையற்ற தனத்தை மிக வெற்றிகரமாகக் கையாண்டுவிட்டது சிங்களத் தரப்பு என்றபடியால்தான் மஹிந்த ராஜபக்ஷவும் சரத் பொன்சேகாவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் தீர்வு குறித்து எதையும் தெளிவாகச் சொல்லவில்லை. தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாக முன்னரே இவர்களுக்கான ஆதரவைத் தருவதற்கு தமிழ்க் கட்சிகளும் தமிழ் ஊடகங்களும் முனைந்தன.

இதன்படிபார்த்தால், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே தமிழர்கள் மீண்டும் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர். அரசியல் தீர்வு பற்றிப் பேசாமலே தமக்கான ஆதரவை தமிழர் தரப்பிலிருந்து பெற்றிருப்பதால் சிங்களத் தரப்பு மீண்டும் வெற்றியடைந்துவிட்டது.

இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கிய விடயமும் இருக்கிறது. சரத் பொன்சேகாவுக்கான தமது ஆதரவைத் தெரிவிக்கும்போது தமக்கு ரணில் விக்கிரமசிங்கவும் சரத் பொன்சேகாவும் இணைந்து ஒப்பமிட்ட உறுதிச்சான்று ஒன்றைத் தந்துள்ளதாக சக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒரு பத்திரத்தைக் காண்பித்திருந்தார் சம்மந்தன். ஆனால், பின்னர், அப்படியொரு உடன்பாடு செய்யப்படவே இல்லை என அவரே மறுத்திருக்கிறார். இதனை கூட்டமைப்பு எம்.பிமாரின் நாடாளுமன்றக் கொறடாவான துரை ரட்ணசிங்கமும் உறுதிப்படுத்தி அறிவித்திருக்கிறார்.

ஆக, தேர்தலுக்கு முன்னரே இப்படித் தோல்வியை நோக்கிய தில்லுமுல்லுகளுடன் தமிழர் தரப்பு காணப்படுகிறது. சரத்தை விடவும் தான் பரவாயில்லை என்கிறமாதிரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 ஆவது சரத்தின் அடிப் படையில் தமிழ் மக்களின் வாழ்வை உறுதிப்படுத்துவேன் என ஒரு மங்கலான தகவலை வெளியிட்டிருக்கிறார். ஆனால், இதற்கு என்ன உத்தரவாதம்?

ஆக, தமிழர்கள் தோற்கடிக்கப்பட்ட நிலையில்தான் இந்தத் தேர்தலை எதிர்கொள்கின்றனர். என்றாலும், தங்களுடைய விவேகத்தைக் காட்டுவதற்கு மக்கள் தயார். மக்களுக்குள்ள பிரச்சினை தமது பிரச்சினைகளுக்கும் தேவைகளுக்கும் அப்பால் இருக்கும் தமிழ்க் கட்சிகள்தான்.

# படையினருக்கு வந்த சோதனை

குடாநாட்டில் அன்றைக்கு வழமையை விடவும் பரபரப்பு அதிகமாயிருந்தது. இருக்காதா பின்னே? ஒரேநாளில் நான்கு முக்கிய நிகழ்வுகளை அன்றைக்கு யாழ்ப்பாணம் ஒரேயடியாகச் சந்தித்தது. ஜனாதிபதியின் யாழ்.விஜயம், ஐ.தே.க. பிரதித் தலைவர் கருஜெயசூரிய நல்லூரில் மகேஸ்வரன் ஞாபகார்த்த மணிமண்டபத்தைத் திறந்து வைத்தல், தமிழரசுக் கட்சியின் 60ஆவது தேசிய மாநாடு, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளையின் இறுதிச் சடங்கு



என்பன அன்றைக்கு ஒரே மூச்சில் நிகழ்ந்தேறியிருந்தன. இவ்வாறு ஒரேநாளில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நான்கு நிகழ்வுகளின் காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகளும் குறித்த இடங்களில் பன்மடங்கு பலப்படுத்தப் பட்டிருந்தன. மேலதிக படையணிகள் முக்கிய வீதிகள், சந்திகளில் நிறுத்தப் பட்டு பயணிப்போர் நோண்டி நொங் கெடுக்கப்பட்டனர். இதன்போது ஒரு விடயம் கண்ணைக் கொஞ்சம் உறுத்தவே செய்தது. அன்று கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய்கள் எல்லோரினதும் சீருடையில் ஒட்டப்பட்டிருந்த வெள்ளைநிறக் காகிதத் துண்டுதான் அது.

நீங்கள் விமானங்கள் மூலமோ அல்லது கப்பல்கள் மூலமோ பயணித்திருப்பீர்கள். அதன்போதெல்லாம் பயணிப்போரும் உடைமைகளும் தீவிர சோதனைக்கு உள்ளாக நேரிடும். சோதனைகள் முடிவுற்றதும் மேலதிகாரியின் கையொப்பமிடப்பட்ட 'ஸ்ரிக்கர்கள்' பொருள்களின்மீது ஒட்டப்படுவதுண்டு. அதுபோன்றே படையினரின் சீருடையிலும் மேலதிகாரிகளின் கையொப்பங்கள் பொறித்த வெள்ளைத் துண்டுகள் தொங்கிக்கொண்டிருந்தன. மெல்ல விசாரித்துப் பார்த்ததில் சீருடையினர் அனைவரும் விசேட சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், அதனை உறுதிசெய்யும்முகமாகவே அதிகாரிகளின் ஒப்பம் பொறித்த வெள்ளைத் துண்டுகளை அணிந்திருப்பதாகவும் அறியமுடிந்தது.

இதுதவிர, குடாநாட்டில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் பல வீதிகளை 'கொன்வே' குசலம் விசாரித்துக்கொண்டது. பொதுமக்கள் ஒருசில வீதிகளூடாகப் பயணிப்பது தடைசெய்யப்பட்டு, மாற்று வழிகளூடாகப் பயணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். ஜனாதிபதி சென்ற இடங்களில் எல்லாம் சோதனை நடவடிக்கைகள் மிக இறுக்கமாகவே இருந்தன. ''பிரசாரத்துக்காக வருவதற்கே இவ்வளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை நம்மீது சுமத்துகின்ற ஜனாதிபதி, எப்படி உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவார்?'' என்ற கேள்வி அன்று காலையிலேயே பலரின் மனங்களில் உதித்தது. அந்தக் கேள்விக்குப் பதில்போலவே உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது பற்றி வாய் திறவாமலே ஜனாதிபதி கொழும்புக்குப் பறந்து சென்றார்; அது வேறு கதை.

ஜனாதிபதியின் யாழ்.வருகையின் போது என்றுமில்லாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தமைக்கு, இதுநாள் வரையும் எந்தவொரு சோதனை நடவடிக்கைக்கும் உட்பட்டிருக்காத தமிழ் அரசியல் கட்சியொன்றின் உறுப்பினர்கள்கூட துருவித்துருவிச் சோதிக்கப்பட்டதை விடவும் வேறு' நல்ல உதாரணம் காட்டமுடியாது.

**- பிரமன்**

இதுநாள் வரையும் பொதுமக்களைச் சோதனை செய்து மட்டுமே பழக்கப்பட்டிருந்த படைச் சிப்பாய்கள்கூட சோதனைக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்ததும் ஒரு முரண் நகைச்சுவைதான். இவ்வாறான இறுக்கமான சோதனை நடவடிக்கைகள் வெறுமனே ஜனாதிபதியின் பாதுகாப்பை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செய்யப்பட்டிருக்க முடியாது என்றே பலரும் கருதுகின்றனர். இதற்குப் பின்னால் கண்ணுக்குத் தெரியாத பல ராஜதந்திரங்களும் பொதிந்திருப்பதாகவே அவர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான ஜெனரல் சரத்பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது. அதுமட்டுமல்லாமல், ஜனாதிபதி குடாநாட்டுக்கு வருகின்ற அதேநாளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் 60ஆவது தேசிய மாநாட்டையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முதலில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுவதாக இருந்த இந்த மாநாடு, ஜனாதிபதியின் வருகையையொட்டி துரையப்பா விளையாட்டரங்கைச் சூழவுள்ள பகுதிகள் அதிதீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடமாக மாறியமையால், அவசரஅவசரமாக நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்துக்கு மாற்றப்பட்டது. என்னதான் இருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் மக்கள் மத்தியில் எப்போதுமே செல்வாக்கு அதிகம்தான். எனவே மஹிந்த யாழ்.வரும்போது அதிகளவான மக்கள் தமிழ்ரசுக் கட்சியின் மாநாட்டுக்கும் திரளக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. சிலவேளைகளில் ஜனாதிபதியின் உரையைக் கேட்க வருகின்றவர்களை விடவும் தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு அதிகளவானோர் சென்றுவிடுவார்களோ என்ற பயம் மஹிந்த சிந்தனைவாதிகளுக்கு ஏற்பட்டிருக்கலாம். இதனால்தான் பல இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. சோதனை நடவடிக்கைகளுக்கு அஞ்சி, தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் அதிகளவானோர் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று கணக்கும் போடப்பட்டிருக்கலாம். ஆயினும், யதார்த்தத்தைச் சரிவர எடைபோடத் தெரிந்த பலர் தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் மண்டபம் நிறைந்து பிதுங்குமளவுக்குப் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

எப்படியாவது ஜனாதிபதியின் பிரசாரக்கூட்டத்திற்கு துரையப்பா விளையாட்டரங்கை நிறைக்கும் அளவுக்குச் சனத்திரளை ஒன்றுதிரட்ட வேண்டிய தேவை அரசு சார்ந்தோருக்கு இருந்தது. ஏனெனில் இதற்கு முன்னர் தன்னுடைய பிரசார நடவடிக்கைகளுக்காக ஜெனரல் சரத்பொன்சேகா வந்திருந்தபோது அவர் சென்ற இடமெல்லாம் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். அதனைவிடவும் அதிகப்படியான சனக்கூட்டம் வந்தால் தானே ஜனாதிபதிக்கு மரியாதை?



அதற்காக மஹிந்த விசுவாசிகள் ஓடியாடி அலுவல் பார்த்தனர். சோதனை நடவடிக்கைகளின் மத்தியில் பஸ்களில் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் துரையப்பா விளையாட்டரங்குக்குக் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். அப்படியிருந்த போதும்கூட, கூட்டத்துக்கு வந்த சனத்தொகை ஐயாயிரத்தைத் தாண்டவில்லை. ''ஜனாதிபதியின் கூட்டத்துக்கு வந்ததைவிடவும் சில மாதங்களுக்கு முன்னர் இதே துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த 'பூத்திடும் பனந்தோப்பு' இசை நிகழ்ச்சிக்குப் பலமடங்கு மக்கள் வந்திருந்தனர்'' என்று ஜனாதிபதியின் பேச்சைக் கேட்கப்போய் வாழ்க்கையே வெறுத்துப்போனவர்போல வந்த ஒருவர் சொன்னார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளில் காணப்பட்ட இறுக்கத்துக்கு இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது. ஜனாதிபதியின் வருகையின்போது - வடமராட்சியில் - நிகழவிருந்த வேலுப்பிள்ளையின் இறுதிக்கிரியை பற்றிய விளக்கத்துடன் மரண அறிவித்தலொன்று குடாநாட்டு ஊடகங்களில் வெளியாகியிருந்தது. வழமையாக மரண அறிவித்தல்களில் இறந்தவரின் உறவினர்கள், பிள்ளைகள் பற்றிய விவரங்களும் இடம்பெறும். அதில் இறந்தவர்கள் யாராவது இருந்தால் அவரின் பெயருக்கு முன்னால் 'காலஞ்சென்ற' அல்லது 'காலமான' போன்ற அடைமொழிகள் இணைக்கப்படுவதுண்டு. ஆனால், வேலுப்பிள்ளையின் மரண அறிவித்தலில் - அவருடைய பிள்ளைகள் பற்றிய விவரத்தில் - விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயருக்கு முன்னால் இத்தகைய அடைமொழிகள் எதுவும் இடப்படவில்லை. இது பலரின் புருவங்களையும் மேலெழச் செய்தது. விடுதலைப்புலிகளின் தலைவர் இறந்துவிட்டதாக ஒரு பகுதியினரும், இல்லை உயிரோடிருக்கிறார் என இன்னொரு பகுதியினரும் எண்ணிக்கொண்டிருக்கும் காலப்பகுதியில் வெளிவந்த இந்த மரண அறிவித்தல் புலிகளின் தலைவர் உயிரோடுதான் உள்ளார் என்று கூறுவது போலவே அமைந்திருப்பதாக குடாநாட்டு மக்கள் பலரும் பேசிக்கொண்டனர். மீளவும் புலிகளின் தலைவர் உயிரோடிருக்கிறார் என்ற வதந்தி யாழ்ப்பாணம் எங்கும் ஒரே நாளில் பரவுவதற்கு இந்த மரண அறிவித்தல் வழியமைத்தது. இத்தகைய வதந்தியை அசட்டை செய்யாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுத்ததாலேயே ஜனாதிபதி வந்தபோது அவருக்கு என்றுமில்லாத வகையில் படையினரின் பாதுகாப்பு இருந்தது என்றும் ஒருசாரார் கருதுகின்றனர்.

எது எப்படியிருந்தபோதும், அன்றைய நாளைக் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் மறக்க முடியாது. மதுரைக்கு வந்த சோதனை என்று துன்பங்கள் சூழும்போது நமக்கு நாமே சொல்லிக் கொள்வதுண்டு. அதைப்போல அன்றைக்கு படையினருக்கே சோதனை வந்துவிட்டது. அக்குவேறு ஆணிவேறாக மனித உடல்களைப் பரிசோதிக்கும்போது சோதனைக்குள்ளாவோரின் அவஸ்தையையும் மனப்புழுக்கத்தையும் ஒரு நாளைக்கேனும் படையினரையும் அனுபவிக்கச் செய்த மஹிந்தவை என்ன சொல்லிப் பாராட்டுவது?

***



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

# ஏன் இந்த வாழ்வு?

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்



கிளிநொச்சியில் எனது கிராமம் உண்மையிலே அழகியது. எனது கிராமத்தை பார்த்தால் அங்கு வாழ வேண்டும் என்று ஆசை வரும். அப்படியான என் கிராமத்தில் நான் ஆசையோடும் மிகவும் மகிழ்ச்சியோடும் வாழ்ந்து வந்தேன். எனக்கு சொந்தங்கள் அதிகம். பழகியவர்கள் அதிலும் அதிகம். நான் எனது குடும்பத்தை எந்த பொருளாதாரப் பிரச்சினையும் இல்லாமல் வைத்திருந்தேன். எனக்கு பிள்ளைகள் ஐந்து. அவர்களை, நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று பெரும் முயற்சி செய்து படிக்க வைத்துக் கொண்டிருந்தேன். எனது பிள்ளைகளின் படிப்பை பார்த்து நான் பெருமைப்பட்ட நாட்கள் அதிகம்.

இப்படி இருக்கும் போதுதான் அன்று ஒரு நாள் இரவு 9 மணி இருக்கும். நான் எனது முற்றத்தில் பக்கத்து வீட்டு அண்ணையுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். அப்போது எல்லாத் திசைகளில் இருந்தும் எறிகணைகள் விழத்தொடங்கின. எனது கிராமமே எரிந்தது. எங்கும் அவல ஓலம். எல்லாக் கடவுள்களையும் கும்பிட்டார்கள் மக்கள். ஆனால் இறைவனை எங்கே தேடுவது? என் ஊரில் கோவில் கூட எறிகணைக்குத் தப்பவில்லை. எனது ஊரில் அதிகமானவர்கள் இறந்தார்கள். என் வீட்டுப் பக்கத்து வீட்டார் குடும்பமே அந்தக் கொடுமையின் போது இறந்துவிட்டது. எம்மோடு உயிராகப் பழகியவர்கள் அவர்கள். என்ன செய்வது? யாரிடம் சொல்வது? அந்தக் குடும்பத்தில் அப்பாவும் மகளும் தப்பினார்கள். மகளுக்கு கையில்லை. அவளைப் பார்க்க பெரும் வேதனையாக இருந்தது. இறந்தவர்களை அந்த இடத்திலேயே புதைத்தோம். பின்பு நான் அவரிடம் சொன்னேன். ''இனி இங்கு இருக்க முடியாது. வேறு இடம் போவோம்'' என்றேன். அதற்கு அவர் ''இனி நான் ஏன் வர வேண்டும்?'' என்று கேட்டார். ''வாங்கோ அண்ணா அப்படிச் சொல்லாதீங்கள் வாங்கோ'' என்று அவரை அழைத்தேன். அவர் ''நான் வைத்தியசாலைக்கு மகளைக் கூட்டிக் கொண்டு போகப்போறேன்'' என்றார்.

நான் உடனே சில பொருட்களை எடுத்துக் கொண்டு குடும்பத்துடன் தர்மபுரம் போனேன். அங்கும் சில நேரங்களில் எறிகணைகள் வந்து விழும். பலர் இறப்பார்கள். 'எமக்கு எப்போது சாவு' என்று நினைத்து ஒவ்வொரு நாளும் செத்துக் கொண்டிருந்தோம். அங்கு சிறு கொட்டில் போட்டு சில நாட்கள் இருந்தோம். அப்படி இருக்கும் போது ஒரு நாள் கடுமையான மழை, காற்று. எமது கொட்டில் காற்றில் அடித்துச் செல்லப்பட்டது. எனது பிள்ளைகள் மழையில் நனைந்த கோழிகள் போல் ஒதுங்கினார்கள். இதை எல்லாம் பார்க்கும் போது ஏன் நான் உயிருடன் இருக்க வேண்டும் என்று நினைத்து எனக்குள் அழுதேன். காணிக்கார அண்ணை உடனே வந்து தனது வீட்டுக்குள் வாங்கோ என்று கூட்டிக் கொண்டு போனார். அவரின் வீட்டு அறையில் சில நாள் இருந்தோம். அப்படி இருக்கும் போது அவரின் பத்து வயது மகள் எனது பிள்ளைகளோடு நல்ல பாசமாகப் பழகினாள். ஒரு நாள் எங்கிருந்தோ வந்த துப்பாக்கி ரவை அவளின் நெஞ்சைத் துளைத்தது. அந்த வீட்டில் ஒரே ஓலம்.

அதன்பின்பு எல்லோரும் தேவிபுரம் சென்றோம். அன்று கொட்டில் போடுவதற்கு இடம் கிடைக்கவில்லை. அதனால் வீதியோரத்தில் இருந்தோம். அப்போது 2.30 மணி அளவில் நான்கு திசைகளிலும் இருந்து எறிகணைகள் எம்மை நோக்கி வந்தன. 6 மணி மட்டும் ஓயவில்லை. என் 5 பிள்ளைகளையும் காப்பாற்ற நான் பட்டபாடு இறைவனுக்குத் தான் தெரியும். ஒரு உழவு இயந்திரப் பெட்டிதான் எம்மைக் காப்பாற்றியது. எல்லா இடமும் புகை மண்டலம். அந்தத் தத்குதலில் என் நான்கு வயது செல்லக் குட்டியை இழந்தேன். அவனுக்கு எறிகணை படவில்லை. பிஞ்சுக்குட்டி அதிர்வில்தான் இறந்தது. என்ன கொடுமை இறைவா ஏன் இந்த சோதனை? நாம் என்ன பாவம் செய்தோம்? என்று எமக்குள் அழுதோம்.

அங்கும் இருக்க முடியாது எனது மகனை வீதி ஓரத்தில் புதைத்து விட்டு உடன் இடமாறினோம். என் மனைவி கடுமையாக இயலாத நிலையை அடைந்தாள். நானும் அழுதால் என் மனைவி பிள்ளைகளை எப்படி சமாதானப்படுத்துவது என்று நினைத்து என் மனதை திடப்படுத்திக்கொண்டேன். மீண்டும் மாத்தளன் போனோம். அங்கு பாதுகாப்பு வலயம் என்றார்கள். என் கையில் ஒரு ரூபாய் கூட இல்லை. என் பிள்ளைகளின் முகங்கள் பசியினால் வாடியிருந்தன. தண்ணீர் எடுக்க போனால் சிலமணித்தியாலங்கள் போய்விடும்.

ஓட்டைத் தறப்பாளை போட்டு என் குடும்பத்தை ஒரு இடத்தில் இருத்தினேன். எப்படி நான் இவர்களுக்கு சாப்பாடு கொடுப்பேன் என்று எனக்குள் அழுதேன். விறகு என்றாலும் எடுத்து விற்போம் என்று போனேன். அன்றே எறிகணை விழுந்து என் காலில் காயம் ஏற்பட்டது. அங்கு நின்றவர்கள் மருந்து கட்டிவிட்டு என்னை என் குடும்பத்திடம் கொண்டு வந்து சேர்த்தார்கள். வீட்டில் சாப்பாட்டுக்கு கடும் கஷ்டம். என்னதான் செய்வதென்று தெரியவேயில்லை. சில நாட்களில் அங்கும் எறிகணைகள் விழுத்தொடங்கின.

எனது தறப்பாள் அருகில் இளம் குடும்பம் ஒன்று இருந்தது. அவர்களுக்கு ஒரு வயதில் ஒரு மகன் இருந்தான். எல்லா இடங்களிலும் சின்னச் சின்ன கிடங்குகளை எல்லோரும் வெட்டியிருந்தார்கள். எறிகணைகள் விழத்தொடங்கின. தனது மகனைத் தூக்கிக் கொண்டு அந்தப் பெண் ஓடினாள். குழந்தை தவறி கிடங்குக்குள் விழுந்து விட்டது. இரவில் தெரியவில்லை. எல்லோரும் தேடியும் காணவில்லை. அந்தப் பெண் த்ன் பிள்ளையைக் காணாது தவித்தாள். அடுத்த நாள்தான் குழந்தையை எடுத்தோம். இப்படி இருக்க என் காயம் மேலும் பெரிதாகி விட்டது. மருந்து கட்டப் போனேன். மருத்துவமனை யில் மருந்து இல்லை என்றார்கள். உப்புத் தண்ணீரால் கழுவி விட்டார்கள். நான் வைத்தியசாலையில் நிற்கும் போது கர்ப்பிணியான ஒரு பெண் வந்தாள். அந்த நேரம் பார்த்து ஒரு துப்பாக்கி ரவை அவளின் வயிற்றில் பட்டது. உடனே அந்த பெண்ணை வைத்தியசாலைக்கு உள்ளே எடுத்துச் சென்றார்கள். அடுத்த நாள் கேள்விப்பட்டேன், அந்த பெண்ணின் வயிற்றில் இருந்த சிசு இறந்து விட்டதென்று. அந்த குழந்தைக்கு என்ன தெரியும்? ஏன் இந்தக் கொடுமை? இது தான் உலக நியதியா?

இப்படியே சில நாட்கள் கழிந்தன. துப்பாக்கிச் சூட்டுக்கும், எறிகணைகளுக்கும் குறைவேயில்லை. சாப்பாட்டுக்கும், தண்ணீருக்கும் தட்டுப்பாடு... அங்கு இருந்த ஒவ்வொரு மனிதனும் உயிரைக் காப்பாற்றப் பட்டபாட்டை, எவராலும் எழுதவும் முடியாது, சொல்லவும் முடியாது. ஆனால் எந்த மனித பிறவிக்கும் இப்படி வரவே கூடாது.

எவராலும் ஒன்றும் சொல்ல முடியாது. என் குடும்பம் வறுமையால் வாடியது. ஒரு நேரம் கூட சாப்பாடு இல்லை. என்னதான் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. என் காயம் ஆறவே இல்லை. கொஞ்சத் தூரம்தான் நடக்கலாம். எப்படியோ சாப்பாடு தேடவேண்டும். ஒருவர் சொன்னார், ஒரு இடத்தில் கஞ்சி கொடுப்பதாக. நான் உடனே என் மகனையும் கூட்டிக்கொண்டு அங்கு போனேன். அங்கு நீண்ட வரிசையில் பல மணி நேரம் நின்று கஞ்சி வாங்கிக் கொண்டு வரும் பொழுது எறிகணை ஒன்று கூவிக்கொண்டு வந்தது. அதற்குப் பயந்து படுத்தபோது கஞ்சி நிலத்தில் முழுதும் கொட்டிவிட்டது. என் மகன் வாங்கிய கஞ்சி மட்டும் தான் மிஞ்சியது.

அடுத்தநாள் கஞ்சி வாங்கப் போன போதுதான் கஞ்சிக் கொட்டிலுக்கு அருகாமையில் அந்த பக்கத்து வீட்டுக் காரரைக் கண்டேன். நான் கதைத்தேன். அவர் கதைக்கவில்லை. அவர் அருகில் இருந்தவர் சொன்னார், அவரின் குடும்பமே அழிந்ததால் அவர் சித்தசுவாதீனமற்றவராகி விட்டார் என்று. அவரின் காயப்பட்ட மகளும் இறந்துவிட்டதாம்.

கஞ்சியை நம்பியே என் குடும்பம் வாழ்ந்து கொண்டிருந்து. எனக்கு முன் என் மகன் கஞ்சி வாங்கப் போய்விடுவான். அது பசியின் கொடுமை. அன்றும் வழமைபோல் கஞ்சி வாங்கப் போனேன். ஒரு கணத்தில் கஞ்சிக் கொட்டில் எங்கே போனது என்று தெரியாமல், அதனையும் எறிகணை பதம் பார்த்திருந்தது. அதில் பலர் இறந்தார்கள். என் மகனையும் அதில் இழந்தேன். இந்தக் கொடுமைகளைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. தினம் தினம் என் உயிரான கண்மணிகளை நினைத்து நினைத்து அழிந்து கொண்டிருக்கின்றேன்.

யோ. சி. கல்விச்செல்வன்.

# 55 வயதிலும் தொடரும் மாதவிலக்கு



**கேள்வி :** ஆண். வயது 50. எனது இரண்டு சிறுநீரகங்களிலும் கற்கள் உள்ளன. எனது இடதுபுற சிறுநீரகத்தில் - 'கல் உடைக்கும்' சிகிச்சை செய்து கற்கள் அகற்றப்பட்டன. நாலு மாதங்களுக்கு முன்னர் - எனக்கு மாரடைப்பு ஏற்பட்டு - இதயக் குழாய்களில் அடைப்பு நீக்கப்பட்டு இப்பொழுது அதற்குரிய மருந்துகளை உபயோகித்து வருகின்றேன். அதன்பின்னர் எனது இதயநோய் சிகிச்சை நிபுணர் விசேட இதய பரிசோதனை செய்து எனது இதய தசைகள் திருப்திகரமாக இருப்பதால் - வலதுபக்க சிறுநீரக சிகிச்சை செய்யலாம் என பரிந்துரைத்துள்ளார். எனது வலது சிறுநீரகத்தில் இரண்டு பெரிய - 20mm மற்றும் 30mm அளவில் கற்கள் உள்ளன. வயிற்றைக் கீறித்தான் கற்களை அகற்றவேண்டும் என்று எனது சத்திரசிகிச்சை வைத்தியர் கூறுகின்றார். இருதய நோயாளியான எனக்கு இந்த சிகிச்சைமுறை ஏற்றதா? உங்கள் கருத்து என்ன?

**பதில் :** தற்பொழுது இருதய நோயாளிக்கோ அல்லது சாதாரண மனிதருக்கோ, வயிற்றைக் கீறி (Open Surgery) சத்திரசிகிச்சை செய்வது நடைமுறையில் வழக்கமாக இல்லை. கற்களை சிறுதுண்டாக உடைத்து - வெளியேற்றும் - Lithotropy என்ற சிகிச்சைமுறையே கையாளப்படுகிறது. இந்த முறையில் எதுவித அறுவைச்சிகிச்சையும் செய்யப்படுவதில்லை. நீங்கள் கூறிய 'கல் உடைக்கும்' சிகிச்சை இந்த வகைதான். இந்த முறையில் வலி குறைவு, மருத்துவ நிலையத்தில் தங்கியிருந்து செய்யவேண்டிய அவசியமும் இல்லை. நவீன வைத்திய சாலைகளில் இந்த முறை வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இருதய நோயாளியான உங்களுக்கு இந்த முறை ஏற்றது என்பது எமது கருத்தாகும்.

**கேள்வி :** பெண். வயது 55. எனது மாதவிலக்கு இன்னும் நிற்கவில்லை. கிரமமாக வந்துகொண்டிருக்கின்றது. எனக்கு வேறு ஒரு நோயோ, பிரச்சினையோ எதுவுமில்லை. இது சாதாரணமானதா?

**பதில் :** சாதாரணமாக நாற்பது வயதுக்குப் பின்னர் எந்த நேரத்திலும் மாதவிலக்கு நின்று Menopause என்கின்ற பருவம் ஏற்படுவதுண்டு. உங்களுக்கு 55 வயதாகியும் மாதவிலக்கு நிற்கவில்லை என்பது கவனிக்கவேண்டிய விஷயம். ஸ்கேன் பரிசோதனை - முக்கியமாக Trans Vaginal Scan என்கின்ற யோனி வழியாகச் செய்யப்படும் ஸ்கேன் பரிசோதனை, Pap Smear என்கின்ற கருப்பை வாசல் பரிசோதனை என்பவை நடத்தப்படவேண்டும். மேலும், வசதிப்பட்டால் வயிற்று CT ஸ்கேன் பரிசோதனையும் இங்கு தேவைப்படுகிறது. இவை யாவற்றிலும் எதுவித பிரச்சினையும் கண்டறியப்படாவிட்டால் - சஞ்சலப்படத் தேவையில்லை. என்றாலும், ஆறு மாதத்துக்கு ஒரு தடவை ஒரு பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனை பெறுவதும் உகந்த விஷயம். அநேகமாக உங்கள் பிரச்சினைக்கு ஹோர்மோன்களே காரணமாக இருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம். Endocrinologist என்கின்ற விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெறுவதும் நல்லது.

**கேள்வி :** பன்றிக் காய்ச்சல் ஏற்படாமல் 'பத்து நாட்களுக்கு தடுப்பு முறையில் Oseltamivir என்கின்ற மாத்திரை உபயோகித்தேன். நான் இந்தியாவில் இருக்கும்போது எனக்கு ஒரு வைத்தியர் இதனைத் தந்தார். இப்பொழுது நான் தொழில் நிமித்தம் ஆபிரிக்க தேசம் செல்லவுள்ளேன். நான் போகும் இடத்தில் இந்தப் பன்றிக்காய்ச்சல் பரவியுள்ளதாக அறிந்தேன். நான் எடுத்த தடுப்பு மருந்து எனக்கு இந்தப் புதிய இடத்தில் பாதுகாப்பு தருமா?

**பதில் :** அநேகமாக நீங்கள் உபயோகித்த மருந்து - பன்றிக்காய்ச் சலால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் பழகும்போது நோய் வராமல் இருக்க உபயோகிக்கும் தடுப்புமுறை. இதனை உபயோகிக்கும்போது - பன்றிக்காய்ச்சல் வராது என்று நிச்சயம் கூறமுடியாது. அப்படி ஏற்பட்டாலும், இந்த மருந்தை உபயோகித்தவருக்கு பன்றிக்காய்ச்சலால் பெரும் பாதிப்பு ஏற்படாது என்பது மட்டுமே உண்மை. மேலும், பன்றிக் காய்ச்சல் தடுப்புக்கு இதுவரை எதுவித தடுப்பூசியோ, தடுப்பு மருந்தோ கண்டறியப்படவில்லை. காய்ச்சல் வைரஸ் தொற்றினால் அதன் உக்கிரத்தை பெருமளவில் தவிர்க்கவே இந்த மருந்து உபயோகிக்கப்படுகிறது என்பதே அடிப்படை மருத்துவ சிந்தனை.

**கேள்வி :** எனது தந்தை, வயது 60. அவரது சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்து விட்டன. கழிவு அகற்றும் சிகிச்சைக்கு (Dialysis) வாரம் இருதடவை சென்று வருகின்றார். அவருடைய மருத்துவர்கள் அவருக்குரிய உணவு முறைகளைச் சொன்னாலும் - சரியான விளக்கம் இல்லாமல் நாம் குழம்பிப் போயிருக்கின்றோம். எமது தந்தைக்குரிய உணவு முறைகள் பற்றி விளக்கம் தர முடியுமா?

> **இலவச மருத்துவ ஆலோசனைகளை**
> **'சுடர் ஒளி'** மூலம் வழங்குகிறார்
> **டாக்டர்**
> **எஸ். அருள்ராமலிங்கம்**
> நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
> **இலவச மருத்துவ ஆலோசனை**
> **'சுடர் ஒளி'**
> 85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை, கொழும்பு - 14.

**பதில் :** உங்கள் தந்தைக்கு சிறுநீரக செயலிழப்பு தவிர வேறு நோய்கள் ஏதாவது உள்ளனவா என்பது பற்றி எதுவித விளக்கமும் நீங்கள் தரவில்லை. ஏனென்றால் - சிறுநீரக செயலிழப்பு சில வேளைகளில் - நீரிழிவு, இரத்த அழுத்த நோய்களால் ஏற்படுவதுண்டு. அப்படியான வேளைகளில் - உணவு முறைகளில் நீரிழிவு, இரத்த அழுத்தத்துக்கு ஏற்றவாறு சில மாற்றங்களைச் செய்யவேண்டும். பொதுவாக இலங்கையில் சிறுநீரக செயலிழப்பு ஏற்படுவதற்கு எமது நாட்டில் உள்ள நீர் வளங்களில் கடின உலோக தாதுக்கள் நிறைந்திருப்பதே காரணமாகச் சொல்லப்படுகிறது. எனினும் பொதுவாக சிறுநீரக செயலிழப்பு நோயாளிகளின் உணவு முறையை உங்கள் தேவைக்குத் தருகிறேன். இதனை அப்படியே கைக்கொள்ளாமல் - அவருக்கு இருக்கும் நோய்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க உங்கள் குடும்ப வைத்தியர் அல்லது உணவியல் நிபுணர் என்கின்ற Clinical Nutritionist இன் உதவியையும் பெறவும்.

பொதுவாகவே சிறுநீரக நோயாளிகள் மாச்சத்துள்ள உணவுகளை நிறையச் சேர்த்துக்கொள்ளலாம். (முன்னர் கூறியபடி, நீரிழிவு நோயாளிகள் இதற்கு விதிவிலக்கு. வைத்தியரின் ஆலோசனைகளை இங்கு பெறவும்) அவர்களின் உணவில் புரதம் 20 கிராம் அளவு இருக்க வேண்டும். இந்தப் புரதம் **First Class Protein** என்கின்ற முதல் தரமான புரதமாக இருப்பது அவசியம். இந்த வகைப் புரதவகைகளில் - மாமிச உணவுகள், பால், பால்கட்டி மற்றும் பருப்பு வகைகள் உள்ளடங்கும். கொழுப்புக் குறைந்த உணவுவகைகள் அவசியம். நன்றாகச் சமைக்கப்பட்ட சகல காய்கறி வகைகள், **Nuts** என்கின்ற பருப்பு வகைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். தினமும் ஒரு பழவகை அல்லது சலாட் (**Salad**) வகை உணவில் கட்டாயம் இருக்க வேண்டும். குளிர் பானங்கள், சாக்லேட் வகைகள், சாக்லேட் பானங்கள், இளநீர் மற்றும் உலர்ந்த பழவகைகள் (பேரீந்து, திராட்சை) என்பன கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியவை. சாதாரணமாக காப்பி, தேநீர் - அளவோடு பருகலாம். நீரிழிவு நோயில்லாவிடில் - இனிப்புகள் உபயோகிக்கலாம். பொட்டாசியம் சத்துள்ள - தோடம்பழம், இளநீர் என்பன முற்றாகவே கூடாது. **Dialysis**க்கு போகும் முதல் நாள் - ஓரளவு தவிர்க்கப்பட்ட உணவுகளை உண்பதால் கேடில்லை. **Dialysis** இன்போது இவற்றின் விளைவுகள் அகற்றப்படும்.

**கேள்வி :** ஆண், வயது 19. எனக்கு சிறுநீர் கழிக்கும்போது ஆண் உறுப்பில் வலி ஏற்படுகிறது. மருத்துவர் ஒருவரிடம் காட்டியபோது நான் தண்ணீர் அருந்துவது குறைவு என்பதனால் இப்படி ஏற்படுகிறது என்று கூறினார். நான் அதிகமாக சுய இன்பம் காண்பதுண்டு. இந்த வலி - எதனால் ஏற்படுகிறது? சுய இன்பம் காண்பதும் காரணமாக இருக்குமா?

**பதில் :** சிறுநீர் கழிக்கும்போது வலி ஏற்படுவதற்கு முக்கிய காரணம் - சிறுநீர் தொற்று. எனவே முதலில் சிறுநீர்ப் பரிசோதனை ஒன்று உடனே செய்ய வேண்டும். அதில் கோளாறு கண்டறியப்பட்டால் - மருத்துவரிடம் ஆலோசனை பெற்று - தகுந்த **Anti-Biotics** மாத்திரைகள் எடுக்கப்பட வேண்டும். சிறுநீர்ப் பரிசோதனையில் எதுவித கோளாறும் இல்லாவிடில் - அதிகளவில் நீர் மற்றும் பானங்கள் எடுக்கப்படாவிடினும் இப்படி ஏற்பட வழியுண்டு. அதிகளவில் நீர்-பானங்கள் அருந்தாவிடில் சிறுநீர், அமிலத் தன்மை ஆவதினாலேயே இவ்வாறு ஏற்படுகிறது. தினமும் ஒரு சாதாரண மனிதன் சராசரி 2.5-3 லீட்டர் நீர் பகலில் அருந்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. சுய இன்பம் பொதுவாக இப்படியான வலியை ஏற்படுத்தாது. ஆனால் அதிகளவில் தினமும் சுய இன்பம் காண்பவர்களுக்கு, Prostate என்கிற சுரப்பி அழற்சியுற்று - இப்படியான வலியை தருவதுண்டு. மேலும் சிறுநீரில் கல்சியம் ஒக்ஸலேட் படிமங்கள் (**Calcium Oxalate Crystals**) இருப்பின் - சிறுநீர் போகும்போது வலியுண்டாகும். தக்காளி, முள்ளங்கி போன்ற காய்கறிகளை அதிகளவில் உணவில் சேர்ப்பதால் - இந்த ஒக்ஸலேட் படிமங்கள் அதிகமாக உருவாகுவதுண்டு. ஒரு சிறிய - ருசிகரமான விஷயத்தை எனது அனுபவத்தில் இங்கு கூறுவது நல்லது என்று எண்ணுகின்றேன். எனது மருத்துவ நிலையத்திற்கு சிறுநீர் எரிவு என்று ஒரு 10 வயது சிறுவனைக் கொண்டு வந்தார்கள். சிறுநீர் தொற்று இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று சிறுநீர் பரிசோதனை செய்தபோது, சிறுநீர் தொற்று எதுவுமில்லை. ஆனால் நிறைய கல்சியம் ஒக்ஸலேட் படிமங்கள் இருந்தன. சிறுவனின் உணவு முறையில் தக்காளி மற்றும் கற்கள் உருவாகும் உணவு வகைகள் எதுவும் இருக்கவில்லை. எப்படி இவ்வாறு சிறு படிமங்கள் ஏற்பட்டன என்று குழம்பிய நிலையில் - சிறுவனின் தாயார் - சிறுவன் தக்காளி சோஸ் நிறைய உபயோகிக்கும் தகவலைத் தந்தார். எனவே நேரடியாக தக்காளி உபயோகிக் காவிடினும் தக்காளி சோஸ் போன்ற பதார்த்தங்களை நாம் அறியாமலேயே உபயோகிப்பதும் - இப்படிச் சிறுநீர் எரிவுக்குக் காரணம் என்பதைக் கூறவே இச் சம்பவத்தைக் குறிப்பிட்டேன்.

**கேள்வி :** வயது 20 - பெண். திருமணமாகவில்லை, ஆனால் எனது மார்பகத்திலிருந்து பால் சுரக்கின்றது. இது ஏதாவது நோயா?

**பதில் :** கருத்தரிக்காமல் மார்பகத்தி லிருந்து பால் சுரப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. சாதாரணமாக பால் சுரப்பதற்கு மூளையில் உள்ள கபச்சுரப்பியிலிருந்து சுரக்கும் **Prolactin** என்கின்ற ஹோர்மோனே காரணம். இந்தச் சுரப்பு சாதாரணமாக பெண் கர்ப்பமானதும் தானாகவே சுரக்கத் தொடங்கும். என்றாலும் **Stress** என்கின்ற மன இறுக்கம், குறைவான தைராய்ட் ஹார்மோன் சுரப்புநிலை, கபச்சுரப்பி (**Pithitary Gland**) இல் ஏற்படும் வளர்ச்சி, அதிகளவில் முலைக்காம்புகள் கையாளப்படுதல் என்பவை பால் சுரப்புக்கு முக்கிய காரணங்களாகும். **Endocrinologist** என்கின்ற விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறுதல் இங்கு அவசியமாகிறது.

***

# திருநங்கைத் திருவிழா!

ஆண் உடம்பும் பெண் மனதும் அல்லது பெண் உடம்பும் ஆண் மனதுமாக அலைபாயும் திருநங்கைகளின் தமிழ்நாட்டுச் சங்கமம், கூவாகம் திருவிழா.



திருநங்கைகளுக்கு வருடம் ஒருமுறை வரும் இந்தக் கூத்தாண்டவர் கோயில் விழாதான் தீபாவளி, பொங்கல் எல்லாமே. ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் நடக்கும் இந்த விழாவுக்காக நாடு முழுவதும் இருந்து ஆயிரக் கணக்கில் குவிகிறார்கள். மிஸ் கூவாகம் போட்டிகளும் நடக்கின்றன. விழுப்புரம் அருகே இருக்கும் இந்த கூவாகத்துக்கு எதற்கு திரு நங்கைகள் வர வேண்டும்?

மகாபாரதத்தில் அர்ஜுனனுக்கும், நாக கன்னிகைக்கும் ஒரு ராஜகுமாரன் பிறக்கிறான். அவன் ஒரு திருநங்கை. பாரதப் போரில் தங்களது வெற்றியை நிலை நிறுத்த உயிர்பலி தர நினைக்கும் பாண்டவர்கள், இந்த ராஜகுமாரனைப் பலியிட முடிவெடுக்கிறார்கள். அந்த ராஜகுமாரனின் இறுதி ஆசையோ 'திருமணம்'. அவனை மணம் முடிக்க யாருமே முன் வராத நிலையில், பாண்டவர்களின் வழிகாட்டியான கிருஷ்ணரே 'மோகினி'யாக பெண் அவதாரம் பூண்டு ராஜகுமாரனை ஓர் இரவு நேரத்தில் மணக்கிறார். மறுநாள் காலையில் ராஜகுமாரன் பலியிடப்பட, மோகினியாகிய கிருஷ்ணர் தனது கை வளையல்களை உடைத்தெறிந்து, தாலியையும் அறுத்துக் கொள்கிறார். ஆணும் இல்லாமல், பெண்ணும் இல்லாமல் பிறந்துவிட்ட திருநங்கைகள் இந்தச் சடங்கை செய்யத்தான் கூவாகத்துக்கு வருகின்றனர்.

ஒரு திருமணப் பெண்ணுக்கான மேக்- அப் உடன் வருகிறார்கள் திருநங்கைகள். பூசாரி தாலி கட்டிவிட, அன்றைய இரவு முழுவதும் தன்னைத் திருமணம் முடிந்த ஒரு பெண் போலவே உணர்கின்றனர். காலையில் தாலியை அறுத்து எறியும் விழா. உச்சகட்ட அழுகை, கதறல்களுக்கு இடையே நடக்கும் இந்த நிகழ்வுதான் கூவாகம் விழாவின் உச்சக்கட்டம்.

கணவனைப் பறிகொடுத்த ஒரு பெண்ணின் ஒப்பாரிக்கு ஈடாகத் திருநங்கைகள் ஒப்பாரி வைத்து அழ, அவர்கள் அணிந்திருந்த தாலி அறுத்து வீசப்படும். அனைத்துவித உறவுகளாலும் துரத்தி ஒதுக்கப்படும் திருநங்கைகள், இந்தத் திருவிழாவின் மூலம் ஒரு புதிய உறவு தங்களுக்குக் கிடைப்பதாக உணர்கின்றனர். பல வருடங்களாக வெறும் சடங்காக நடந்த இந்தத் திருவிழா, இப்போது மிஸ்.கூவாகம் போட்டி, எ.ஐ.வி.கவுன்சலிங் என்று வேறொரு முகம்கொண்டு உள்ளது!

# ராதாவின் மகள்...



சிம்புவுக்கு ஜோடியாக கார்த்திகா என்கிற புதுமுகம் ஜோடி சேர்கிறார். இவர் பழம்பெரும் நடிகையான ராதாவின் மகள். இவர் முதலில் மலையாளப் படமொன்றில் அறிமுகமாகியுள்ளார்.

# ஜக்கி சுயசரிதை

தனது வாழ்க்கை வரலாற்றை 'ஜ' ம் ஜாக்கிசான்; தி மியூசிக்கல்' என்கின்ற பெயரில் மியூசிக் ஆல்பமாகத் தயாரிக்க இருக்கிறார் ஜாக்கிசான்! அமெரிக்க இசையின் தீவிர ரசிகனான ஜக்கிசான், இந்த ஆல்பத்தில் சொந்தமாக இசையமைக்கவும் உள்ளார்.




# ஹிந்தியில் பத்மபிரியா

சத்தம் இல்லாமல் ஒரு படத்தில் நடித்திருக்கிறார் பத்மபிரியா. படத்தின் பெயர் 'ஸ்ட்ரைக்கர்'. படத்தில் கேரம் பிளேயராக சித்தாத் நடிக்க, சாராயம் விற்கும் பெண்ணாக பத்மபிரியா நடித்துள்ளார். இவரின் நடிப்புக்கு விருது கிடைக்கலாம் என்கிறார்கள்.



# தர்ம அடி

தண்ணீர் இல்லாத காடு..ம், அந்த மாதிரி பஸ் வசதி இல்லாத ஊர். அந்த ஊருக்கு ஒரே ஒரு பஸ். அதுவும் அந்த வழியில், இரண்டு கிலோமீற்றர் தொலைவில் ஒரு நாளைக்கு இரண்டு தடவை வந்து போகும்.

அந்த ஊருக்கு எனக்கு இடமாற்றம். கையில் இரண்டு பைகள். ஒரு சூட்கேஸ், ஒரு தலையணையுடன் வந்திறங்கினேன்.

மணி காலை 8.00; பசி வேறு. இவ்வளவையும் தூக்கிக் கொண்டு அந்த ஊருக்கு இரண்டு கிலோமீற்றர் தூரம் வேறு நடக்க வேண்டும். அம்மா எனக்கு ஆசையோடு கட்டிக் கொடுத்த தோசைப் பார்சல் வேறு என்னைப் பார்த்துச் சிரித்தது. விதியை நொந்து கொண்டு நடந்தேன்.



ஒருநூறு மீற்றர் தூரம் நடந்திருப்பேன். ஒருவன் தலை தெறிக்க கையில் வேட்டியைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தான். அவனைப் பின் தொடர்ந்து 10 அடி தொலைவில் இரண்டு பொலிஸ் காரர்கள் துரத்தியபடி, அதன் பின்னால் நான்கைந்து ஆட்கள், அதன் பின் புதுமணத் தம்பதிகள் ஆகியோர் ஓடி வந்தனர்.

'மறியடா.... பிடியடா....' என்ற சத்தத்துடன்.

நான் புரிந்து கொண்டேன். திருடன் புதுப்பெண்ணின் நகையை அறுத்துக் கொண்டு ஓடி வாறான். அவனை அனைவரும் விரட்டி வாறாங்கள் என்று... நான் சுதாகரித்துக் கொண்டு, என்னுடைய இத்தியாதிகளை தரையில் மொத்தென்று போட்டு விட்டு, அவனை மறிக்கத் தயாராகினேன்.

நான் தயாரானதற்கும், அவன் என்னைக் கடப்பதற்கும் சரியாக இருந்தது. அவனை லபக் என்று பிடித்துக் கொண்டேன். அவன், திமிறினான். ''என்னை விடுடா'' என்று கத்தினான். நான் விடுவதாக இல்லை.

நான் வெற்றிப் பெருமிதத்துடன் அவன் கைகளை பின்னால் இறுக்கியபடி நிமிர்ந்தேன். அதிர்ச்சி...!

பின்னால் வந்த பொலிஸ்காரர்களும், அவர்கள் பின்னால் வந்தவர்களும், இதைக் கண்டு கொள்ளாமல் எங்களை கடந்து ஓடினார்கள்.... விழித்தேன்!

அவனும் சிறிது போராட்டத்துக்குப் பின் என்னிடம் இருந்து திமிறி விடுபட்டு சட்டை செய்யாமல் ஓடினான். நான் ஆச்சரியமாகப் பார்த்தேன்.

நான் வந்து இறங்கிய பஸ் திரும்பிக் கொண்டு இருந்தது. அனைவரும் ஓடி ஏறி விட்டார்கள். இவன் ஓடுவதற்குள் பஸ் சென்று விட்டது. அவன் ஆத்திரத்துடன் திரும்பினான்.

அப்புறம் என்ன? மீண்டும் தலைப்பை பாருங்கள்.




# பெண்களுக்கு கண்ணீர்... ஆண்களுக்கு?

பெண்ணின் கண்ணீர், வலிமையான ஆயுதம் அல்ல. பலவீனம்! கல்லுக்குள் இருக்கும் ஈரம் போல ஆண்களின் கனிவுதான் அவர்களது வலிமையான ஆயுதம். பலருடைய கண்ணோட்டத்தை மாற்றிவிட இது உதவுகிறது. முரட்டுத் தனமும், அதிகாரமும் கொண்டு சாதிக்க முடியாததை ஓர் ஆண் தன் கனிவினால் சாதித்துவிடுகிறான்.

ஒரு கதை நினைவுக்கு வருகிறது. பகையரசன் படையெடுத்து ஒரு நாட்டைக் கைப்பற்றுகிறான். அந்நாடும், செல்வமும் அவன் கையில்! அந்நாட்டு இளவரசியை அழைத்துவரச் செய்கிறான். அவள் வெறுப்பின் மிகுதியால் அவன் முகத்தைக் கூடப் பார்ப்பதில்லை.

''இளவரசியாரே! அடிமையாகிவிட்ட உங்களைப் பார்த்தால் வருத்தமாக இருக்கிறது. நாட்டைக்கூடத் திருப்பித் தரலாம் என்று தோன்றுகிறது...''

அப்போது அவள் கோபத் துடன், ''உங்கள் அனுதாபம் தேவை யில்லை. ம்ம்.. எங்களைச் சிறையில் இட்டுச் சித்திரவதை செய்யுங்கள்!'' என்கிறாள்.

அப்போது அந்த மன்னன் ''உங்களை எனது இதயச் சிறையில் வைக்கின்றேன். உங்களின் தந்தையின் மணிமகுடத்தைப் பணிவோடு திருப்பித் தருகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்றான்.

ஒரு நொடியில் கதை மாறிவிட்டது.



இல்வாழ்வு என்பது இம்சை நிறைந் ததாக - பல பெண்களுக்கு அமைந்து விடுகிறது. பாவம், மீனாவும் அவர்களில் ஒருத்தியாகிப் போனாள். அழகு, அறிவு, சாதுரியம், செயற்திறன், அன்பு, அனுசரிப்பு எதிலுமே குறைந்தவள் அல்ல மீனா. ஓரளவு வசதியான குடும்பத்தில் தான் பிறந்தாள். பிரம்மதேவன் பிறப்பாலும் அவளைத் தண்டிக்கவில்லை. பாரம்பரியம் மிக்க விவசாயக் குடும்பம். எனினும் அப்பா ஒரு அரச அதிகாரி. அம்மா ஆசிரியை. குடும்பத்திலும் மீனாவும் ஓர் அண்ணாவும் மட்டும்தான். அவனும் படித்து பொறியியல் பட்டம் பெற்று சிட்னியில் சிறப்பாக வாழ்கிறான்.




அவளது வாழ்வு மட்டும் ஏன் இப்படி ஆனது?

பாவம் மீனா - படிக்கும் காலத்திலேயே அவளுக்கு இடைஞ்சல்கள்! அவளது அழகு அவளுக்கு வினையானது. பலர் அவளை வண்டாகச் சுற்றினார்கள். அவளும் படிக்கவும் முடியாமல் ஒதுக்கவும் முடியாமல் இளமை உணர்வுகளோடு போராடினாள். இறுதியில் முரளியைத் தேர்ந்தெடுத்தாள். முரளியும் கெட்டிக்காரன். அவள் சாதாரண தரத்தில் படித்த போது அவன் உயர் தரத்தில் படித்துக்

**சிறுகதை**

கொண்டிருந்தான். வசீகரமும் கலகலப்பும் அவனை முன்னிலைப் படுத்தின.

அவர்கள் காதல் வானில் மிதந்தாலும் இயலுமான வரை மீனா கட்டுப்பாட்டுடன் இருந்தாள். அவனோ அவசரக்காரன். திருமணத்திற்கு முன்னதான பாலுறவிலிருந்து மீனா வெகு அவதானத்துடனும், பிரயத்தனத்துடனும் தன்னைப் பாதுகாத்துக் கொண்டாள். காதல் அவர்கள் இருவரது படிப்புக்கும் இடைஞ்சலான போதும் மீனா சாதாரண தரத்தில் வெகு சிறப்பாகச் சித்தியடைந்த போது முரளி உயர் தரத்தில் அதே ஆண்டில் கோட்டை விட்டான். மீனா உயர்தரப் பரீட்சையில் முதற்தடவையாகத் தோற்றிய போது, அவன் மூன்றாவது தடவையாகத் தோற்றினான். பரீட்சை முடிவுகள் வெளிவந்த போது மீனா மயிரிழையில் மருத்துவ பீடத்தை தவறவிட்டாள். முரளி மட்டு மட்டாக விஞ்ஞான பீடத்திற்கு தெரிவானான்.

மீனா அடுத்த தடவை பரீட்சைக்கு படிக்க ஆரம்பித்த போது முரளி தடுத்து விட்டான். தன்னோடு விஞ்ஞான பீடத்திற்கு வரும்படி கட்டாயப்படுத்தினான். பெற்றோர், தமையன் ஆகியோர் மறுபடியும் பரீட்சை எழுதும்படி கூறிய ஆலோசனையையும் நிராகரித்து மீனா பல்கலைக் கழகம் சென்றாள். இதில் அவளுக்கு முழுமையான உடன்பாடு இல்லை எனினும் காதலனுக்காக விட்டுக் கொடுத்து, மூன்று வருடங்கள் அவனோடு ஒன்றாகப் படித்தாள். பல்கலைக்கழகக் காதல் பாடசாலையோடு என்பதை நிரூபிக்குமாப் போல் மீனா சற்றும் எதிர்பார்க்காத வகையில் முரளி கொழுத்த சீதனத்துடன் இன்னொருத்தியைக் கைபிடித்த போது அவள் உடைந்து நொருங்கிப் போனாள்.

காலச்சுழலில் அவளது மனது சற்றுத் தேறினாலும், சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்பது போல் அவள் மிகவும் அவதானமாக நடந்தாள். எனினும் அவளது அழகும், நளினமும், சுறுசுறுப்பும் தொடர்ந்து அவளைச் சோதித்தன. ஒரே பாடசாலையில் அவளுடன் கற்பிக்கும் தீபன் அவளது காதலுக்காக அலைந்தான். அவள் நெடு நாட்களாக அசைந்து கொடுக்காமல் தான் இருந்தாள். அடிக்கு மேல் அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல் அவளது மனதிலும் குழப்பம் ஏற்பட்டது. எனினும் அதை காதல் என்று கூறிவிட முடியாது. அவளைப் பொறுத்த வரை காதல் என்பது வெறும் மாயை தான் என்ற முடிவுக்கு வந்திருந்தாள். எனினும் இல்வாழ்வு ஒன்றில் இணையத் தான் வேண்டும் என்ற யதார்த் தத்தினால் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

''தீபன்... எனக்கு இந்த காதல் சமாச் சாரத்தில் நம்பிக்கை இல்லை. என்னைப் பிடித்திருந்தால் எனது பெற்றோருடன் உங்கள் பெற்றோரைத் தொடர்பு கொள்ளச் சொல்லுங்கள்'' என்று கூறினாள் மீனா. தீபனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அடுத்தடுத்து காரியங்கள் நிறைவேறின. தீபன் - மீனா திருமணமும் வெகுசிறப்பாக நிறைவேறியது. இனிமையாகத் தொடங்கி இன்பமாய்த் தொடர்ந்த வாழ்வு இதோ ஐந்து வருட இல்வாழ்வில் இடறாய்ப் போயிருக்கிறது. அன்பான மனைவி, குழந்தை, இனிமையான வாழ்விடையே தீபனுக்கு இன்னொரு பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பு, இன்று அவர்களது இல்வாழ்வுக்கு இடைஞ்சலாய்ப் போனது. இந்தத் தொடர்பினால் கணவன் மனைவியிடையே நித்தச் சண்டையாகி இப்போது விவாகரத்துக்குப் போகுமளவு நாறிக் கொண்டிருக்கிறது. இருவருக்கிடையேயான சண்டை தீவிரமாகி தீபன் விவாகரத்துக்கு வற்புறுத்திக் கொண்டிருக்கிறான். மீனாவுக்கும் வாழ்வு வேண்டாம் என்று போய்விட்டது. எனினும், பெண்ணாகப் பிறந்து விட்டதால் விவாகரத்துக்கு சம்மதிப்பதற்கு தயங்கினாள். திருமணம் செய்த பின்னர் மீனாவை வேலையிலிருந்தும் மறித்து விட்டான் தீபன். அவள் பிரிந்து சென்றாலும் வாழ்வை எதிர்கொள்வதில் பொருளாதாரச் சிரமம் இருந்தது. கூடவே ஒரு பெண், வாழாவெட்டியாக இந்தக் கேடு கெட்ட சமுதாயத்தில் வாழ்வதிலுள்ள சிரமத்தையும் அவள் உணர்ந்திருந்தாள்.

காலையில் கூட தீபன் அவளோடு சண்டையிட்டான். ''இதோ பாரடி... நான் இனி வீட்டுக்கு வரமாட்டன்... நீ எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. நான் அவள் கூடத்தான் வாழப்போறன்...''

தீபன் போனபின் அழுது கொண்டிருந்த மீனா வாசற்கதவு தட்டப்படும் ஒலி கேட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து வந்தாள். தோழி வசந்தி தான் வந்திருந்தாள். அவளது முகத்திலிருந் வா[illegible]தைக் கண்டு அன்போடு விசாரித்தாள். மீனா காலையில் நடந்ததைக் கூறினாள்.

''மீனா பெண்களுக்கு என்றும் பலமாக இருப்பது அவர்களது கல்வியும் வேலையும் தான். நீ இன்னமும் வேலை செய்து கொண்டிருந்தால் யோசிக்கத் தேவையில்லை. உனது பொருளா தாரம் உறுதியாக இருந்திருக்கும்... கணவனுக்காக வேலையை உதறித்தள்ளிய நன்றியைக் கூட நினைத்துப் பார்க்காத அற்ப ஜீவிகளாக இந்த இதயமற்ற ஆண்கள் ஏன் தான் இப்படி இருக்கிறார்களோ தெரியவில்லை. ...ம்... வீட்டுக்கு வீடு வாசற்படி தான். எனது கணவரும் உழைப்பதைப் பிறந்த வீட்டுக்குப் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார். எனது சம்பளத்தில் தான் குடும்பம் ஓடிக் கொண்டிருக்கு... கதைத் தால் வீண் சண்டை. பிள்ளைகள் மூன்று பேர்... இந்த நிலையில் என்னாலும் பிரிந்து போக முடியவில்லை. அடி உதைகளைத் தாங்கிக் கொண்டு இருக்கிறன். நீயும் உனது பிள்ளையின் எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டும். அதற்காக பொறுமையைக் கடைப் பிடித்து கண்டும் காணாமல் இரு மீனா.''

''வசந்தி, ஒரு பெண்ணால எதையும் பொறுத்திட முடியும். ஆனால் இன்னொரு பெண்ணுடன் தனது கணவர் தொடர்பு வைத்திருப்பதைப் பொறுக்க முடியுமா? நீயென்றால் பொறுப்பாயா?''

''கஷ்டம் தான்... ஆனாலும் அவர்கள் எம்மிடம் என்ன இல்லை என்று இன்னும் ஒரு பெண்ணிடம் செல்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் யோசித்து அதைச் சீர் செய்திட்டால் எல்லாம் சுமுகமாயிடம். வெளிப்படையாகச் சொல்லுறதென்றால் நீ படுக்கையிலை ஒத்துழைக்க வேணும்... எங்களுக்கு ஆர்வம் குறைவாக இருந்தா

**ச. முருகானந்தன்**

லும், அவர்களுடைய ஆசைக்குத் தீனி போட பின் நிற்கக் கூடாது...'' வசந்தி சிரித்தபடி கூறினாள். சிறிது மௌத்தின் பின் மீனா வசந்தியை நோக்கினாள்.

''என்னைப் பொறுத்த வரையில் நான் ஒத்துழைக்கிறன். வெட்கத்தை விட்டுச் சொல்லுவதென்றால் இப்பவும் எனக்கும் கூட ஆர்வம் குறையவில்லை. இப்பிடியும் ஏன் தான் இப்படி போனாரோ தெரியவில்லை... எல்லாம் அந்த எடுவாட்டக் காரியால தான்...''

''ம்... சில ஆண்கள் இப்படித்தான்... ஒண்டிலை அடங்கிறேல்லை... புதுப் புது ருசி தேடுறவை... சில பொம்பிளையளும் உப்பிடித் தான்... அதால தான் எல்லாக் கரைச்சலும்... எதுக்கும் நீ விவாகரத்திற்கு சம்மதிக்காத...'' என்று புத்தி சொல்லிவிட்டு விடை பெற்றாள் வசந்தி. வசந்தி போன பின்னர் மீனாவும் தீவிரமாக யோசித்தாள். இனி கணவனுடன் இது பற்றிச் சண்டையிடுவதில்லை என்று முடிவுடன் காத்திருந்தாள். ஆனால் அந்தோ பரிதாபம், அவன் திரும்பி வரவேயில்லை. நாட்கள் நகர்ந்தும் அவன் வரவில்லை. யுத்தத்தில் கணவனை இழந்து தனித்திருந்த அந்தப் பெண்ணுடன் நிரந்தரமாகத் தங்கிவிட்டதாக அறிந்ததும் அவள் குன்றிப் போனாள்.''

''அப்பா எங்கே அம்மா?'' என்று மகன் கேட்கும் போதெல்லாம் அவளுக்கு நெஞ்சு வலிக்கும், ''வருவார்...'' என்று தந்தையின் பாசத்திற்கு ஏங்கும் குமாரை சமாதானப்படுத்துவாள்.

மீனா சிறிது காலம் கவலையில் மூழ்கியிருந்தாள். எனினும் துவண்டு போய் விடவில்லை. மீண்டும் சுறுசுறுப்பானாள். அவளது படிப்பு அவளுக்குக் கை கொடுத்தது. அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு வேலையைத் தேடிக் கொண்டாள்.

போரினாலும், சுனாமியினாலும் குடும்பத் தலைவனைப் பறிகொடுத்த பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் பணி அவளுக்கு வழங்கப்பட்டிருந்தது. தனது பணியிலே முழுமனநிறைவோடும், பற்றுதியுடனும் பணியாற்றியவளுக்கு விரைவிலேயே சம்பள உயர்வும் கிடைத்தது. மகனை நல்லமுறையில் வளர்ப்பதிலும், கல்வியூட்டுவதிலும் கவனம் செலுத்தினாள்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவர்களது நிறுவனம் பொருளாதார, தொழில் வாய்ப்பு உதவிகளை செய்தது. கூடவே மனப் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் அவர்களுக்கு உளவளத்துணையூட்டுவது மீனாவின் முக்கிய கடமையாக இருந்தது.

ஒருநாள் பெண்கள் மத்தியிலான கலந்துரையாடலை அவள் நிகழ்த்திக் கொண்டிருந்த போது ஒரு பெண், ''அம்மா, நீங்கள் சொல்வது எல்லாம் சரிதான்... ஆனால் எங்களுக்கு ஏற்பட்ட எல்லா இழப்புகளையும் சீர்செய்வது?...''

மீனாவின் மனதும் வலித்தது. 'இன்றைய யுத்தக் கொடுமையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வடிகால் தான் என்ன?'

''ம்... சமுதாயம் தான் இதற்கு தீர்வு காணவேண்டும்... விதவைகளை மணம் புரிய இளைஞர்கள் முன்வர வேண்டும்.'' என்றாள் மீனா.

''குளிர் காய வர பலபேர் தயாராக இருக்கின்றார்கள்... வாழ்வளிக்க வெகு சிலரே இருக்கிறார்கள்... ''

''அம்மா, நீங்கள் முன்னர் சொன்னது போல மறுமணம் செய்யவும் போதிய இளைஞர்கள், சமூகத்தில் இருக்க வேண்டுமே...!'' என்று மீண்டும் கூறினாள் முதலாவது பெண்.

கூட்டத்திலிருந்த இன்னொரு பெண் கூறினாள், ''ஒவ்வொரு ஆணும் இருவரைத் திருமணம் செய்யலாம் என்று சட்டம் கொண்டு வந்தால் தான் இந்த பிரச்சினை தீரும்... இல்லாவிட்டால் பெரிய வீடு சின்ன வீடு சமாசாரங்கள் தான் மலிந்து போகும்''

யதார்த்தமாகப் பேசிய அப்பெண்ணின் கூற்று மீனாவைத் திடுக்குற வைத்தது. தன் கணவனோடு வாழும் ஒரு விதவைப் பெண்ணின் நினைப்பும் ஒரு கணம் வந்து போனது. கடந்த வாரம் அவளிடம் வந்து மன்னிப்புக் கேட்டு மறுபடியும் ஒன்று சேர வந்த தீபனின் நினைவும், அவனை ஏசி விரட்டியமையும் நினைவில் வந்தது. கண்ணகி போல் கணவனை ஏற்க அவளால் முடியவில்லை.

''கற்பு என்றால் என்ன அர்த்தம் அம்மா?'' அவளது கேள்வி மீனாவைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. ஒருவனுக்கு ஒருத்தி என்று சொன்ன சமூகம் ஏன் ஒருத்திக்கு ஒருவன் என்று சொல்லவில்லை?'

அவள் குழப்பத்துடன் கருத்தரங்கை முடித்துக் கொண்டாள். அவளது கணவன் செய்தது தவறா? அனுதாபமா? என்று மனதில் ஆயிரம் கேள்விகள்!

அவள் வீட்டிற்குத் திரும்பியபோது அங்கு வந்திருந்த தீபன் மகனோடு கதைத்துக் கொண்டிருந்தான். குமாரும் தகப்பனின் மடியில் அமர்ந்திருந்து மகிழ்வோடு உரையாடினான். மீனாவுக்கு கோபம் வந்தது.

''மீனா... என்னை மன்னிச்சிடம்மா...'' தீபன் குரல் தழுதழுக்கக் கூறினான். ''நீ ''மீனா... ஏற்கனவே ஒரு முறை விட்ட தவறை மறுபடியும் விடக்கூடாது.' ஏற்கனவே விதவையானவள். பாவம். இப்போது அங்கேயும் இரண்டு குழந்தைகள் இருக்கு... அது தான் இரு தலைக் கொள்ளியாக நான் தவிக்கிறேன்... உன்னை விட்டுவிட்டுப் போயிருக்க மாட்டன்... நீதான் தினமும் பேசித் திட்டித்தீர்த்தாய்... அவளுடனான தொடர்பை அறிந்த பின்னர் நீ உன்னை நெருங்கக் கூட என்னை விடவில்லை... இப்ப என்னுடைய மனம் உறுத்துது அதாலதான் உன்னிடம் வந்தன்... மன்னிச்சிடு மீனா... இனிநான் உனக்குத் தொல்லை தரமாட்டன். மகனைப்பள்ளிக் கூடத்தால வாறபோது பார்க்கிறன்.'' அவன் கை கூப்பி விடை பெற்றான்.

''குமார்... அப்பாவை நிண்டு சாப்பிட்டுட்டு போகச் சொல்லு...'' மீனா தான் கூறினாள்.

தீபன் அவளை ஆச்சரியத்துடன் நோக்கினான். ✱

# நானும் தமிழ் பேசுபவன்தான்...

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரு நாட்களே இருக்கின்றன. மொத்தம் 22 வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஆனால், பிரதான வேட்பாளர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவுமே. இந்த இருவருக்கும் இடையிலேயே போட்டி.



சமீப நாட்களாக இடம் பெற்ற அதி உச்ச தேர்தல் பிரசாரங்கள், வன்முறைகள், படுகொலைகள், ஒருவர் மீது மற்றவர் சேறு பூசுதல் ஆகியவை இந்தத் தேர்தல் இலங்கை அரசியலில் எவ்வளவு முக்கியம் பெற்றுள்ளது என்பதை கோடி காட்டுகின்றன. 700 க்கு மேற்பட்ட முறைப்பாடகள் பதிவு செய்யப்பட்டள்ளன.

இந்தத் தேர்தல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசியக் கட்சியை பிரதான கட்சியாகக் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ஒரு ஜீவ மரணப் போராட்டம் என்பதில் சந்தேகம் இல்லை.

தனது பதவிக் காலம் நிறைவடைய இன்னும் இரண்டு வருடங்கள் இருந்தபோதிலும் யுத்த வெற்றியைக் கருத்தில் கொண்டு - வெற்றிக் கனியை இலகுவாகத் தட்டிக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்போடு - புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார் மஹிந்த ராஜபக்ஷ. ஆனால், சரத் பொன்சேகா போன்ற ஒரு பலம் வாய்ந்த வேட்பாளரை எதிரணி தேர்தலில் நிறுத்தும் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கவில்லை. அதுவும், ஐ.தே.க., ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி என்ற ஒரு பலம் வாய்ந்த அணி உருவாகும் என்பதும் எதிர்பார்க்கப்பட்ட தல்ல. இந்தத் தேர்தலில் ஆளும் கட்சி தோற்கடிக்கப்பட்டுவிடுமானால் 2005 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க செய்தது போன்ற ஒரு வரலாற்றுத் தவறை இழைத்தவராகிவிடுவார் மஹிந்த ராஜபக்ஷ.

ரணிலின் அரசாங்கம் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்த நிலையில் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறி அரசைக் கலைத்தார் சந்திரிகா. ஆனால், அதன் பின்பு மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியில், பண்டாரநாயக்க குடும்பம் முற்றாகவே ஓரம் கட்டுப்பட்டு விட்டது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி வெற்றி பெறத் தவறுவாரானால் பண்டார நாயக்கா குடும்பத்துக்கு ஏற்பட்ட கதியே அவருக்கும் ஏற்படலாம்.

அதேபோன்று ரணில் தலைமை யிலான ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கப் போவதும் இந்த ஜனாதிபதித் தேர்தல்தான். எதிரணி தோல்வி அடைந்தால் தோல்வியில் இருந்து மீண்டெழ பல ஆண்டுகள் பிடிக்கலாம்.

இரு பிரதான வேட்பாளர்களும் கடந்த சில நாட்களாக பொதுக் கூட்டங்கள், பத்திரிகையாளர் மாநாடுகள் என்று சூறாவளிப் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் ஓர் அங்கமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் இயங்கும் தமிழ், சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை கண்டியில் உள்ள தனது ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில், யுத்தத்தின் பின்னரான அரசின் நிலைப்பாடு, மீள்குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயம், சுதந்திர ஆணைக்குழு, சர்வகட்சி மாநாடு சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி விளக்கம் அளித்தார்.

தேர்தல் வெற்றியில் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா என்ற கேள்விக்கு பெரிதாகச் சிரித்துவிட்டு, இதுதான் தனது பதில் என்றார் ஜனாதிபதி. தேர்தலில் தனது வெற்றி உறுதி என்றும் ஜனாதிபதி கூறினார்.

தமிழ் பேசும் மக்களுக்கு நீங்கள் விடுக்கப்போகும் செய்தி என்ன என்று இந்தச் சந்திப்பின் இறுதியில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. ''நானும் தமிழ் பேசுபவன்தான். நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு தீர்வுக்கு வருவோம்'' என்றார் ஜனாதிபதி. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுத் திட்டம் எதுவும் அரசின் கையில் இல்லை என்பதை இது உணர்த்தியது.

ஜனாதிபதியின் இந்தப் பத்திரிகை ஆசிரியர்கள் மாநாடு இரு அமர்வு களாக நடைபெற்றது. முதலாவது அமர்வில் சிங்களப் பத்திரிகை களின் வார இதழ் ஆசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட ஆசிரியர்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இரண்டாவது அமர்வின் போது தமிழ், ஆங்கில வார இதழ்களின் ஆசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட ஆசிரியபீட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

நேரமின்மை காரணமாக மிகவும் அவசர அவசரமாக நடத்தி முடிக்கப்பட்ட இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக ளுக்கு ஜனாதிபதி பதில் அளிக்கையில் சில சமயம் உணர்ச்சிவசப்பட்டவராகக் காணப்பட்டார். சிரித்தும் பதில் அளித்தார். கோபத்தையும் வெளிக்காட்டினார்.

அரசாங்க உயர் உத்தியோகங்களில் ஜனாதிபதியின் உறவினர்களே அதிகம் பேர் உள்ளனர் என்று குற்றம் சாட்டப்படுவதாக எழுப்பப்பட்ட கேள்விக்கு ஜனாதிபதி பதில் அளிக்கையில், அப்படி எவராவது இருந்தால் பெயர் சொல்லுங்கள் என்று சவால் விடுத்தார்.

இந்தப் பத்திரிகை ஆசிரியர்கள் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்த ஏனைய விவரங்கள் வருமாறு:-

### தமிழ் மக்கள் பிரச்சினை

நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்து தனி நாட்டுப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். தமிழ் மக்களுக்குத் தற்பொழுது இனப்பிரச்சினையைவிட எவ்வளவோ முக்கிய பிரச்சினைகள் உள்ளன. மின்சாரத் தேவை உள்ளது. தண்ணீர்த் தேவை உள்ளது. வீடமைப்பு வேண்டும். மீள்குடியேற்றம் செய்யப்படும் மக்களின் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

வடபகுதியின் முன்னேற்றத்துக்குத் தனியாரின் முதலீடு முக்கியமானது. சுதந்திர வர்த்தக வலயத் திட்டம் மூலம் பெரும் அபிவிருத்தியைக் காண முடியும். இவைதான் முக்கியம். இவற்றுக்குப் பின்னால்தான் மற்றைய பிரச்சினைகள்.

நான் சமீபத்தில் மெனிக்பாம் முகாமுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள இளைஞர் ஒருவர் என்னிடம் சொன்னார், எங்களுக்கு வடக்கு, கிழக்கு இணைப்போ அல்லது வேறு விடயங்களோ தற்போது முக்கியம் அல்ல என்று. மீள்குடியேற்றப்பட்டு தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றார்.

ஆகவே, நாட்டு மக்கள் அனைவரும் சமாதானமாக வாழும் ஒரு சூழலையே நாங்கள் ஏற்படுத்துவோம். இந்த நாட்டில் தனித்தனி கலாசாரங்கள், பாரம்பரியங்கள் உள்ள மக்கள் வாழ்கிறார்கள். சகல பிரதேசங்க ளுக்கும் இந்த நாட்டின் வளங்கள் சமனாகப் பங்கிடப்பட வேண்டும்.

தேர்தல் முடிவடைந்த தும் இந்த நாட்டின் தமிழ் மக்களும், அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பிரச்சினை களுக்குத் தீர்வு காண்போம். கடந்த காலங்களில் ஜனநாயக நடை முறைக்கு ஏற்ற தீர்வு முன்வைக்கப்ப டாத போதிலும் எதிர்காலத் தலைவர் களால் புதிய நல்ல யோசனைகள் முன்வைக்கப்படலாம். நாட்டைப் பிளவுபடுத்தாத தீர்வாக இது இருக்கவேண்டும்.

### உயர் பாதுகாப்பு வலயம்

உயர் பாதுகாப்பு வலயம் என்பது அரசியல் பிரச்சினை அல்ல. அது பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது. கொழும்பிலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. வெளிநாடு களிலும் இப்படியான வலயங்கள் இருந்து வருகின்றன. இது ஒரு பொதுவான நடைமுறை. எனினும், யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வயலங்களை அகற்றும் பணிகளை மே மாதத்துக்குப் பின்னர் திட்டமிட்டு படிப்படியாக நிறைவு செய்வோம். நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான ஒரு முக்கிய அறிவிப்பு வெளிவரும் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. அது வெறும் ஊகத்துடன் எழுதப்பட்ட ஒரு செய்தியே. பாதுகாப்பு வலயப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக்க முடியாது.

### சுயாதீன ஆணைக்குழு

சுயாதீன ஆணைக்குழுவைச் செயற்படுத்த முடியாது போனதுக்கு கட்சிகள் தமது பிரதிநிதிகளின் பெயரைச் சமர்ப்பிக்காததே காரணம். ஒரு பெயர் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டது. அவரும் நாடாளுமன்றத்தில் கடமை யாற்றுவதால் அவரையும் சேர்த்துக் கொள்ள முடியாது. பிரதிநிதிகளின் பெயர்கள் சமர்ப்பிக்கப் பட்டால் ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்து அதனை இயங்க வைக்க முடியும்.

### சர்வகட்சி மாநாடு

சர்வகட்சி மாநாடு செயல் இழந்து விட்டது. ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற முக்கிய கட்சிகள் அதில் கலந்து கொள்ளாததே இதற்குக் காரணம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முன் வைக்கப்பட வேண்டும். ஆனால், அதற்கு முன்னர் அவர்களின் வாழ்வா தாரப் பிரச்சினைகளான குடியிருப்பு வசதி, மின்சாரம், சுகாதாரம், தண்ணீர் வசதி ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

இப்படி ஜனாதிபதி கூறினார்.

தற்பொழுது உள்ள அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்பு அது குறித்து முடிவு செய்யப்படும் என்று ஜனாதிபதி பதில் அளித்தார்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிகவும் பரபரப்பான சூழலில் நடைபெறுவது இந்த ஜனாதிபதித் தேர்தல்தான்.

*****

# வீண் பேச்சினால் விபரீதமும் வேதனையும் விளையும்!

செலவின்றியும், வரையறையின்றியும், மற்றவரின் அனுமதிக்காகக் காத்திராமல், தன் இஷ்டப்படி நிறைவேற்றக் கூடிய ஒரு காரியம் பேச்சுத்தான்.

மனிதர் பேசுவதற்காக மொழிகளைக் கண்டு பிடித்தனர். பின்னர் அவற்றைப் பேசுவதற்குக் கற்றுக் கொண்டனர். உலகிலுள்ள ஒவ்வொரு மனிதருக்கும் ஏதோ ஒரு மொழியைப் பேசத்தெரிந்திருக்கிறது. ஒவ்வொரு மொழியிலும் இரு வகைப் பட்ட தன்மைகள் உண்டு. ஒன்று அந்த மொழியின் நயமும் இங்கிதமும். மற்றையது அதன் கனமும் வன்மமும். இந்த இரண்டு தன்மைகளும் பேசுபவரைப் பொறுத்துத்தான் அமையும்.

ஒருவர் எவ்வளவு நேரம் பேசுகிறார் என்பது முக்கியமல்ல அவரது பேச்சு அடுத்தவரைக் கவரக்கூடியதாக எவ்வளவு கனிவும் கண்ணியமும் நளினமும் நாகரிகமும் நிறைந்திருந்தது என்பதுதான் மிக முக்கியம்.

நாம் ஒருவரோடு பேசினால் நாம் பிரயோகித்த அத்தனை சொற்களிலும் எத்தனை சொற்கள் வலியை ஏற்படுத்தக்




கூடியவை என்று எண்ணிப் பார்த்துப் பேசவேண்டும்.

''சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும்''

பிறருக்கு எவ்வகையிலும் துன்பம் தராத இனிய சொல் ஒருவனுக்கு இப்பிறப்பில் மட்டுமல்ல மறுமையிலும் இன்பம் தரும்.

எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசும் இயல்புடையோர்க்குத் துன்பம் தரக்கூடிய வறுமையும் இல்லாமல் போகும் என்றும் வள்ளுவம் கூறுகிறது.

உங்களுக்கோ மற்றவர்களுக்கோ தீங்கு தராத வார்த்தைகளைப் பேசுங்கள். அதென்ன தனக்குத்தானே பாதகம் செய்யும்படியான வார்த்தைகளை ஒருவர் எப்படிப் பேச முடியும் என்கின்ற கேள்வி எழுகிறதல்லவா?

ஆம் கடுஞ்சொற்களைப் பேசி பிறர் மனத்தைப் புண் படுத்தினால் அதன் பிரதிபலிப்பு உடனடியாக யாரிடம் திரும்பி வரும்? பேசியவரிடம் தானே! ஆகவே, தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொள்ளல் என்பது இதைத்தான்.

நமது நாளாந்த வாழ்க்கையில் நாம் எத்தனை பேரைச் சந்திக்கிறோம், அதே போல கடந்த கால நமது வாழ்க்கை அனுபவத்தில் நாம் எத்தனை பேரைச் சந்தித்திருக்கின்றோம். நாம் சந்தித்த அனைவரும் நீங்காத, மென்மையான நினைவுகளுடன் எமது நெஞ்சில் இடம் பிடித்தவர்களா? இல்லை அழகிய பண்பும், அன்பும் அமைதியும் கொண்ட அருமையானவர்களே எம் நெஞ்சில் அழியாத, சிறப்பான இடத்தைப் பிடித்திருப்பார்கள்.

எம்மீது கடுமையாக நடந்து கொண்டோரும் எம் நெஞ்சில் தடம் பதித்திருப்பார்கள். ஆனால், அவர்கள் பதித்த தடம் வெறுப்புக்குரியதாகவும் வேதனை நிறைந்ததாகவும் இருக்கும்.

உங்களைப் பற்றி மற்றவர்கள் மனக் கண்முன் நினைக்கும் போது அவர்களது உள்ளத்திலே உங்களைப் பற்றிய பதிவு ஆனந்தமாகவும் நிம்மதி தரக்கூடியதாகவும் இருக்க வேண்டுமா அல்லது ஆத்திரம் வரக்கூடியதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டுமா?

மற்றவர்களின் மனமெனும் புனித இடத்தில் உங்களை வெறுப்புக்குரிய ஆளாகவும், விருப்புக்குரிய ஆளாகவும் குடியமர்த்துவது உங்கள் நடவடிக்கைகளில் தான் தங்கியுள்ளது.

நாம் மற்றவர்களுடம் பேசும் பேச்சுக்களில் மூன்று வகையுண்டு; முதல் வகை ஆக்கமும் ஊக்கமும் தந்து நமக்கும் பிறருக்கும் நன்மையளிப்பவை, இரண்டாவது வகை அழிவும் இழிவும் விளைவித்து நமக்கும் பிறருக்கும் தீங்கு விளைவிப்பவை, மூன்றாவது வகை பேசுவதால் நமக்கோ பிறருக்கோ நன்மை தரமுடியாத உப்புச் சப்பற்ற பேச்சுக்கள்.

அதேவேளை விபரீதம் தரக் கூடிய வீண்பேச்சுக்களில் பலவகையுண்டு தப்பானபேச்சு, அவதூறு ஏற்படுத்தக் கூடிய பேச்சு, கண்டிப்புப் பேச்சு, தேவைக்கு மிஞ்சிய பேச்சு, வழக்காடும் பேச்சு, நகைச்சுவைப் பேச்சு, பாராட்டுப் பேச்சு

மேற்குறித்தவைகளில் பெரும்பாலானவை அநேகமான சந்தர்ப்பங்களில்

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

விபரீதத்தையே விளைவித்து விடப் போதுமானவையாக இருக்கும்.

எனவே, வீண் பேச்சுக்களைப் பேசுவது குற்றம் என்ற அடிப்படையில் எதையும் ஆற அமரச் சிந்தித்து நின்று நிதானித்து விட்டே பேச வேண்டும்.

மனிதன் அடைந்திருக்கும் செல்வங்களில் நேரமும் காலமும் மிகவும் விலைமதிக்க முடியாதவை. மற்றைய அனைத்துச் செல்வங்களையும் விட இது உயர்ந்தது. இதனை நீங்கள் இழந்து விட்டால் மீண்டும் ஒரு போதுமே பெறமுடியாது. எனவே, கால நேரத்தைக் கண்ணியமாகவும் கவனமாகவும் பயன் படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நீங்கள் பேசும் பேச்சுக்கள் காற்றில் கரைந்து மறைந்து விடுகின்றன என்று எண்ணினால் அதுதான் நீங்கள் செய்யும் முதல் தவறு. நீங்கள் வெளியிடும் எந்த வார்த்தையும் அழிவதில்லை.

நீங்கள் உங்கள் மனதையே கேட்டுப் பாருங்கள். அது பேச விரும்புகிறதா, மற்றவர்களின் பேச்சைக் கேட்க விரும்புகிறதா? பேசுவதை விட கேட்பதில்தான் உங்களுக்கு ஆர்வமிருந்தால் அதற்காக உங்கள் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள் பேசும்போது ஏற்படும் விபரீதங்கள் கேட்கும் போது ஏற்படுவதில்லை. *

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
'உளநல ஆலோசனை'
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

# பெண் பிள்ளைகள் குடும்பத்துக்கு பாரமா?



**கேள்வி:** எனக்கு வயது 23, பெண், குடும்பத்தில் மூத்தவள். எனக்கு இளையவர்கள் இருவரும் பெண்கள்தான். வறுமை நிலைதான். அப்படியிருந்தும் நான் பெரும் கஷ்டத்தின் மத்தியில்தான் எனது படிப்பை ஓரளவு திருப்தியாக முடித்துள்ளேன். ஆனால், வீட்டிலே நாங்கள் மூவரும் பெண்பிள்ளைகளாக இருப்பதால் பெற்றோர் எப்பொழுதுமே நாம் அவர்களுக்குப் பாரமாகவே இருந்து விடுவோம் என்று பயப்படுகிறார்கள். எதற்கெடுத்தாலும் மூன்று பெண்பிள்ளைகள் என்றே கதையைத் துவங்குகிறார்கள். இது எமக்கும் கவலையைத் தருகிறது. இவர்களது நெருக்கடியிலிருந்து விடுபடவும் எமது துயரத்தைப் போக்கவும் நான் என்ன செய்ய வேண்டும். எனக்கும் என்போன்று மனதிற்குள்ளே இத்தகைய பிரச்சினைகளை வைத்து வெதும்பிக் கொண்டு இருப்பவர்களுக்கும் நல்லதொரு ஆலோசனையைத் தாருங்கள்?

**பதில்:** குடும்பத்தில் ஆண் பிறந்தால் அரசன் என்றும் பெண் பிறந்தால் ஆண்டியாக வேண்டும் என்றும் காலங்காலமாக இருந்து வரும் மனப்பாங்குகளே உங்களது பெற்றோரையும் இத்தகைய கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஆண்கள் என்றால் அவர்களை வருமானத்தின் சின்னமாகவும் பெண்கள் என்றால் அவர்களை செலவின் அல்லது நஷ்டத்தின் குறியாகவும் பார்க்கின்ற மனோ நிலையால் சமுதாயத்தில் மனிதகுல மேம்பாடு பின்னடைவு கண்டுள்ளது என்பது உண்மைதான்.

மடியில் கனமில்லாத அதாவது போதிய பொருள், சொத்து, பண வசதியைக் கொண்டிராத பெற்றோர் தங்களது பெண்பிள்ளைகளை சீதனம் சீர்வரிசையோடு எங்காவது ஒப்படைத்து விடவேண்டுமே என்று தான் சதாவும் எண்ணிக் கலங்குவார்கள். இப்போதுள்ள சமுதாய அமைப்பில் இது இயல்புதான்.

இனி வரும் காலங்களில் இத்தகைய அறியாமைச் சமுதாய அமைப்பு உங்களைப் போன்றவர்களின் சிந்தனை மாற்றத்தால் மாறக்கூடும். அதன் மூலம் பெண்கள் சுமையானவர்கள் என்றில்லாமல் சமமானவர்கள் என்ற அந்தஸ்து உருவாகலாம்.

இப்போது நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்; பெற்றோரின் நச்சரிப்புக்களை புறந்தள்ளி விட்டு நீங்கள் படிப்பில் கரிசனை காட்டுங்கள், உங்களுக்குக் கீழுள்ள சகோதரிகளையும் கல்வியில் நாட்டம் கொள்ளுமாறு ஊக்கப்படுத்துங்கள். ஏனென்றால் கல்வியினால் கிடைக்கக் கூடிய அறிவும் திறனும்தான் சமுதாயத்தில் உங்களுக்குப் பலத்தையும் அந்தஸ்தையும் தேடித்தரும். பெற்றோருடன் முரண்படாமல் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.

**கேள்வி:** எனக்கு வயது 27. குடும்பப் பெண். கணவர் வெளிநாட்டில் வேலை பார்க்கிறார். ஒரு குழந்தை உண்டு, மூன்று வருடங்களாக கணவர் வெளிநாட்டிலேயே தங்கியுள்ளார். இன்னும் ஒரு வருடத்தில் நாட்டுக்கு வருவதாகக் கூறியிருந்தவர் இப்பொழுது தனது வருகை மேலும் பிந்தும் என்று ஏனோதானோ என்ற மனோ நிலையில் கூறுகிறார். இதனால் நான் மனத்தளவில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். இதனை விட நான் அறிந்த மட்டில் தமது கணவன்மாரை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ள குடும்பப் பெண்களைப் பற்றி தவறான கதைகளைக் கட்டிவிட்டிருக்கிறார்கள். இந்தக் கதைகள் ஏதோ ஒரு வடிவத்தில் கணவன்மாரைப் போய் எட்டிவிடுகின்றன. இதனாலும் இப்பொழுது ஏராளமான குடும்பப் பிரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. என் பிரச்சினைக்கு ஆலோசனை சொல்லுங்கள்?

**பதில்:** குடும்பக் கஷ்டத்தின் காரணமாகவும் நாட்டுக் குழப்பம் காரணமாகவும் வெளிநாடு சென்று உழைப்பதற்கு ஆர்வப்பட்ட பலர் அதில் வெற்றியும் கண்டு இன்று நல்ல நிலையிலுள்ளார்கள்.

அதே வேளை வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்ற மோகத்தால் கவரப்பட்ட சிலர் அங்கு உரிய அல்லது எதிர் பார்த்த சம்பளம், வேலை என்பன கிடைக்காததால் ஓட்டாண்டியா கிப் போன நிலைமைகளும் உண்டு.

இது ஒரு புறமிருக்க கண்ணை விட்டு மறைந்தார் கருத்தை விட்டு மறைந்தார் என்ற நிலைமை வரும் போது உறவுகள் தூரப்பட்டுப் போவதால் பிளவுகளும் ஏற்படுகின்றன.

உங்களது கணவர் இன்னும் கொஞ்சக் காலம் வெளிநாட்டில் நின்று உழைக்க வேண்டும் என்று கூறுவதற்கான நியாயமான பொருளாதாரக் காரணங்கள் உண்டா என நீங்கள் இருவரும்தான் பேசி முடிவெடுக்க வேண்டும். கணவர் சொல்வது சரியெனப் பட்டால் நீங்கள் இன்னும் கொஞ்ச நாட்களுக்குப் பொறுமையோடு இருப்பதுதான் நல்லது. ஆனால், அவர் இடைப்பட்ட காலத்திலே விடுமுறையில் வந்து கொஞ்ச நாட்கள் ஊருக்கு வந்து விட்டுச் சென்றால் அது உங்களுக்கும், பிள்ளைக்கும் உறவினர்களுக்கும் நல்லது.

மற்றப்படி, சமுதாயத்தில் இழிவான கட்டுக்கதைகளைக் கட்டிவிடும் மனிதர்கள் தொடர்ந்து இருந்து கொண்டே இருப்பார்கள். இதனையிட்டு அலட்டிக் கொள்ள வேண்டாம். ஆனால், எத்தனை காத தூரம் சென்றாலும் குடும்ப உறவில் நல்ல புரிந்துணர்வு இருந்தால் எந்தப் பிரிவுகளும் ஏறுபட வாய்ப்பில்லாமல் போகும்.

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.

# கவிதைப்புனல்

## ஒற்றுமை ஓங்கட்டும்

அண்ணன் தம்பி ஒற்றுமையிலை- இங்கு
அண்டை அயலில் ஒற்றுமையிலை
கண்டவ ரோடு கதைத்திடவும்- நல்ல
காலம் கெட்டு கலிகாலம்!

பண்டைச் சிறப்புகள் பேசிடுவார்-பஞ்ச
பாண்டவர் சரிதையைக் கூறிடுவார்
பாண்டவர் நூற்றுவர் பகைத்ததனால்- இந்தப்
பாரினில் சேதம் விளைந்ததம்மா!

வேடன் வலையில் சிக்குப்பட்டு-உயிர்
மாள விருந்த மணிப்புறாக்கள்
கூடி எழுந்து செயற்பட்டதால்-உயிர்
மாயும் நிலையைத் தவிர்த்ததம்மா!

காயும் அடம்பங் கொடிதிரண்டால்- பெரும்
பாரம் இழுக்க உதவுமன்றோ?
சாயும் உடலைச் சுமப்பதற்கும்- பலர்
கூடி வருதல் வேண்டுமன்றோ!

காகம் கரைந்து கூடிதின்னும்-சிறு
கறையான் கட்டும் பெரும்புற்று
காணும் மனிதர் நனிவாழ- இவை
கற்றுத் தருபவை பாடங்களாம்!

பாழும் மனிதர் இவையெண்ணார்- பகை
நாளும் வளர்த்து நலிகின்றாரே
மாளும் உடலைச் சுமந்துகொண்டே- நல்ல
வாழும் நெறியை அழிக்கின்றாரே!

ஒற்றுமைத் திறனை உணர்ந்துலகோர்-எங்கும்
ஒன்றாய்க் கூடி சேவைசெய்வோம்
பற்று பூண்டு ஒருங்கிணைந்து- இந்தப்
பாருய்யப் பரனை இறைஞ்சிடுவோம்!

நித்திய ஒற்றுமை ஓங்கட்டுமே-நன்றாய்
நித்தமும் ஞாலம் செழிக்கட்டுமே
சத்திய நன்னெறி தழைக்கட்டுமே- இந்த
செகமதில் யுத்தம் ஒழியட்டுமே!

-ஆரையூர் தாமரை

## வேண்டுகிறாள்!

தாய்மை நிலை பெற்று
தரணியில் எழில் குன்றாச்
சேய்கள் நால்வ ரினைச்
செவ்வியள் பெற்ற தனால்
காய்வான தேகம்; அவள்
கவலை முகத் திரையில்!
ஓய்வுபெற இன்னுந் தான்
ஓராண்டு இருக்கிற தாம்!

கட்டியவன் தொழி லின்றிக்
கவலையுடன் வாழ் கையிலும்
பட்டப் படிப்பி னுக்குப்
பாலர்களை அனுப்பி வைத்துக்
கட்டுபணம் கல்விக் காய்
கரைத்ததவள் பெறு பேறாய்
ஒட்டியுடல் தான் சோர்ந்து
ஓடாகி உலவு கிறாள்!

வெளிநாட்டில் அக்கா வும்
விருப்புடைய தம்பி யுமோ
''ரெலிபோனில்'' நலம் கேட்டுக்
கொள்வதுதான் வே றில்லை
வெளிச்சம் வரும் மக்கள்
வேலைக்குப் போன பின்னர்
கலிதீர்ந்து அவள் வாழ்வில்
களிகூடும் வாழ்ந் திடுவாள்!

சுற்றத்தார் உறவி னர்கள்
சொந்தமென இருந் தாலும்
மற்றவரை எதிர் பார்க்கும்
மனநிலையோ இல்லா மல்
வெற்றிவரும் பட்ட துயர்
விரைவினிலே தீரு மெனப்
பற்றுடனே கை கூப்பிப்
பரம்பொருளை வேண்டுகிறாள்!

-கவிஞர் அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு,
கிண்ணியா.

## மலையக எழுச்சி

### சங்கத்துக்கு வாழ்த்து!

ஆவியைப் போலக் காத்தார்
அனைவரும் சங்கம்; ஆங்கு
பாவலர் மிளிர்ந்தார்; நல்ல
பாடகர் ஒளிர்ந்தார்; ஈர்க்கும்
நாவலர் இருந்தார்; மெச்சும்
நற்கவி திகழ்ந்தார்; ஆழ்ந்த
காவியப் புலமை பெற்ற
கற்றோரு மிருந்தார் அன்று!

ஆர்வலர் சேர்ந்தார்; ஆற்றல்
அறிவினை வளர்த்தார்; தொண்டால்
பேர்புகழ் பெற்றார்; பல்லோர்
மேதைகள் ஆனார்; சங்கம்
சீர்பெற்று உயர்வு; மக்கள்
சிந்தையில் குளிர்ச்சி; கண்டு
பார்புகழ் தலைவர், தொண்டர்
பாராட்டு; மகிழ்ச்சி; வாழ்த்து!

பூசல்கள் இல்லை; போலிப்
பூச்சுகள் இல்லை; பல்லோர்
பாசத்தால் துறப்புத் தோட்டப்
பதவிகள்; இணைவு; ஈங்கு
ஆசான்கள் கூட சங்க
ஆர்வலர்; சேர்வு; மக்கள்
தாசர்கள் ஆனார்; சங்கத்
தொண்டினில் திளைத்து நின்றார்!

இணையில்லா வளர்ச்சி; சங்கம்
எங்கணும் எழுச்சி; ஏக
துணைவனாய் உயர்ச்சி; ஈங்கு
தொழிலாளர் வீறு; நாடி
அணைத்துத்தம் ஊழி யர்கள்
அனைவர்க்கும் சேவை; இல்லை
பிணக்குகள், பேதம், பொல்லா
உட்பூசல், பதுக்கல் அன்று!
(தொடரும்).

கவிஞர் ஸி.எஸ். காந்தி

## வேலை வேண்டுமே!

வி.எம்.அன்ஸார், கிண்ணியா.

நூலைப் படித்து நல்ல
நுண்ணறிவு க(பெ)ற்ற போதும்
வேலை எனக்கு இல்லை
வேதனை நெஞ்சத் தோடே
காலை மாலை எல்லா
வேளை யானும் வீதி
சாலை வழியே அலைந்து
சலிப்ப டைந்து போனேன்!

வெம்பிக் கிடந்த வாழ்வின்
வேதனை தீர்ந்து போக
நம்பி ஓட்டுப் போட்டு
நல்ல வேலை கேட்டேன்
தம்பி உனக்கு வேலை
தருவேன் என்று அன்று
எம்பி சொன்ன போதும்
எதுவும் நடக்க வில்லை!

அன்றென் உடலில் இளமை
அதிகம் இருந்த துவே
இன்றென் வயது கூடி
இளமை போகு தய்யோ!
சென்ற கால மெல்லாம்
செல்லாக் காசாய்ப் போச்சு
என்றென் துன்பந் தொலைய
ஏற்ற வேலை வருமோ?

இற்றை வரையில் கூலியாய்
இருக்க லானேன்; இங்கு
பெற்ற இல்ல வாழ்வில்
பெருத்த துன்ப முற்றேன்
உற்ற மனைவி மக்கள்
உவகை காணச் செய்ய
வெற்றி நல்கும் வேலை
வருமா ?ஏங்கு கின்றேன்!

## வசந்தம் தேடும் அரும்புகள்!

உரிமை யென்னும் சிறகடித்து
உலகை சுற்றி வலம்வருவோம்
அடிமை யென்னும் தளையகற்றி
ஆடிப் பாடி மகிழ்ந்திடுவோம்!

வாட்டும் வறுமைப் பிணியாலே
வாழ்வைத் தொலைத்த பிஞ்சுகளின்
கேட்டைக் களைந்து பிறர்போல
ஊட்டம் பெறவே கைகொடுப்போம்!

ஏட்டைப் படிக்கும் உரிமைகளும்
இனிய கல்வி மேன்மைகளும்
நாட்டில் அன்பும் அரவணைப்பும்
அத்தனைப் பேர்க்கும் சமமாகும்!

ஏற்றத் தாழ் வு ஒடுக்கல்கள்
இகத்தில் களைய வேண்டுமென்றும்
போற்றும் புதுமை பூமலர்ந்தால்
புதிய வசந்தம் நமக்காகும்!

-ஷெல்லிதாசன், திருகோணமலை.

## எதைப் பாடுவேன்?

சூர்ப்பநகை என்றெழுதச்
சொன்னவளைப் பாடிடவா- இனி
ஆர்ப்பரித்து அன்றழித்த- தீய
அலைகடலைப் பாடிடவா- இல்லை
போர்ப்படலம் மனிதம்நின்று
போனதனைப் பாடிடவா...?

அம்மணமாய்ப் பெண்ணெழிலை
அடுக்குவரைப் பாடிடவா- இன்று
நம்புலத்தார் உறவறுத்து
நலிவதனைப் பாடிடவா- இல்லை
அம்பலத்தில் காமரசம்
அருந்துவரைப் பாடிடவா...?

இல்லாளை இம்சிக்கும்
இழிநிலையைப் பாடிடவா- இனிப்
பொல்லார்தம் சூனியத்தால்
புலம்புவரைப் பாடிடவா- இல்லை
நல்லாரைப் புறந்தள்ளும்
நவயுகத்தைப் பாடிடவா...?

வறியோரைக் கண்டொதுங்கும்
வர்க்கத்தைப் பாடிடவா-நன்
நெறியாரும் சோதனையால்
நெகிழ்வதனைப் பாடிடவா- இல்லை
அறிவாளர் கெட்டழியும்
அவலத்தைப் பாடிடவா...?

தாயினையே வதைக்கின்ற
தனயன்செயல் பாடிடவா-உள்ள
நோயினிலே உழல்வார்தம்
நொம்பலத்தைப் பாடிடவா- இல்லை
சேயினையே விற்றுநகை
சிந்துவளைப் பாடிடவா...?

கவிதையிலே நிலைமறக்கும்
காதலியைப் பாடிடவா-பரந்த
புவியினிலே கவிஞர்குழாம்
புண்படலைப் பாடிடவா-இந்த
ஆவியினி இருக்கும்வரை
அந்தோஎதைப் பாடிடுவேன்!

-கவிஞர் ஏ.ஆர். நிஸார், கிண்ணியா.

## பிரபுவின் மகனை நடிகனாக்க முயற்சி

சிவாஜியின் வாரிசாக ராம்குமார், பிரபு நடிகர்களாக முத்திரை பதித்தார்கள்.

சில படங்களுக்குப் பிறகு தயாரிப்பாளராகிவிட்டார் ராம்குமார்.

ஆனாலும் அவரது வாரிசாக மகன் துஷ்யந்த் நடிகரானார். இப்போது சிவாஜி புரொடெக்ஷன் தயாரிப்புப் பணிகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் பிரபுவின் மகன் விக்ரமை நடிகராக்குவதற்குச் சில இயக்குனர்கள் முயன்று வருகின்றனர். பிரபுவுக்கு ஓ.கே. என்றாலும் விக்ரம், நான் டெக்னீஷியனாகத்தான் வருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாராம்.

இதனால் துஷ்யந்துடன் இணைந்து 'அசல்' படத் தயாரிப்புப் பணிகளை ஆர்வமாகச் செய்து வருகின்றாராம்.


படம்-முன்தினம் பார்த்தேன்

## மலையாளப்பட ரீமேக்கில் விஜய்

'வேட்டைக்காரன்' விமர்சனம் தந்த எரிச்சலும், அந்தப் படத்தின் மெகாவில் தந்த மலர்ச்சியுமாக தியேட்டர் தியேட்டராகச் சென்று வருகிறார் இளையதளபதி. படத்தை வெளியிட்டிருக்கும் சன் பிக்சர்ஸின் அன்புக் கட்டளைக்காகவாம் இந்த விசிட். விஜய்யின் அடுத்தப் படமான 'சுறா'வையும் சன் பிக்சர்ஸ் வாங்கியுள்ளது. மோகன்லால் நடித்த 'சோட்டா மும்பை' படத்தின் ரீமேக்தான் 'சுறா'. இதையடுத்து லிங்குசாமியின் இயக்கத்தில் நடிப்பக்கிறார் எனவும், ஜெயம் ராஜா இயக்கும் படத்துக்கு கால்ஷீட் கொடுத்திருக்கிறார் எனவும் விஜய் பற்றி பலவிதப் பேச்சுகள். ஆனால் இவற்றையெல்லாம் பொய்யாக்கி இருக்கிறார் விஜய்.

'ப்ரெண்ட்ஸ்' படத்தை இயக்கிய சித்திக்குக்கு அடுத்த பட வாய்ப்பை அளித்திருக்கிறாராம் விஜய். தற்போது 'பொடிகாட்' படத்தை மலையாளத்தில் இயக்கி வருகிறார் சித்திக். திலீப், நயன்தாரா நடிக்கும் இந்தப் படத்தின் ரீமேக்தான் விஜயின் அடுத்த படம். ஜோடி யாருங்கப்பா, நயன்தாராவா?

## பிரேம்ஜி இப்ப லீட்டர் ஸ்டாராம்



பார்க்கத்தான் காமெடியன்கள். ஹீரோக்களே பெருமூச்சு விடுகிற வேலைகளைச் செய்கிறார்கள் அவர்களில் பலர். அதில் புதிய வெடிகுண்டு நம்ம பிரேம்ஜிதானாம். சிம்புவை லிட்டில் சூப்பர் ஸ்டார் என்கிறார் இவர். அவரோ, இவரை லீட்டர் சூப்பர் ஸ்டார் என்கிறார்.

கன்னிராசி காளை ராசி மாதிரி, நம்ம பிரேம்ஜிக்கு ஜல ராசி. 'கோவா' படப்பிடிப்பில் கொண்டாட்டம் போட்டவர்களில் பிரேம்ஜியின் கொண்டாட்டம் கொஞ்சம் ஓவர்தானாம். எல்லோரும் கால், அரை என்று தனித்தனியாக அளந்து கொண்டிருக்க, பிரேம்ஜியின் அளவு லீற்றரில்தான் இருந்ததாம். அதனால்தான் லீட்டர் சூப்பர் ஸ்டார் என்கிறார் சிம்பு. வளர்ந்து வரும் நேரத்தில் அளவைக் குறைச்சுக்கலாமே என்று அட்வைஸ் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள் இவருக்கு. 'கோவா' வெளிவந்தால் பிரேம்ஜியின் உயரம் பல மடங்கு அண்ணாந்து பார்க்கிற அளவுக்கு இருக்கும் என்கிறார்கள். புகழ் போதையில் மிதந்தால் கூட தப்பில்லை. இதில் மிதக்க வேண்டுமா என்று அட்வைஸ் செய்கிறது கோடம்பாக்கம். காமெடி சப்ஜெக்டுகளை தெரிவுசெய்து அதில் தொடர்ந்து ஹீரோவாகவே நடிக்க வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிற பிரேம்ஜி, இந்த விடயத்திலும் ஒரு முடிவை எடுத்தால் தேறலாம்.


ரியா சென்

### விண்ணைத் தாண்டி வருவாயா இசை வெளியீட்டு விழாவில்
## கமல்ஹாசன்-ரஹ்மான்

'விண்ணை தாண்டி வருவாயா' படத்தின் ஒடியோவை லண்டனில் வெளியிட்டு பரபரப்பைக் கிளப்பினார் அப்படத்தின் இயக்குனர் கவுதம் வாசுதேவ மேனன். மீண்டும் ஒரு முறை சென்னையில் ஒடியோவை வெளியிட்டது இதே குழு. சிறப்பு விருந்தினர்களாக கமல்ஹாசனும், ஏ.ஆர். ரஹ்மானும் கலந்துகொண்டனராம்.

## சினிமாவில் கிளாமர்தான் எனது தெரிவு-ரீமாசென்

சினிமாவுக்கு கிளாமர் அவசியம். அதனால் கிளாமர்தான் என் தெரிவு என்று திறந்த மனதாகப் போட்டு உடைத்திருக்கிறார் நடிகை ரீமா சென்.

'ஆயிரத்தில் ஒருவன்' படத்தை முடித்து விட்டு அதன் பதிலுக்காகக் காத்திருக்கும் ரீமா தனது பேட்டியில்,

"தமிழில் சில படங்களில் நடித்திருந்தபோதிலும், எனக்கான அடையாளம் இன்னும் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் குறையை தற்போது 'ஆயிரத்தில் ஒருவன்' தீர்த்து வைக்கும் என்ற எதிர்பார்ப்புதான், சில படங்களின் வாய்ப்புகளை இழக்க காரணம்.

'ஆயிரத்தில் ஒருவன்' என்னை வேறு தளத்துக்குக் கொண்டு செல்லும் படமாக இருக்கும். இந்தப் படத்துக்குப் பின்தான் அடுத்தப் படங்களில் நடிக்கலாம் என இருந்தேன். விரைவில் அடுத்த படம் பற்றிய அறிவிப்புகள் வரும் என்று கூறியுள்ளார். கிளாமர் குறித்த, 'கேள்விக்கு, சினிமா என்றாலே கிளாமர் என்பது முக்கியமான ஒன்றாகி விட்டது. யதார்த்த சினிமாக்களில் கூட கிளாமரை எதிர்பார்க்கிறார்கள். கமர்ஷியல் சினிமாவில் நடிக்கும்போது கிளாமர் அவசியம். கிளாமராக நடிப்பதில் தவறு இருப்பதாக நினைக்கவில்லை. கதைக்குத்தானே கிளாமராக நடிக்கிறேன்'. அதனால்தான் அது என் தெரிவு - என்று கூறுகிறார் ரீமா.

# ஆயிரத்தில் ஒருவன்

## திரை விமர்சனம்



ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் உழைப்பில் 3 வருடங்களாக 32 கோடி ரூபா செலவில் செல்வராகவன் இயக்கியிருக்கும் படம்தான் ஆயிரத்தில் ஒருவன்

பண்டைய சோழர் காலத்து மன்னன் ஒருவன் பாண்டிய மன்னர்களுடனான போரின்போது தன் மகனை (இளவரசனை) ஒருவரிடம் கொடுத்து, எத்தனை ஆண்டுகளானாலும் இவ்னைக் காப்பது உன் பொறுப்பு என்றுவிட்டுப் போகிறார்.

பண்டைய சோழர்கள் இருந்த இடத்தைத் தேடிச் செல்லும் அகழ்வாராய்ச்சியாளர் பிரதாப் போத்தன் காணாமல் போகிறார். அவரைத் தேடும் குழு ரீமாசென் தலைமையில் பலத்த பாதுகாப்போடு செல்கிறது. கூடவே பிரதாப் போத்தனின் மகள் ஆண்ட்ரியாவையும் (அவரும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலிருக்கிறார்) அழைத்துச் செல்கிறார். வியட்நாம் அருகே இருக்கும் அந்த இடத்திற்குக் கப்பலில் செல்லும்போது உதவியாளர்களாக கார்த்தி தலைமையிலான குழு வருகிறது.

கப்பலிலிருந்து மாறி, இவர்கள் செல்லும் படகு ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் படகோட்டிகள் என்னதான் கொடுத்தாலும் இதற்கு மேல் வரமுடியாது என்று போய்விட, இவர்களே படகைச் செலுத்தி கரை நோக்கி செல்கிறார்கள்.

கரையை அடையுமுன்னே, கடலிலிருந்து வரும் ஒரு ஜந்து இவர்களை சாரமாரியாகத் தாக்க, பலர் மடிந்து விழ.. போகுமிடத்தின் விபரீதம் புரிய ஆரம்பிக்கிறது.

ஓலைச்சுவடியின் செய்தி மூலம், அந்த இடத்தை அடையுமுன் இதுபோன்ற ஏழு தடங்கல்களை இவர்கள் கடக்க வேண்டும் என்கிறார் ஆண்ட்ரியா. பலவித சிக்கல்களுக்குப் பிறகு, கடந்து சோழர்கள் இருந்த இடத்தை கார்த்தி, ரீமா, ஆண்ட்ரியா அடைகிறார்கள்.

அங்கே....

அந்த சோழர் பரம்பரை வாழ்ந்து கொண்டிருக்கிறது!

அதன்பிறகு என்ன நடந்தது? தஞ்சை மண்ணைத் தொட வேண்டும் என்று ஆண்டாண்டு காலமாய்க் காத்திருந்த அந்த சோழர்களின் ஆசை நிறைவேறியதா என்பதையெல்லாம் திரையில் கண்டு களியுங்கள்.

கொஞ்சம் சிக்கலான திரைக்கதை என்பதால் பலருக்கும் புரியாத வண்ணம் இருப்பதுதான் படத்தின் மைனஸ். அதுவும் படத்தில் பல இடங்களில் நவீனத்துவம் புகுந்து விளையாடியிருகிறது!

படத்தின் ஹீரோ சத்தியமாக ரீமா சென்தான்! கார்த்திக்கு வேலையே இல்லை. படத்தில் உதவி இயக்குநராக வருகிறார். அவர் வேலையும் படத்தில் அதுதான். ஹீரோவாச்சே என்பதற்காகக் கடைசியில் அவரை சோழர்களைக் காக்க வந்த தூதுவராகக் காட்டியிருக்கிறார்கள்.

எந்த நடிகையும் நடிக்கத் தயங்கும் பல காட்சிகளில் புகுந்து விளையாடியிருக்கிறார் ரீமாசென். பிரதாப் போத்தனைக் கண்டுபிடிக்க இவர் ஏன் பிரயத்தனப்படுகிறாரென்று பார்த்தால், இவர் சோழர்களைப் பழிவாங்க வந்த பாண்டிய வம்சத்தவர்!

மன்னர் பார்த்திபன் (ஆர்.பார்த்திபன்) கார்த்தி தலைமையில் சோழர்களுக்கும், அதிரடிப்படைக்கும் நடக்கும் போர் - தமிழ்சினிமாவிற்குப் புதிது. அந்தப் போர் முறையும், அதைப் படமாக்கிய விதமும் - ராம்ஜியின் கமராவுக்கு வாழ்த்துகள்.


படத்தில் பாராட்டப்பட வேண்டிய மற்ற இருவர், கலை வடிவமைப்பாளர் இரம் அலி. கலை இயக்குநர் சந்தானம். பண்டைய காலம், பண்டைய காலத்தவர்கள் வாழும் இடம் எல்லாவற்றையும் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள்.

இசையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே சிறப்பான பாடல்களால் மேலோங்கிவிட்டது. அதைவிட சொல்வதற்கு முடியாது. படத்தில் நில்லாடிய சபையெங்கே என்று பார்த்திபன் பாடும்போது, ஒரு மாதிரியான உணர்வு உள்ளே உருளுகிறது.

பிடிபட்ட சோழ மக்களை அதிரடிப்படை கையாளும் முறையும், பார்த்திபனின் பாத்திரப்படைப்பும் ஈழத் தமிழர்களின் நிலையைக் கண்முன் நிறுத்துகிறது.

மொத்தத்தில் 'ஆயிரத்தில் ஒருவன்' = ஆயிரத்தில் ஒன்று.

# ஸ்ரேயாவின் நிர்வாணப் போஸ்!



ஸ்ரேயா ஆபாச போஸ் கொடுப்பதில் இந்தி நடிகைகளை மிஞ்சி விட்டார்.

ஹைதராபாத்தில் கலண்டர் ஒன்றுக்காக அவர் போஸ் கொடுத்த படங்கள் இணையத்தளங்களில் பரவியுள்ளன. ஜாக்கெட் அணியாமல் முதுகு முழுவதையும் காட்டியபடி துணியால் முன் பகுதியை லேசாக மறைத்து, போஸ் கொடுத்திருக்கிறார். ஏறக்குறைய நிர்வாண போஸ் என்றே இதைக் கூறமுடியும். தமிழ் படங்களில் நடித்த முன்னணி கதாநாயகிகள் எவரும் இவ்வளவு துணிச்சலாக ஆபாச போஸ் கொடுத்தது இல்லை. ரீமாசென்னின் கவர்ச்சிப் படமும் இக்கலண்டரில் இடம்பெற்றுள்ளது. அவர் ஸ்ரேயா அளவுக்கு ஆபாசம் காட்டவில்லை. மொத்தத்தில் ஸ்ரேயாவிடம் தோற்றுவிட்டார் ரீமா சென் (காட்டுவதில்).

# மீண்டும் திலகன்

ஏர்சால், ருட்டை' என்று கட்டைக் குரலில் விஜயகாந்தை 'சத்ரியன்' படத்தில் மிரட்டிய திலகனை அவ்வளவு விரைவில் மறக்க முடியாது. திலகன் அதே பழைய கம்பீரத்துடன் தற்போது திரும்பியிருக்கிறார்.

ஒரு மனிதன் சாகும்போது அவனது உடல் எடையில் 21 கிராம் குறைவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுதான் உயிரின் எடை.. இந்த 21 கிராம் எடையை வைத்துக்கொண்டு மனிதன் என்னவெல்லாம் ஆட்டம் போடுகிறான் என்பதுதான் '21 கிராம்' படத்தின் கதை.

இதே பெயரில் வெளிவந்த அலெஜான்ட்ரோ கொன்சலஸ் இனாரிட்டு என்பவரின் '21 கிராம்ஸ்' படத்துக்கும் இந்தப் படத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதயத்தின் எடை '21 கிராம்' என்பதை வைத்து தனது படத்தை அலெஜான்ட்ரோ எடுத்திருந்தார். திலகன் நடிக்கும் '21 கிராம்ஸ்' கவிப்படையைப் பற்றியது படத்தின் கதை. திரைக்கதையை எழுதி இயக்குகிறார் இந்திரஜித். மதுரை கதையான 21 கிராம்ஸ் நாகர்கோயில் பகுதிகளில் படமாக்கப்பட்டு வருகிறது.

## அஜித்தின் வித்தியாசமான கெட் அப்



# ஆயுர்வேதி நயன்!



அசைஞ்சா தேரு, ஆடினா அலைகடல் என்று அழகா இருந்த நயன்தாராவுக்கு இப்போது கண்ணாடி பார்த்தாலே கவலையாக இருக்கிறதாம். (அவருக்கு மட்டுமா?) கொஞ்சம் புஷ்டியானால் அழகு கூடுமே என்றார்களாம் கூடவே இருக்கிற தோழிகளும், தோழர்களும். ஆனால், அதையெல்லாம் அந்த நேரத்தில் பிடிவாதமாக மறுத்து வந்த நயன் திடீரென்று வேறொரு முடிவுக்கு வந்திருக்கிறாராம். தன் கைவசம் இருக்கிற படங்களை முடித்துவிட்டு சுமார் ஒரு மாதம் ஓய்வெடுக்கப் போகிறாராம். இந்த நேரத்தில் கேரள ஆயுர்வேத சிகிச்சை செய்து உடலையும் மனதையும் முன்புபோல பொலிஷ் பண்ணிக்கொள்வதுதான் நயன்தாராவின் திட்டமாம். அரைச் செஞ்சரி வயதை எட்டிய, அல்லது தாண்டிய ஹீரோக்கள் எல்லாருமே இந்த ஆயுர்வேத முகாம்களில்தான் தஞ்சம் அடைகிறார்கள். இதையெல்லாம் கேள்விப்பட்டும் இத்தனை காலம் அதில் அக்கறை காட்டாத நயன் இப்போது சம்மதிக்க என்ன காரணம்? மனம் கவர்ந்தவரின் விருப்பமும் அதுவாக இருப்பதால் தானாம்.

# நீங்களும் வாழுங்கள்! எங்களையும் வாழவிடுங்கள்!

உண்மைக்கதை



எனது பெயர் ரெக்ஸ். பெயரை வைத்து என்னை ஒரு கிறிஸ்தவன் என எண்ணிவிடாதீர்கள். ஏனெனில், நான் மதம், மொழி, இன பேதமற்றவன். அப்படியிருக்க வீட்டார் எனக்குச் செல்லமாக வைத்த பெயர்தான் ரெக்ஸ். எனது காதல் கதையைக் கூறுவதற்கு முன்னே, எனது குடும்பம் பற்றியும் நிச்சயமாக உங்களுக்குக் கூறியாக வேண்டும். எனது அம்மாவின் வயிற்றில் நான் ஆறாவது பிள்ளை. நான் எனது அம்மாவின் வயிற்றில் இருக்கும்போதே அப்பா அம்மாவை விட்டுப் பிரிந்து போய்விட்டார். கஷ்டப்பட்டுப் பாலூட்டி என்னை இதுவரை ஆளாக்கியது எனது அம்மாதான். எனது மூத்த சகோதரர்கள் இருவர் பிறந்தபோதே இறந்துவிட்டனர். எனது அண்ணன் ஒருவன் சிறு வயதாக இருக்கும்போதே வீதியைக் கடந்து செல்கையில் ஏற்பட்ட விபத்தில் கால் ஊனம் ஆனான். எமது குடும்பத்திலே நான்தான் அழகான சுட்டிப் பையன்.

''கொடிது கொடிது இளமையில் வறுமை'' போல நான் சிறுவனாக இருக்கும்போது எனது குடும்பம் அனுபவித்த துயரங்களும் ஏராளம். அந்த வறுமை கூட எங்களுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால், ஆறு பிள்ளைகளைப் பெற்ற அம்மா சில காலங்களில் ஊரில் இன்னொருவருடன் தொடர்பு என்பதை நம்ப மறுத்த நான், அம்மா மீண்டும் கர்ப்பமாகியபோதுதான் அதை உண்மையென உணர்ந்துகொண்டேன். அந்த நேரத்தில்தான் அம்மாவும் எங்களை வெறுத்து ஒதுக்க ஆரம்பித்தா.

அப்பாவும் எங்களை ஏமாற்றிவிட்டார். அம்மாவும் தனது உடற் சுகம் ஒன்றுக்காக எங்களைக் கைவிட்டுவிட்டார். இப்படி ஒரு கொடுமை இந்த உலகத்தில் எந்த மனிதருக்குமே வேண்டாம். ஏனெனில், அது எங்களுடனேயே போய்விடும் என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. நான் தவ்வாக இருக்கும் பிராயத்தில் அம்மாவின் மடியில் விழுந்து உருண்டு விளையாடுவதில்தான் எனக்கு அதிக பிரியம். அப்படி ஒருநாள் நான் எனது அம்மாவோடு கொஞ்சி விளையாடும்போதுதான் அம்மா கூறினார், ''அப்படியே நீ உனது அப்பனை உரிச்சுப் படைச்சமாதிரி இருக்கிறாய்...'' என்று. அப்போதுதான் நான் எண்ணிக்கொண்டேன் அம்மா அப்பாவை இன்னும் மறக்கவில்லை என்று. அப்பா மீது அம்மா வைத்திருந்த அதிக பாசத்தின் வெளிப்பாடுதானே நாங்களெல்லோரும் என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு.

அம்மா இன்னொரு நபர் மீது காதல் கொள்ளுவதற்கும் காரணம் அவர்தான் எங்கட ஊரின் பெரிய ஹீரோவாம். எனக்கு நினைவு தெரிஞ்ச நாட்களில் அம்மா வீட்டுக்கு வெளியே போகும் போது அந்த ஹீரோ தனது சகாக்களோடு அம்மாவுக்குப் பின்னே சுற்றியபடி வீதிகளில் போடும் கூச்சல் குழப்பம் ஏராளம். இந்தக் கண்றாவிகளைக் காணக்கூடாது என்பதற்காக அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தமது ஆட்களை வீட்டை விட்டு வெளியில் கூட வரவிடுவதில்லை.

எனக்கு மிச்சமாகவிருந்தவர்கள் இரண்டு சகோதரிகள். அவர்களும் வளர்ந்து பெரிசாகிவிட்டால் அம்மாவின் பழக்கம் தொற்றிவிடும் என்பதற்காகவோ என்னவோ எங்கள் வீட்டிலுள்ள ஏனையவர்கள் சிறு வயதிலேயே அவர்களைப் பிரித்துவிட்டனர். கால் ஊனமான எனது அண்ணனைக்கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை.

இந்தக் கவலைகளையெல்லாம் மறப்பதற்காக எங்கள் வீட்டுக்கு வரும் சதாசிவத்தாரின் பிள்ளைகளுடன் நான் அதிகம் ஓடியாடி விளையாடுவதுண்டு. அவர்களின் பந்து விளையாட்டில் நான்தான் என்றைக்குமே கீப்பர். சதாசிவத்தின் பிள்ளைகளுடன் விளையாடும் இன்பமே தனி. எனது அழகோ அல்லது எனது சுட்டித்தனமோ சதாசிவத்துக்கு மிகவும் பிடித்துவிட்டதைப்போல சதாசிவம் குடும்பத்தார் என்னைத் தங்களுடன் கூட்டிக்கொண்டு போய்விட்டனர். சதாசிவம் வீட்டுக்குப் போனபிறகுதான் என் மனத்திலிருந்த கவலை கொஞ்சம் கொஞ்சமாக எனது மனதை விட்டு மறைய ஆரம்பித்தது. நானும் எனது குடும்பத்தை மறந்து அங்கேயே நிம்மதியாக வாழ ஆரம்பித்தேன்.

நாட்கள் வாரங்களாகிப் பின் வருடங்களாகின. நானும் ஒரு நல்ல ஆம்பிளையாக வளர்ந்து ஆளாகினேன். எனது அழகிய மிடுக்கு, எனது மீசையழகு, எனது உடலழகு என்பவற்றைப் பார்த்து என்னிடம் மயங்காத பெண்களே இல்லை எனலாம். இத்தனைக்கும் சதாசிவம் வீட்டில் நான் பார்த்து வந்தது ஒரு சாதாரண காவற்காரன் வேலைதான். ஆனால், சதாசிவம் குடும்பத்தவர்கள் என்னை ஒரு காவற்காரன் போலன்றி தங்கள் வீட்டில் ஒரு பிள்ளையாகவே கவனித்து வந்தனர். இத்தனைக்கும் நான் அவர்களுக்குச் செய்த அர்ப்பணிப்புகள் ஏராளம். மழை குளிர் என்றும் பாராமல் நான் அவர்களுக்குச் செய்த சேவைகள் ஏராளம். ஒரு பொழுது சதாசிவத்தின் இளைய மகள் சாதனாவைப் பாம்பு கடிக்க வந்தபோது, கணப்பொழுதில் பாய்ந்தடித்து பாம்மைப் கொன்றிருக்கிறேன். சதாசிவத்தின் வீட்டுக்கு வரும் தெரிந்தவர்களிடம் மிக அன்பாகவும், தெரியாதவர்களிடம் மிகக் கண்டிப்பாகவும் நான் நடந்துகொள்ளும் விதத்தைப் பாராட்டி சதாசிவம் எனக்குப் பிடித்த உணவு வகைகளை வாங்கித் தருவதற்கும் தவறுவதில்லை. அதே போலத்தான் நானும் ''நன்றி மறப்பது நன்றன்று'' என்பதற்கிணங்க அந்த வீட்டுக்காக நாயாக உழைத்துக்கொண்டிருந்தேன்.

சதாசிவம் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த வெறும் வீடு ஒன்றுக்கு ஒரு குடும்பம் குடிவந்திருந்தது. அவர்கள் குடி வந்து ஒரு வாரமாகியும் நான் அந்த வீட்டுக்குப் போயிருக்கவில்லை. சரி ஒருமுறை எட்டிப்பார்ப்பம் என்று எண்ணியவாறு ஒரு நாள் அந்த வீட்டுக்குள் நுழைந்தேன். நான் நுழைந்தநேரம் அந்த வீட்டிலிருந்த அனேகமானவர்கள் தமது கடமை நிமித்தம் வீட்டிலிருக்கவில்லை. அப்போது அந்த வீட்டில் என் கண்களுக்குப் பட்ட காட்சிகள் ஒருமுறை என்னையே திக்குமுக்காட வைத்தன.

அந்த வீட்டுப் பெண்பிள்ளையொருத்தி மிகமிக அழகானவள். அவளுக்குப் பதினாறு வயதுதான் இருக்கும். ஒரு அரைக் காற்சட்டையும் மெல்லிய துணியிலான ஒரு குட்டை பெனியனும் அணிந்திருந்தாள். அவளது அங்கங்கள் அத்தனையும் என் கண்களுக்குப் பளிச்சென்று இருந்தன. அவளது மேனியழகு என்னை வாட்டியெடுத்தது.

அவளது காலடியில் போய்ச் சரணடைந்து அவளின் அழகில் மண்டியிடலாம் போல இருந்தது எனக்கு. ஓரமாக மறைந்து நின்று இதயத்துடிப்பின் பலமான இடியோடு அவளின் அழகை ரசித்துக்கொண்டிருந்தேன். எத்தனையோ பெண்கள் எனது அழகில் மயங்கி என்னிடம் மண்டியிட்டிருக்கிறார்கள். அவர்களை நான் அணுவணுவாக அனுபவித்தும் இருக்கிறேன். ஆனால், அந்தத் தோழியின் அழகில் என்னைப் பறிகொடுத்த எனக்கு அவள் மீது எந்தக் காம உணர்வும் ஏற்படவில்லை. மாறாகக் காதல் ரசம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. இந்தப் பிறப்பில் அவள்தான் எனது ஒரே காதலி என்று மனதில் ஒரு வைராக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டேன்.

அவளது பெயர் யூலி என்று அறிந்துகொள்ளவே எனக்கு ஒரு வாரமாகியது. அவளிடம் எனது காதலைச் சொல்லுவதற்கு ஒரு மாதமாகியது. அவள் என்னைப் புரிந்துகொள்ள இரண்டாவது மாதமும் அவள் என்னைத் தனது காதலனாக ஏற்க மூன்றாவது மாதமும் கடந்தோடின. எமது காதலைக் கண்ணியமாகவும், யாருக்கும் தெரியவராதபடி கவனமாகவும் (எமது காதலை) நாம் வளர்த்து வந்தோம். எனது காதலி யூலி மூலமாகத்தான் அந்தப் பதினாறு வயதுப் பெண்ணின் பெயர் ரீட்டா என்பதையும் நான் அறிந்துகொண்டேன். அந்த வீட்டில் ரீட்டாவும் எனது யூலியும் தூங்குவது ஒரே கட்டிலில்தான்.

ஆறுமாதமாக எமது காதலை கண்ணியமாக வளர்த்து வந்த எங்களுக்கு முதல் எதிரியாக அமைந்ததே ஓர் இரவில் பெய்த அடைமழைதான். நான் எனது வீட்டிலிருந்தேன். யூலி தனது வீட்டிலிருந்தாள். நேரம் இரவு எட்டு மணியிருக்கும். மழை சோ... எனப் பொழிந்துகொண்டிருந்தது. காதல் மனங்களை மழைக்குளிர் குடைந்துகொண்டிருந்தது. எனக்கு ஒருமுறை யூலியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. எமது வீட்டு வேலியிலிருந்து சிறு பொட்டுக்குள்ளால் நான் யூலி வீட்டுக்குள் நுழைந்தேன். அதேபோல், யூலியும் என்னையே எதிர்பார்த்திருந்தவள் போல என்னைக் கண்டதும் என்னிடம் ஓடிவந்து என்னை முத்தமிட்டாள். நான் யூலியைக் கூட்டிக்கொண்டு அவர்கள் வீட்டுக்குப் பின்னால் விறகுகள் அடுக்கப்பட்டிருக்கும் கொட்டகைக்குள் நுழைந்தேன். அடைமழை எங்களது உள்ளங்களில் ஏதோ உணர்ச்சியைத் தூண்டிக்கொண்டிருந்தது.

அன்று இரவு எட்டு மணிக்கு அந்த வீட்டினுள் நுழைந்திருந்த எனக்கு நேரம் பத்து மணியைக் கடந்தது கூடத் தெரிந்திருக்கவில்லை.

எங்கள் இருவருக்கும் இருந்த காதல் தொடர்பு காரணமாக எங்களது வீட்டாருக்கிடையே இருந்த உறவுகள் வாய்த்தர்க்கம் வரை சென்றன. இறுதியில் இரு வீட்டாருக்கும் ஏற்பட்ட போரைத் தணித்து வைத்ததே முன்வீட்டு முத்தையா மாஸ்டர்தான்.

யூலியின் ஞாபகங்கள் என் மனதிலே உருகிய தாரை ஊற்றிக்கொண்டிருந்தன. நானும் யூலி வீட்டுக்குப் போக முடியாதவாறு யூலி வீட்டு வேலிகள் முட்கம்பிகள் கொண்டு அடைக்கப்பட்டிருந்தன. அதே போலத்தான் எனது வீட்டிலும் என்னைக் கட்டிப்போடும் கட்டுப்பாடுகள் அதிகம். வீட்டிலே யாருமே இல்லாத பொழுதுகளில் நாங்கள் இருவரும் எமதெமது வீடுகளிலிருந்தவாறே குரலெழுப்பிப் பேசிக்கொள்வதுமுண்டு. யூலியும் என் மீது வைத்திருந்த காதலை மறக்க முடியாமல் வேதனையில் வெந்துகொண்டிருந்தாள். எங்களது முதல் ராத்திரியும் இறுதி ராத்திரியும் ஒரே ராத்திரியாக அமைவதற்குக் காரணமான அந்த அடைமழையை நான் அடிக்கடி எண்ணி வெறுத்துக்கொள்வதுமுண்டு.

அதற்குப் பின் ஆறு மாதங்கள் இருவரும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்க்காமலேயே பேசிக்கொண்டிருந்தோம். இருவரது வீடுகளுக்கும் இடையேயும் ஒரு வேலிதான் என்றாலும், நாங்கள் ஒரு வரை ஒருவர் பார்க்கமுடியாதபடி இரும்புத் தகரங்கள் எங்களது மனதில் முட்கம்பிகளைச் சுற்றியிருந்தன. ஆனால், அதற்குப் பின்னர் யூலியை அனுபவிக்க எனது மனம் எள்ளளவுகூட எண்ணியதில்லை.

ஆறு மாதம் கடந்து ஏழாவது மாதம் பிறந்தது. எங்களது காதல் உள்ளங்கள் முள்வேலிகளில் மாட்டிக் குருதியைச் சிந்திக்கொண்டிருந்தன. ஏழாவது மாத நடுப்பகுதியைக் கொடிய குண்டுகளும் ஷெல்களும் குதறிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் எங்களது ஊரை நோக்கி ஆமி முன்னேறும் செய்தியை எங்களது ஊருக்குள் விழுந்து வெடித்த ஷெல்கள் உணர்த்தி நின்றன.

ஷெல்கள், குண்டுகள், துப்பாக்கிச் சன்னங்கள் என்றாலே எனக்கு அதிக பயம். பயப் பீதியில் நான் வீட்டை விட்டு வெளியேறி ஓடிவிட்டேன். சில மணி நேரம் கழித்து சத்தங்கள் சற்று ஓய்ந்திருந்ததால் மீண்டும் வீட்டுக்கு வந்தேன். வீட்டில் யாரும் இருக்கவில்லை. சதாசிவம் குடும்பத்தவர்கள் இடம்பெயர்ந்து வெளியேறியிருந்தனர். யூலி வீட்டுப் பக்கமாக ஓடினேன். எங்களது வீட்டு வேலிக்கருகில் விழுந்து வெடித்த ஷெல் ஒன்று எமது காதலுக்குத் தடை போட்டிருந்த முள் வேலியைத் தூக்கியெறிந்திருந்தது. யூலி வீட்டிலும் யாரும் இருக்கவில்லை. ஆனால், அந்த வீட்டிலே எனது யூலி மட்டும் தனியாக நின்று தவிப்பது போல எனது மனதில் ஏதோ ஒரு உணர்ச்சி மேலிட்டுக்கொண்டிருந்தது. வீழ்ந்து சிதறிக் கிடந்த முட்கம்பி வேலிகளுக்கு மேலாகப் பாய்ந்தபடி யூலி வீட்டுக்குள் நுழைந்து அங்கே யூலியைத் தேடினேன். ஆனால், அங்கே யூலி இருக்கவில்லை. சரி, எங்களிருவருக்கும் முதலிரவு நடந்த இடத்தை ஒருமுறையேனும் பார்த்து ஆறுதல்படலாமென எண்ணியவாறு அந்த இடத்தை நோக்கி ஓடினேன். அங்கேயும் ஷெல் விழுந்து விறகுக் கட்டைகள் சிதறிக் கிடந்தன. இத்தனை வருடமும் நாயாக அலைந்து திரிந்த எனது வாழ்க்கையில் நான் பார்த்த கொடூரக் காட்சிகள் என் மனதை வாட்டி நின்றது.

சிதறிக் கிடந்த விறகுக் கட்டைகளினுள்ளே எனது யூலி மறைந்திருக்கலாமென எனது உணர்வுகள் எனது மனதுக்கு எடுத்துச் சொல்லும் அதே நொடியில் எனது கண்கள் கண்ட காட்சிகள் என்மீது ஒரு கபீர்க் குண்டே விழுந்து வெடித்தது போலிருந்தது. எனது மனதின் வேதனையை அதிகரித்தபோது எனது யூலி ஷெல் பட்டுச் சிதறிப்போய் சின்னாபின்னமாகக் கிடந்தாள். அவள் என்னை அடிக்கடி முத்தமிட்டுக்கொள்ளும் அழகிய மூக்கு, சிதைந்து போயிருந்த தலையின் முன்புறமாக கருகியபடியிருந்தது. அவளது மூக்கின் மேல் இலையான்கள் மொய்த்தபடி இரைந்துகொண்டிருந்தன.

******

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபால் அமைந்த ஒரு செழிப்பான கிராமமே குரும்பசிட்டி. அக்கிராமத்துக்கென்று தனித்துவம் மிக்க பாரம்பரியம் இருந்துள்ளது. பல்வகைப்பட்ட அம்சங்களை உள்ளடக்கிய அக்கிராமத்தின் இலக்கியப் பாரம்பரியம் பற்றி நோக்குவதே இக்கட்டுரை.

# இலக்கிய பாரம்பரியமிக்க குரும்பசிட்டி

குரும்பசிட்டியின் இலக்கியப் பாரம்பரியம் பற்றி நோக்கும்போது, கனக. செந்திநாதன் தொடக்கம் அ.பார்த்திபன் வரை அவர்களது எழுத்துக்களில் ஊடுருவி வந்திருக்கும் ஈழத் தமிழரின் பண்பாடு, கலாசாரத்தைப் பேணுதல் போன்றவற்றை அவதானிக்கலாம். இந்தப் பண்பாட்டை முன்னெடுத்தவர்களாக பொன்.பரமானந்தர், நா.பொன்னையா ஆகியோரைக் குறிப்பிடலாம். குரும்பசிட்டி எழுத்தாளர்கள் பொழுதுபோக்காகவோ அல்லது ஆத்ம திருப்திக்காகவோ இலக்கியம் படைக்கவில்லை. பால் உறவுகள் பற்றிய இலக்கியம் உருவாகவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவே இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அந்த வகையில் ஈழத்து இலக்கியத் தனித்துவத்தை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் குரும்பசிட்டி என்ற ஊருக்கு ஓரளவுக்காவது பங்கு இருந்துள்ளது.

குரும்பசிட்டியில் ஓர் இலக்கியப் பரம்பரையை உருவாக்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஆசிரியர் பொன். பரமானந்தர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லாத போதிலும், ‘திருமகள் அழுத்தம்’ என்னும் அச்சுயந்திரசாலையை நிறுவி, அதன் மூலம் நூலாக்கப் பணியில் பெரிதும் ஈடுபாடு காட்டிய பெருந்தகை பொன்னையா அவர்களே குரும்பசிட்டி இலக்கியப் பாரம்பரியத்தின் கதாநாயகர் ஆவார். யாழ்ப்பாணத்தில் ‘ஈழகேசரி’ என்னும் பத்திரிகையை ஆரம்பித்து, ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றினார். பல இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கிய வகையில் அவரின் பணி மகத்தானது. அவர் காட்டிய இலக்கிய பாரம்பரியத்தைக் கட்டி வளர்த்தவர்கள் பலர். அவர்களில் ஒரு பகுதியினர் குரும்பசிட்டி மண்ணின் மைந்தர்களாவர்.

குரும்பசிட்டியின் இலக்கியப் பரம்பரையினரைப் பொதுப்பட மூன்று பிரிவினர்களாக வகுத்து அடையாளம் காட்டியுள்ளனர். அவை முறையே மூத்த தலைமுறை, இரண்டாவது தலைமுறை, இளைய தலைமுறை என்ற காலவரையறையை அவதானித்து வகுத்துள்ளார்கள். இரசிகமணி கனக. செந்திநாதன், கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, வை.இளையதம்பி (இதம்), பண்டிதர் வ.நடராசா, மு.க.சுப்பிரமணியம், கவிஞர் வி.கந்தவனம் ஆகியோரை மூத்த தலைமுறை இலக்கியப் பரம்பரையை சேர்ந்தவர்கள் என்பார்கள். பேராசிரியர் இரா.கனகரத்தினம், மு.திருநாவுக்கரசு, வேல் அமுதன், எம்.கே.எஸ்.சிவகுமாரன், ஆ.மகாதேவன் என்போரை உள்ளடக்கியது இரண்டாவது தலைமுறையாகும். இளைய தலைமுறையினரின் தோன்றலாக அ.பார்த்திபன் முன்நிற்கின்றார். தொடர்ந்தும் அப்பட்டியல் நீண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இத்தகைய மூன்று பிரிவினர்களினதும் ஆக்கங்களைப் படித்துச் சுவைத்தோர், அவற்றின்பால் எழுந்து நிற்கின்ற ஒருவகையான ஒருமைப்பாட்டை உணர்ந்து கொள்வார்கள்.

இவர்களின் படைப்புகள் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள், அதற்காக எடுத்துக்கொண்ட பொருள், எழுந்த பகைப்புலம் போன்றவற்றை நோக்கும் போது ஒத்த தன்மையைக் காண முடிகின்றது. இதேவேளை, ஈழகேசரிப் பொன்னையாவால் முன்வைக்கப்பட்ட சமபந்திபோசனம், சாதிய எதிர்ப்புக்கான நடவடிக்கைகள் போன்ற முற்போக்கான சிந்தனைகளுக்கு குரும்பசிட்டி மண் எவ்வளவுக்கு உதவியுள்ளது என்பது ஆய்வுக்குரியதே. காந்திய வழி நின்று, ‘எம்மதமும் சம்மதமே’ என்ற சமரச ஞானமார்க்கத்தில் நின்று குரும்பசிட்டி சன்மார்க்க சபையை நிறுவிய பொன்னையா அவர்கள் அவை சம்பந்தமான நூல்களையும் வெளியிட்டார்.

ஆறுமுகநாவலர் ஆரம்பித்து வைத்த சைவசமய மறுமலர்ச்சி இயக்கத்தின் பிரதிநிதியாகச் செயற்பட்டவர் குரும்பசிட்டி தந்த பொன். பரமானந்தர் ஆவார். இவர் குரும்பசிட்டிக்கு ஆற்றிய பணிகளுடன் மிகவும் முக்கியமானது, சைவசமயச் சூழலில் கல்வி கற்க ஒரு பரம்பரையினரை உருவாக்கியமையே ஆகும். கிறிஸ்தவ மதம் ஆங்கில அரசாங்கத்தினரால் முதன்மைப்படுத்தப்பட்ட அக்காலகட்டத்தில், 1900 ஆம் ஆண்டு ‘மகாதேவ வித்தியாசாலை’ என்ற பெயரில் ஒரு பாடசாலையை நிறுவினார். இதனால் இவ்வூரில் தேசிய உணர்வும், விடுதலை வேட்கையுங் கொண்ட விழிப்புணர்ச்சி மிக்க ஒரு படித்த தலைமுறையினர் தோன்ற ஏதுவாகியது. இவரின் பணிகளை இவரது மாணாக்கருள் ஒருவரான கனக. செந்திநாதன் முன்னெடுத்துச் சென்றார்.

பொன். பரமானந்தர் கல்வி மேம்பாட்டுக்கு மாத்திரமன்றி, கலைகளை வளர்ப்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்துள்ளார். கற்பித்தலுடன் இளம் பிள்ளைகளுக்குக் கோலாட்டத்தை ஒரு கலையாகப் பழக்கினார். அதற்கு ஏற்ற வகையான பாடல்களையும் அவரே யாத்தார். ‘கயிற்றுக் கோலாட்டம்’ என்ற புதுமையான கலை ஒன்றை இவரே ஆக்கி, அதை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். புராண படலம் வாசித்து, அதற்குப் பயன் சொல்லும் வழக்கத்தைக் குரும்ப சிட்டியில் ஆரம்பித்து வைத்தவரும் இவரேயாவார். இதற்கென ஒரு மாணாக் கர் பரம்பரையையே உருவாக்கினார். அதனால் அப்பணி தொடர அடிநாதமாக விளங்கினார். ‘இந்து வாலிபர் சங்கம்’ என்ற அமைப்பை நிறுவி மாதம்தோறும் சமயப் பெரியார்களை அழைத்து பிரசங்கங்களை ஏற்பாடு செய்து நடத்திவந்தார்.

கவிதை இயற்றிப் பாடும் ஆற்றல் பெற்றவராகிய இவர் அக்காலத்தில் பெருவழக்குப் பெற்றிருந்த பல ‘சரமகவி’களைப் பாடியுள்ளதோடு, கதிர்காமக் கந்தன் மீதும் ஒரு பதிகம் பாடியுள்ளார். நாடகத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர், பாடசாலையில் நடைபெறும் வருடாந்த விழாக்களில் நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளார். ‘தருமிக்குப் பொற்கிளி அளித்தமை’, ‘குமணன்’, ‘பிரகலாதன்’ போன்ற இலக்கிய நாடகங்களைக் குறிப்பிடலாம். இவர் கல்வி, சமயம், கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் என்ற வகையில் குரும்பசிட்டி இலக்கிய பாரம்பரியத்தின் பிதாமகனெனக் கொள்கின்றார்கள்.




குரும்பசிட்டி மண் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒருவரான நா.பொன்னையா தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் பெருமைக்குரியவையாகும்.

அச்சுயந்திரசாலை நிறுவியமை, நூல் வெளியீடுகள் செய்தமை, ஈழகேசரி பத்திரிகையை ஆரம்பித்தமை போன்ற பெரும்பணி களை ஈழகேசரி பொன்னையா மேற்கொண்டிருந்தார். ஈழகேசரியின் இருபத்தெட்டு வருடகால நீட்சியின் பயனாக ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியையும், குரும்பசிட்டியின் இலக்கியப் பாரம்பரியத்தின் ஒரு பிரதான கூறையும் அறிந்து கொள்ள முடியும். 1930 இல் தொடங்கப்பட்ட ஈழகேசரிப் பத்திரிகை யின் பணி ஈழத்து இலக்கிய வரலாற்றுடன் இரண்டறக் கலந்துள்ளமை ஈண்டு கவனிக்கற்பாலது.


1926 இல் ‘தனலக்குமி புத்தக சாலை’ யையும், 1929 இல் ‘திருமகள் அழுத்தகத்தையும்’ ஆரம்பித்து பாடப் புத்தகங்களையும், சமய நூல்களையும் வெளியிட்டார். நூலாக்கப்பணி என்பது இலகுவானதல்ல. தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பிழையின்றி வெளியிடும் பாரம்பரியத்தை நா.பொன்னையா முன்னெடுத்துச் சென்றுள்ளார். சுமார் நூறு நூல்களுக்கு மேல் வெளியிட்டுள்ளார். ஆத்திசூடியில் தொடங்கி தொல்காப்பியம் வரை புத்தகங்களாக வெளியிட்டு, பண்டிதமணி கணபதிப்பிள்ளை போன்றோரின் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார்.

1934 இல் குரும்பசிட்டியில் ஆரம்பிக்கப்பட்ட சன்மார்க்க சபை, நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதும் வெளியீட்டு விழாக்களை நடத்தி எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிப்பதும் ஆகிய அதன் பணிகளை மேற்கொண்டிருந்தது. ‘மத்தாப்பு’ என்னும் குறுநாவல், வி.கந்தவனம் எழுதிய ‘இலக்கிய உலகம்’ பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா தொகுத்த ‘கனக செந்திநாதனும் தமிழ் மரபு விமர்சனமும்’ ஆகியவை சன்மார்க்க சபையின் வெளியீடுகளே. ஈழத்துத் தமிழ் மக்களின் தனித்துவமான கலை, இலக்கியம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றைக் கட்டிக் காப்பதிலும், பேணி வளர்ப்பதிலும் சன்மார்க்க சபை கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றது.

ஆசிரியர் பொன். பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டியில் ஓர் இலக்கியப் பரம்பரை உருவாகுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிவிட, அத்தகைய ஒரு பரம்பரையினை நடைமுறையில் உண்மையாக உருவாக்கிவிட்டவர் நா. பொன்னையா அவர்களே. அதனால்தான் அவரைக் குரும்பசிட்டியின் இலக்கியப் பாரம்பரி யத்தின் நாயகன் என்று சொல்கிறார்கள்.

குரும்பசிட்டி இலக்கியப் பாரம்பரியத்தின் மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் முதன்மையானவராக கனக. செந்திநாதன் முன்நிற்கிறார். இத் தலைமுறையைச் சேர்ந்த சிலர் பழமையின் பாதுகாவலர்களாகக் காணப்பட வேறு சிலர் பழமையில் காலூன்றி நின்று புதிய மாற்றங்களையும் வரவேற்றவர்களாகவும் இருந்துள்ளனர். கனக. செந்திநாதன் அவர்கள் நவீன தமிழிலக்கியத்தின் சகல துறைகளிலும் கால் பதித்தவர். குரும்பசிட்டியின் இலக்கியப் பாரம்பரியத்தை முன்னெடுக்க இலக்கணம் வகுத்த ஆளுமையின் இருப்பிடம் என்று கூறுவாரும் உண்டு. ✱

---



# இலக்கியமும் கொள்கையும்

தமிழ் மொழியைப் பொறுத்தவரை இலக்கியம் கொள்கையை - குறிக்கோளை - நோக்கத்தை - பிரசாரத்தை பொருளாகக் கொண்டிருக்கக் கூடாது என்ற வாத்திற்கு இடமில்லை. எந்த நூலை எடுத்துக் கொண்டாலும் அவை பிரசாரத்தையும் அடிப்படையாகக் கொண்டவை என்பதில் ஐயமில்லை.

## திருக்குறள்

இதில் கூறப்படும் அறங்கள் அனைத்தும் மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டுவதற்குத்தான் என்பதை மறுப்பவர் யார்? ஆகவே குறள் நூல் கொள்கையை வலியுறுத்துவதற்காகத்தான் தோன்றியது என்பதில் ஐயமில்லை. அனைவரும் போற்றத்தக்க அரிய கருத்துக்களை அள்ளி அள்ளித் தருவதி னால்தான் குறள், உலகம் போற்றும் நூலாக விளங்குகிறது.

## சிலப்பதிகாரம்

மக்கள் மனதில் சில கொள்கைகளைப் புகுத்துவதற்காகவே சிலப்பதிகாரம் எழுந்தது. அது குறிப்பாக மூன்று கருத்துக்களை முன்வைக்கின்றது.

1. அரசியலில் தவறு செய்த ஆட்சியாளர் தப்பித்துக்கொள்ள முடியாமல் அறமே எமனாகத் தோன்றி அவரை அழிக்கும்.

2. புகழ் பெற்ற பத்தினிப் பெண்டிரின் பெருமையை வானவர்களும் போற்றிக் கொண்டாடுவார்கள்.

3. பழவினையை மீற முடியாது.

ஆகவே சிலப்பதிகாரம் சில கொள்கைகளை, கருத்துக்களை மக்களிடம் பரப்பவே தோன்றிய நூல் என்பதை மறுப்பதிற்கில்லை.

## மணிமேகலை

புத்த தருமத்தைப் போதிப்பதே மணிமேகலையின் நோக்கம். எல்லா மதங்களையும் விட புத்த தர்மமே உயர்ந்தது என்பதை எடுத்துக் காட்டுவது மனிமேகலையின் கொள்கை. இதை மணிமேகலையில் ஆதிமுதல் அந்தம் வரை காணலாம். உலகில் உள்ள மக்கள் யாரும் பட்டினி கிடத்தல் கூடாது; எல்லா மக்களும் உணவு உண்டு இன்புற்று வாழவேண்டும். யாரும் பட்டினி கிடந்து சாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அறங்களில் சிறந்தது பசிப்பிணியால் வாடுவோருக்கு உணவளித்துக் காப்பதுதான் என்ற கொள்கையை மணிமேகலை வலியுறுத்துகிறது.

## கம்பராமாயணம்

‘அறம் வெல்லும் பாவம் தோற்கும்’ என்பது இராமாயணத்தின் மூலக்கொள்கை. இவ்வுண்மையை வலியுறுத்தவே இராமாயணம் எழுந்தது.

## பக்திப் பாடல்கள்


தேவாரப் பாடல்களை எடுத்துக் கொண்டால் பக்தி மார்க்கத்தை பரப்புவதே அவர்களின் நோக்கம். அறம் என்ற ஒன்றையே போதித்த புத்த, சமணர்களின் போக்கை வெறுக்கும் பாடல்களையும், சிவபெருமானைப் போற்றுவதாலேயே எல்லா இன்பங்களையும் பெறமுடியும் என்று வலியுறுத்தும் பாடல்களையும் தேவாரங்களில் காண்கிறோம். சிவபக்தியைப் பரப்புவதை அடிப்படையாகக் கொண்டதே தேவாரம்.

பிரபந்தப் பாடல்களை எடுத்துக் கொண்டாலும் அவைகளும் வைணவ சமயத்தையே மக்களிடம் பரப்புகின்றன. மக்களை திருமாலிடம் ஈடுபடும்படியே கூறுகின்றன. வைணவ சமயத்தை வளர்ப்பதும், திருமாலிடம் பக்தி செய்யும் படி அறிவுறுத்துவதுமே பிரபந்தங்களின் அடிப்படைக் கருத்து. ✱

# இது சிந்திப்பதற்கான தருணம்!

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே இருக்கின்றன. பெரும்பாலான கட்சித் தாவல்கள் மற்றும் கூட்டணியமைத்தல் செயற்பாடுகள் எல்லாம் ஓரளவு முடிவுக்கு வந்திருக்கின்றன. தபால் மூல வாக்களிப்பும் நிறைவு பெற்றுள்ளது. மக்கள் வாக்களிப்பே யார் அடுத்த ஜனாதிபதி என்பதைத் தீர்மானிக்கப்போகின்றது.







வாக்களிப்புக்குத் தயாராகும் முன் மககள் சில விடயங்களைச் சிந்திக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாக தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே மீண்டும் வேட்பாளராகக் களமிறங்குகிறார். தேசிய சுதந்திர முன்னணி (விமல் வீரவன்ஸ), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி. (டக்ளஸ் தேவானந்தா) உள்ளிட்ட முக்கிய கட்சிகள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துள்ளன. மஹிந்த இப்போது தமிழில் பேச முயற்சி செய்து தமிழ் மக்களைக் கவர வியூகம் வகுத்து வருகிறார். அவரைப் பற்றிய வாதப் பிரதிவாதங்களுக்கும் அப்பால் இலங்கை வரலாற்றில் தமிழில் பேச முயற்சியேனும் செய்தவர் என்ற வகையில் பாராட்டாமலிருக்க முடியாது.

எதிர்க்கட்சிகளின் கூட்டணி சார்பில் முன்னாள் முப்படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகா வேட்பாளராகக் களமிறங்குகிறார். மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்கள் பிரிவு, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், மேலக மக்கள் முன்னணி (மனோ கணேசன்) உள்ளிட்ட பல கட்சிகள் எதிரணியின் கூட்டணியில் இணைந்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரு தரப்புகளுடனும் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்திய பின்பு பொன்சேகாவை ஆதரிக்கத் தீர்மானித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் பிரதான வேட்பாளர்களுடன் சேர்த்து 22 பேர் களமிறங்கியுள்ளனர். பிரதான இரு கட்சிகளினதும் கூட்டணியானது மக்கள் நலன் கருதியதா அல்லது அரசியல் நலன் கருதியதா என்று கேட்டால் அரசியல் நலனை மட்டுமே முற்று முழுதாகக் கொண்டது என சந்தேகமின்றிக் கூறலாம். ஏதாவதொரு கட்சியைச் சார்ந்திருப்பதன் மூலம் அக்கட்சி வெற்றிபெறும் பட்சத்தில் பதவிகளையும் இதர நலன்களையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றன. முன்னர் மிகத் தீவிரமாக எதிர்வாதம் பேசிக்கொண்டிருந்த கட்சிகள் இன்று ஒரே கூட்டணியில் இருக்கின்றன. இதற்கு நல்ல உதாரணம் ஜே.வி.பி எதிர்க்கட்சியின் கூட்டணியில் இணைந்துள்ளமை ஆகும்.

ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஜூன் 15, 2008 இல் லங்காதீப (சுடர் ஒளி தமிழாக்கப் பதிப்பு ஜூன் 24, 2008) பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் ஒரு பகுதி இவ்வாறு அமைகிறது.

கேள்வி : ***நீங்கள் விரும்பினால் மீண்டும் ஒருமுறை அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு கூட்டணியொன்றை உருவாக்கிப் போட்டியிட இயலும். அல்லது ஐ.தே.கட்சி கூறுவதுபோன்று ஒரு பொது எதிரணி என்ற வகையில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து அரசுக்கு எதிராகப் போட்டியிட முடியும். இவை குறித்து தாங்கள் ஆலோசித்துப் பார்க்கவில்லையா?***

பதில் : ***இவ்விரு வழிமுறைகளும் தவறானவையே. நாட்டு மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலாத நிலையிலுள்ள ஜனநாயக வழிமுறையில் செயற்படத் தவறி வரும் இந்த அரசுடன் கூட்டணி ஏற்படுத்தித் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலையில் ஜே.வி.பி தற்போது இல்லை. அதற்கான தேவையும் எமக்குக் கிடையாது. ஐ.தே.கட்சியோ இலங்கை அரசியல் வரலாற்றில் பல தவறுகளை மேற்கொண்ட ஒரு தரப்பாகும். இன்று இந்த நாடு இத்தகைய பின்னடைவு நிலைக்கு உட்பட வேண்டிய நிலையை உருவாக்கி வைத்ததே - ஆரம்பித்து வைத்ததே ஐ.தே.கட்சி தான். அத்தகைய கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது. எம்மைப் பொறுத்தவரை இவ்விரு கட்சிகளது கொள்கை நிலைப்பாடுகளும் ஒரே விதமானவையே. எனவே, நாம் இவ்விரு கட்சிகளுக்கும் எதிரான விதத்தில் மக்கள் சக்தியைக் கட்டி எழுப்பும் நோக்குடன் செயற்படுவோம்.***

இவ்வாறானதொரு வலுமிக்க எதிர்ப்புக் கொள்கையைக் கொண்ட ஜே.வி.பி., ஐ.தே.கூட்டணி பொது வேட்பாளர் பொன்சேகாவை ஆதரிப்பதன் காரணம் என்ன? முழுவதும் அரசியல் நோக்குத் தான்.

**-சிகரம்பாரதி-**

இதன் பொருள் நாம் வாக்களிக்கக் கூடாது என்பதல்ல. மாறாக, சூழ்நிலையை உணர்ந்து வாக்களிக்க வேண்டும் என்பதேயாகும். அதாவது, அடுத்தடுத்த தேர்தல்களில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டணி ஒன்றுக்கான அவசியத்தை குறித்த கட்சிகள் உணர்ந்து கொள்ள மக்கள் குரல் கொடுக்க வேண்டும். ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற எதிர்க்கட்சியாகவே இருந்ததையும் நாம் மறந்திருக்க முடியாது. அதுபோன்றதொரு நிலையை உருவாக்க எம்மால் - மக்களால் மட்டுமே முடியும். அரசியல்வாதிகளுக்கு வால்பிடித்துத் திரிவதை விடுத்து இனியாவது எமது அரசியல் எதிர்காலம் குறித்து சிந்தித்துச் செயற்பட வேண்டும். நாம் மிக நீண்ட காலமாகவே இந்நாட்டில் ஒடுக்கப்பட்டதொரு சமூக மாக வாழ்ந்து வருகிறோம். நாம் இதுவரை எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு எந்தெந்த வழிகளையெல்லாம் தேர்ந்தெடுத்தோமோ அந்த வழிகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. திறந்திருக்கும் ஒரே வழி அரசியல் வழி மட்டுமே. நமக்கும் வேறு தெரிவுகள் இல்லை. கட்டாயம் ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பொன்று அவசியம். இதற்கு ஏதாவதொரு கட்சி முதலாவது அழைப்பை விடுக்கவேண்டும். ஏனைய கட்சிகள் அதனைக் கேலி செய்யாமலோ விமர்சிக்காமலோ இதனை ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.

அடுத்த விடயம், நாம் 'எமக்கு உரிமை கொடுங்கள்' என்று தமிழில் மட்டும் கூறினால் போதாது. தமிழில் கூறினால் தமிழர்களை மட்டுமே சென்றடையும். உரிய தரப்பினரைச் சென்றடையாது. எமது நிலைமையையும் எமக்கான தேவைப்பாடுகளையும் சிங்கள மக்களுக்கு அவர்களது மொழியில் சொல்ல வேண்டும். அவர்களையும் எமது நிலைப்பாடுகளைப் புரிந்து கொண்டு எம்மை ஆதரிக்க வைக்காத பட்சத்தில் இந்தச் சுதந்திர தேசத்தில் என்றென்றும் நாம் அடிமைகளாகவே இருக்க நேரிடும். இதுவரை காலமும் நாம் இந்தத் தவறையே இழைத்திருக்கிறோம். தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கான ஆதரவை வழங்க சிங்கள மக்கள் தயாராக இருந்தால் ஆட்சி பீடத்தால் என்ன செய்ய முடியும்?

சிங்கள ஊடகங்கள் வாயிலாக இலக்கிய வடிவமொன்றாகவோ, விளம்பரமாகவோ எமது நிலைப்பாடுகளை எடுத்துரைத்தால் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்குக் தடை இருக்காது. எடுத்துரைப்பது யார்? இதையும் பூனைக்கு மணி கட்டுவதைப் பற்றி யோசிப்பதைப் போல எண்ணாமல் உரிய தரப்பினர் உடன் முன்வர வேண்டும். இந்தத் தேர்தலில் எமது பூரண வாக்குரிமையை நாம் உபயோகிக்கவேண்டும். வரப்போகிறவர் நமக்கு நல்லதைச் செய்வாரோ இல்லையோ நாம் நமது கடமையைச் செய்துவிடவேண்டும். வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலிலேனும் மேற்சொன்ன விடயங்களைச் செய்யத் தகுதியானவரைச் சிந்தித்து வாக்களிப்போமா? இது சிந்திப்பதற்கான தருணம்!

---

# முதுபெரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஜோதிபாசு



இந்திய அரசியல் வரலாற்றில் தனி முத்திரை பதித்த முதுபெரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் ஜோதிபாசு, தனது 95 ஆவது வயதில் நிமோனியா காய்ச்சல் காரணமாக காலமானார்.

மேற்குவங்க மாநில முதலமைச்சராக 23 ஆண்டுகள் பதவி வகித்து வரலாறு படைத்தவர் ஜோதிபாசு. மக்கள் ஆதரவுடன் கம்யூனிஸ்டுகளாலும் ஜனநாயக ஆட்சியைத் திறம்பட நடத்த முடியும் என்பதை உலக அரங்கில் நிரூபித்துக் காட்டியவர். ஜோதிபாசுவுடன் நெருங்கிப் பழகிய இந்து பத்திரிகையின் ஆசிரியர் என்.ராம் தனது நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

1970 ஆம் ஆண்டில் இருந்து நான் தோழர் பாசுவுடன் நெருங்கிப் பழகி வந்திருக்கிறேன். என்னை அவர் தனது குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகவே நினைத்துப் பழகியது பெருமைப்படத் தக்க விஷயம். ஒவ்வொரு முறை சென்னை வரும்போதும் எனக்குத் தகவல் தருவார். நான் விமான நிலையம் போய் அவரை வரவேற்று, அவர் திரும்பிப் போகும் வரை கூடவே இருப்பேன்.

ஒவ்வொரு சந்திப்பின் போதும், தோழர் பாசுவிடம் நான் கற்றுக் கொண்ட விஷயங்கள் ஏராளமாக இருந்தன. மக்களிடம் உண் மையாக நெருங்கிப் பழகும் இயல்புடைய தோழருக்கு உண்மையை மட்டுமே பேசுபவர்களைத் தான் மிகவும் பிடிக்கும். அவரும் மக்களிடம் பொய்யான வாக்குறுதிகளை கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுக்கும் வாக்குறுதி என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்குச் சமம் என்று கூறுவார்.

ஆட்சிக் கட்டிலில் ஏறினாலும், எந்த விஷயமானாலும் கட்சிக்குள் ஆலோசித்து முடிவெடுப்பது என்பது மார்க்சிஸ்ட் கட்சிக்குள் இவர் கொண்டு வந்த ஜனநாயக வழக்கம். அதேபோல், மத்திய அரசும் இவரிடம் அவ்வப்போது ஆலோசனைகள் கேட்பதும் வழக்கமான விஷயம். கம்யூனிஸ்டுகளைப் பிடிக்காத அரசு மத்தியில் இருந்தாலும், தோழரின் கருத்துக்குத் தனிமரியாதை உண்டு. தோழர் பாசுவும் மத்திய அரசுக்கு நேர்மையான ஆலோசனைகளையே வழங்கி வந்தார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர், ஆங்கில நாவல்களைப் படித்துக் கொண்டிருப்பார். பேச்சுக்கு இடையே நாகரிகமாக ஜோக் கடிப்பது அவரது இயல்பு.

எனக்குத் தெரிந்து அவர் சைனீஸ் உணவு வகைகளையே விரும்பிச் சாப்பிடுவார். மிகக் குறைவான அளவுதான் சாப்படுவார் என்றாலும், நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிடுவதுதான் அவரது வழக்கம். இதற்கிடையில், அவர் சென்னை பொதுக்கூட்டங்களில் பேசுவதை சிலர் மொழிபெயர்ப்பார்கள். அப்போதெல்லாம் அதை உன்னிப்பாக கவனித்து, நான் இவ்வளவு நீளமாகப் பேசவில்லையே. தமிழில் கை, கால் முளைக்க வைத்து மொழிபெயர்ப்பது தான் வாடிக்கையோ? என்று கிண்டலடிப்பார்.

# இடுப்பைக் கவனியுங்கள்!

ஒரு மனிதனின் அழகு, ஆரோக்கியம்தான். அதைக் காப்பதற்கு உதவும் சில குறிப்புகள் இங்கே...

* உங்கள் இடுப்பை விட வயிற்றில் அதிகமான கொழுப்பு இருந்தால், உங்களின் செல்கள் அனேகமாக இன்சுலினை எதிர்க்கலாம். அதனால் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மாரடைப்பு, பக்க வாதம் போன்ற அபாயங்கள் ஏற்படலாம்.

* ஆண்களுக்கும், பெண்களுக்கும் நீரிழிவு நோயை வரவழைப்பதில் முக்கிய பங்கு வகிப்பவை போதுமான உடற்பயிற்சியின்மையும், உடல் பருமனும். நீரிழிவு நோய்க்கு முக்கியமான அளவீடு 'தொந்தி'தான்.




* வயிற்றில் அதிகமான கொழுப்புச் சேருவது, ஈரலிலும் அதிகமான கொழுப்பைச் சேர வைக்கிறது. அது, இரத்த ஓட்டத்திலிருந்து இன்சுலினை நீக்கும் அதன் பணியைப் பாதிக்கிறது.

* நீங்கள் உணவு உண்டபின் இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரித்தால், அதை அதிகமாகாமல் தடுப்பதற்காக கணையம் 'இன்சுலினை' சுரக்க வேண்டும். இன்சுலினுக்கு செல்கள் போதுமான அளவு எதிர்வினையாற்ற முடியவில்லை என்றால் அது இன்சுலின் எதிர்ப்பு நிலை எனப்படுகிறது. அப்போது இரத்தத்தில் சர்க்கரை அளவு மிகவும் அதிகரிக்கிறது. உடனே கணையமானது பெருமளவிலான இன்சுலினைச் சுரக்கிறது.

* இரத்தத்தில் சர்க்கரை அளவு மிகவும் அதிகரித்தால், அது செல்களுடன் ஒட்டிக்கொள்கிறது. அப்படி ஒருமுறை ஒட்டிக்கொண்டால் மீண்டும் அது நீங்குவதில்லை. கடைசியில் அது 'சாப்பிட்டால்' என்ற நஞ்சாகி விடுகிறது. அது செல்களைச் சிதைத்து, உங்கள் உடம்பின் நரம்புகள், இரத்த நாளங்கள், திசுக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

* அதிகமான இன்சுலின் சுரப்பு, உங்களை அதிகமாகச் சாப்பிட வைத்து மாரடைப்பை ஏற்படுத்துகிறது.

* பெண்களுக்கு இடுப்பளவு 35 இஞ்சுகளுக்கு மேலும், ஆண்களுக்கு இடுப்பளவு 40 இஞ்சுகளுக்கு மேலும் இருந்தால் அபாயத்தின் அறிகுறி.

* தொந்தியைக் கரைக்க கொழுப்பை எரிக்கும் உணவுகளைச் சாப்பிடலாம். அவற்றில் புரதங்கள், நார்ச்சத்துச் செறிந்த மாச்சத்து உணவுகள் மற்றும் முழுத் தானியங்கள் அடங்கும்.

* தினமும் 35 சதவீதம் புரதம் (பீன்ஸ், கொட்டை வகைகள், பச்சைக் காய்கறிகள், மீன், கோழி இறைச்சியில் உள்ளது), 35 சதவீதம் அதிக நார்ச்சத்து கொண்ட மாச்சத்துப் பொருட்கள், 30 சதவீதம் ஆரோக்கியமான கொழுப்பு (ஆலிவ் எண்ணை போன்றவை) என்று எடுத்துக்கொள்ளலாம்.

* இதயப் பகுதிக்கு வலுவளிக்கும் பயிற்சிகள் உள்ளிட்ட உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள். அவற்றைத் தவற விடாதீர்கள்.

* நீங்கள் இதயத் துடிப்பு அதிகரிப்பதை உணரும் வகையில், வியர்க்கும் வகையில் தீவிரமாக உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஆனால், இடையிடையே உங்களால் பேச முடிகிற அளவுக்கு இருக்க வேண்டும்.

* தொந்தியைக் கரைப்பதற்கு சற்று அதிக காலம் ஆகும். ஆனால், அது முடியாத காரியமல்ல. சரியான அணுகுமுறையின் மூலம் நீங்கள் அதிலிருந்து விடுதலை பெறலாம்.

## துன்பத்தைத் துடைக்கும் வழி

"துன்பத்துக்குக் காரணம் அறியாமை; இன்பத்துக்குக் காரணம் அறிவு. அதனால் ஞானிகள் துன்புறுவதில்லை. 'ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்' என்று நறுந்தொகை நவில்கின்றது.

**வளமான வாழ்க்கைக்கு வாரியார் சொன்ன கருத்து...**




# பெண்களை வதைக்கும் 'அனுசரிப்பு'!

இன்றைக்கு குடும்பங்களிலும்- அலுவலகங்களிலும்- வெளியிடங்களிலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிற ஒரு வார்த்தை, 'அட்ஜஸ்ட்மென்ட்'! 'இதெல்லாம் ஒரு சின்ன அட்ஜஸ்ட்மென்ட்தானே.. கொஞ்சம் அனுசரணையாக நடந்துகொண்டால் எல்லாவற்றையும் சாதித்துவிடலாம்' என்று வார்த்தை தூண்டில் போட்டு வசமாக ஈர்க்கிறார்கள்.

அட்ஜஸ்ட்மென்ட் என்பது எது? பெற்றோர் திட்டினால் பிள்ளைகள் அனுசரித்துப் போய்விடலாம்.. கணவன் கோபப்படுகிற டைப்பா? மனைவி தேவையற்ற செலவுகளை இழுத்து வைக்கிறாரா? கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்லலாம். பணியிடத்தில் மேலதிகாரி சிடுமூஞ்சியா? சிரித்துக் கொண்டே சமாளித்து காலத்தை ஓட்டலாம். மாத சம்பளத்தில் குடும்பம் நடத்த முடியவில்லையா? செலவுகளை குறைத்துக்கொண்டு அட்ஜஸ்ட் செய்து வாழலாம்.

ஆனால், இதை எல்லாம் மீறி அட்ஜஸ்ட்மென்ட் என்ற பெயரில் அருவருக்கத்தக்க விஷயங்கள் அதிகம் நடக்கத் தொடங்கிவிட்டன. ஆடம்பரமான வாழ்க்கைக்காக எதை இழந்தாலும் பரவாயில்லை, எதை செய்தாலும் தவறில்லை என்ற நினைப்பு வேரூன்றுகிறது. தங்களது வாழ்க்கைக்காக சிலர் செய்யும் குறுக்கு வழி செயல்களுக்கு அட்ஜஸ்ட்மென்ட் என்ற அரிதார சொல்லை பயன்படுத்திக்கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கொஞ்சக் காலத்திலே தாங்கள் உருவாக்கிய குழிக்குள் தாங்களே மாட்டிக் கொண்டு தவிக்கிறார்கள்..

பெண்கள் வேலை செய்யும் பல இடங்களில், ஆண்களால் அவர்களுக்கு பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன. அட்ஜஸ்ட்மென்ட் என்ற பெயரால் தவறான செயல்களுக்கு அழைப்பதும், தவறான செயல்களை செய்யத் தூண்டுவதும் இன்று அதிகமாகி விட்டது. பல பெண்கள் இத்தகைய பிரச்சினைகளை உறுதியான உள்ளத்துடன் எதிர்கொண்டு, எதற்கும் அடிபணியாமல் எதிர்த்துப் போராடுகின்றனர். பலர் மெச்சும்படி வாழ்ந்து காட்டவும் செய்கின்றனர்.

கணவன் - மனைவி இணைந்து நடத்துகின்ற இல்வாழ்க்கையில் மூன்றாவது நபர் ஒருவர் திடீரென்று வந்து பொருளாதார ரீதியில் உதவ முன் வருகிறபோது, 'இவர் ஏன் நமக்கு தேடி வந்து உதவ வேண் டும்?' என்று இருவருமே சிந்திக்க வேண்டும்.

வீடு தேடி வந்து உதவி செய்கிறார் என்றால், உதவியைப் பெறும் பெண்ணால், அந்த உள்நோக்கங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அந்த உள்நோக்கத்தைத் தெரிந்தும் தெரியாததுபோல் நடித்து, தொடர்ந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டிருந்தால், பிற்காலத்தில் அவரால் ஏற்படும் பிரச்சினைகளை அவள் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். பிரச்சினை உருவான பின்பு, 'அவரை மிக நல்லவர் என நம்பி நான் ஏமாந்துவிட்டேன்' என்று அழுது, ஆர்ப்பாட்டம் செய்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

ஒரு பெண்ணிற்கு புடைவை வாங்கித்தரும் உரிமை அவள் தந்தைக்கு, சகோதரருக்கு, கணவருக்கு மட்டுமே உண்டு.. இதுதான் நம் பாரம்பரியம். இந்த உறவுகள் அல்லாத ஒருவர் புடைவை கொடுத்தால் நியாயமான உணர்வு கொண்ட எந்தப்பெண்ணும் அதை ஏற்கமாட்டாள். புடைவைக்கே இந்தக் கோட்பாடு இருக்கும் போது மற்ற விஷயங்களுக்கு?

ஒருவருக்கு வியாபார நஷ்டம் ஏற்படும்போது அவர் அதிலிருந்து, தானே மீண்டு வருவதுதான் திறமை.. அதைத் தவிர்த்து அந்த இழப்பை ஈடுகட்ட குடும்பத்தின் ஆணிவேரான பெண்ணை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்த நினைப்பது கீழ்த்தரம்.

நேர்மை, உழைப்பு போன்ற நேரான பாதையில் செல்கிறபோது, முன்னேறுவதற்கு கொஞ்சம் கூடுதல் காலம் ஆகத்தான் செய்யும். மறுக்கவில்லை. ஆனால், அந்த முன்னேற்றம் நிலைத்து நிற்கும். அதில் கிடைக்கின்ற ஆத்ம திருப்தியை வார்த்தைகளில் வடித்துவிட முடியாது. 'நான் ஒழுக்கமாக வாழ்ந்து, கடுமையாக உழைத்து, சொந்தக் காலில் நின்று முன்னேறினேன்' என்று சொல்லும் போது கிடைக்கும் பெருமையும், கம்பீரமும் ஜென்மம் முழுக்க உடனிருக்கும்.

அட்ஜஸ்ட்மென்ட் என்பது வாழ்க்கையை அற்புதமாக்க வேண்டும். தவறான வழியை தாவிப் பிடிப்பதற்கு பெயர், அட்ஜஸ்ட்மென்ட் அல்ல! ஒருவரது பலவீனத்தைப் பயன்படுத்தி முன்னேற நினைப்பதும் - ஒருவரை பலவீனப்படுத்தி ஒன்றைச் சாதிக்க நினைப்பதும் தவறான வழி. *



ஒருவரது பலவீனத்தைப் பயன்படுத்தி முன்னேற நினைப்பதும் - ஒருவரை பலவீனப்படுத்தி ஒன்றைச் சாதிக்க நினைப்பதும் தவறான வழி.




# மகன் இழைத்த குற்றம்



உஜ்ஜைன் நாட்டு இளவரசரான ஸத்யவத்ஸ தாராள மனதுடையவன்; அவன் ஏழைகளுக்குப் பணத்தை வாரியிறைப்பான். அவனுடைய தகப்பனான பிரபுவத்ஸவோ தன்னுடைய மகன் பணத்தை விரயம் செய்கிறான் என்றே நினைத்துக் கொண்டார்.

அரசகுமாரனின் தாராள குணம் அரச சேவகர்களுக்கும் பிடிப்பதில்லை. ஸத்யவத்ஸவின் நடவடிக்கைகளால் அவர்களுக்கு மனம் போனபடி நடக்க முடியவில்லை. மந்திரியின் ஆலோசனைப்படி அரச குமாரணைப்பற்றி, இல்லாததையும் பொல்லாததையும் அரசனிடம் சொல்லி வந்தனர் சிலர்.

ஒரு முறை ஒரு சோதிடர் தர்பாருக்கு வந்தார். "நான் முக்காலமும் அறிந்தவன். உங்களுடைய பிரச்சினைகளுக்குச் சரியான பதிலை என்னால் தர முடியும்" என்று மன்னரிடம் சொன்னார்.

சோதிடர் வந்த சமயம் அரசர் ஏதோ ஒரு கூட்டத்துக்குச் சமுகமளிக்க வேண்டியவராக இருந்தார்.; சோதிடரோடு உரையாடியவாறு வெளியே வந்தார். அப்போது சோடிக்கப்பட்டிருந்த அரசனின் பிரியத்துக்குரிய யானை முன்னால் வந்துகொண்டிருந்தது. அது தன்னுடைய துதிக்கையை மேலுயர்த்தி அவருக்கு வணக்கம் தெரிவித்தது.

அரசன் சோதிடரை நோக்கி, "எங்களுடைய யானையைப் பற்றிச் சொல்லுங்கள். இது எவ்வளவு காலம் உயிர் வாழும்?" என்று கேட்டார்.

கணக்குகளைப் போட்டுப் பார்த்த அவர் முகம் திடீரென மாறுதலடைந்தது. "அரசே, நாளை பிற்பகலுக்குள் இது இறந்துவிடும்" என்று தெரிவித்தார் சோதிடர்.

அரசனின் முகத்திலே கோபம் கொந்தளித்தது. "இந்தச் சோதிடனைச் சிறையிலே அடையுங்கள்" என்று கர்ஜித்தார். பின்னர் யானையைச் சங்கிலிகளால் கட்டிவைக்குமாறு சேவகர்களைப் பணித்தார்.

அன்றிரவு யானைக்கு விசேட காவல் போடப்பட்டது. மறுநாள் பிற்பகலாவதற்குச் சற்றைக்கு முன்னர் வரை அது சாந்தமாகவே இருந்தது. ஆனால், திடீரென்று சங்கிலிகளை அறுத்துக்கொண்டு பிளிறியவாறு மனம்போன போக்கில் ஓடலாயிற்று.

நாலாபுறங்களிலும் கிலி பரவிவிட்டது.

நிலம் அதிர ஓடிக் கொண்டிருந்தது யானை. அதிர்ஷ்டம்கெட்ட பெண் ஒருத்தி அதனுடைய வழியில் குறுக்கிட்டாள். யானை துதிக்கையால் அவளைத் தூக்கிக் கொண்டது; அவள் அலறித் துடித்தாள்.

அப்போது ஸத்யவத்ஸ குதிரையில் வந்துகொண்டிருந்தான். முன்னால் நடந்துகொண்டிருந்த சம்பவத்தைக் கண்டு வாளை ஊருவினான். வாள் யானையைப் பதம் பார்த்தது. பின்னர் அது பெருங் குரலில் கத்தியவாறு நிலத்தில் சாய்ந்தது.

யானை இறந்துவிட்ட செய்தியும், அதைக் கொன்றவன்

> **பீம் கவி - இவர் பிறப்பு எப்போது, எங்கே நிகழ்ந்தது என்பது பற்றி இவருடைய நூல்கள் எதையும் குறிப்பிடவில்லை; வரலாறும் இது பற்றி மௌனம் சாதிக்கிறது. 'ஸுதயவச்சுபயி பிரபந்த' என்ற நூல் பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். இன்று நாம் அந்நூலின் சுருக்கமான கதையை முன்வைக்கின்றோம்.**

தன்னுடைய மகனே என்றும் அரசருக்குத் தகவல் கிடைத்தது. கோபத்தால் அரசனின் கண்கள் கொவ்வைப் பழம் போல் சிவந்தன. உடனே அரச குமாரனை அழைத்து வருமாறு பணித்தார்.

"நீ இப்போதே நாட்டைவிட்டுப் போய்விடு. அந்த யானை எனக்கு மிகவும் விருப்பமானது என்று உனக்குத் தெரியாதா?" என்றார் அரசர்.

ஸத்யவத்ஸ அதற்கான நியாயங்களைச் சொல்ல விரும்பினான். ஆனால், அரசன் கேட்டால் தானே! அரச குமாரன் மாளிகைக்குச் சென்று மனைவியையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினான். பிரதிஷ்டாபுரத்தை ஆட்சிசெய்து வந்த சாலிவாகனின் புத்திரி நான் அவனுடைய மனைவி. அவள் பெயர் ஸாவலிங்கா.

இருவரும் தகிக்கும் வெயிலில் நடக்கலாயினர். ஸாவலிங்கா நடந்து செல்வது வாழ்க்கையிலே இது தான் முதல் முறை. அவளுக்குக் கடுமையான களைப்பு. ஸத்யவத்ஸ தண்ணீர் தேடலானான்.

சிறிது தூரத்தில் ஒரு மூதாட்டி இருப்பதை அவன் கண்டான். அவளுக்குப் பக்கத்தில் நீரினால் நிறைக்கப்பட்ட குடங்களும் வைக்கப்பட்டிருந்தன.

தண்ணீர் கேட்டபோது "தண்ணீர் சும்மா தர முடியாது. உனக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அதற்குச் சமமாக நீ எனக்கு உன்னுடைய இரத்தத்தைத் தர வேண்டியிருக்கும்" என்று சொன்னாள்..

"சரி, முதலில் தண்ணீர் தாருங்கள்" என்றான் ஸத்யவத்ஸ.

**-பீம் கவி**

கிழவி தண்ணீரைச் சுமந்து கொண்டு அவனோடு வந்தாள். ஸத்யவத்ஸ தனது மனைவியிடம் எதுவுமே சொல்லவில்லை. தண்ணீர் குடித்து முடிந்ததும், "சொல்லுங்கள், நான் எவ்வளவு இரத்தம் தர வேண்டும்?" என்று அந்த மூதாட்டியிடம் கேட்டான் அரச குமாரன்.

அரச குமாரன் வாளை ஓங்கும்போது கிழவி அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டாள். மறுவினாடி கிழவி இருந்த இடத்திலே ஓர் அழகி நின்று புன்னகைத்துக் கொண்டிருந்தாள். "நீ வெற்றி பெற்று விட்டாய். நான் இந்த வனத்தின் தேவி. தைரியசாலிக்கு மட்டுமே இவ்வழியால் போக விடுவேன்" என்று கூறிய அவள், அவனை ஆசிர்வதித்தாள். அத்தோடு அவனுக்கு அதியசமான வாள் ஒன்றினையும் பரிசளித்தாள்.

இருவரும் காட்டிலேயே அன்றைய இரவைக் கழித்தனர். காலையில் மீண்டும் பயணத்தைத் தொடங்கினர். தொடர்ந்து நடந்த அவர்கள், குகை ஒன்றைக் கண்டனர். அதற்கு அருகில் சென்றபோது, பேச்சுக் குரல்கள் கேட்டன. மெல்லிய ஒளியும் அங்கிருந்து வந்துகொண்டிருந்தது.

ஸத்யவத்ஸவும் ஸாவலிங்கவும் ஜாக்கிரதையாக குகையினுள் பிரவேசித்தனர். அது போக்கிரிகளின் மறைவிடம். வழிப்போக்கர்களைக் கொன்று அவர்களுடைய பொருள்களைச் சூறையாடுவது அவர்களது தொழில். அவர்களின் தலைவன் இருவரையும் உட்காரச் சொன்னான்.

பின்னர் "வா, என்னோடு சதுரங்கம் விளையாடு" என்றான்.

"எனது மனநிலை சரியில்லை" என்று மறுத்தான் அரச குமாரன்.

தலைவன் சொன்னான்: "குகைக்குள் வருபவர்கள் யாராக இருந்தாலும், எனது கட்டளையை ஏற்கத்தான் வேண்டும். விளையாட்டில் யார் தோற்கிறார்களோ, அவர்கள் தம்முடைய தலையைத் தர வேண்டும். ஆனால், இதுவரை நான் யாரிடமும் தோற்றதில்லை."

"அப்படியென்றால், நிச்சயமாக நான் விளையாடுகிறேன்" என்று ஸத்யவத்ஸ சொன்னான்.

(அடுத்த வாரம் நிறைவு பெறும்)

## 4 தவளையும் புலியும்

புத்தாக்கம் : கே. கான்






# ஜல தேவதை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பீமாவின் சோகமான முகத்தையும், காலியாகக் கிடந்த கூடையையும் கண்டு அன்ஸா இக்கட்டான நிலைக்கு உள்ளானாள். துக்கத்துக்கான காரணத்தை அவள் பீமாவிடம் கேட்டபோது, அவன் ஒன்றுமே சொல்லாமல், அவளுடைய முகத்தையே ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நாட்கள் பல கழிந்தன. எனினும், பீமாவின் கவலை தீரவுமில்லை அவன் மீன் பிடிக்கப் போகவுமில்லை. இதுபற்றி அன்ஸா கேட்டால், ''உன்னை விட்டு விட்டு எங்கும் போவதற்கு மனம் விடுவதில்லை'' என்று பதில் சொல்லி விடுவான்.


இப்போது வீட்டில் உண்பது-குடிப்பதற்கும் கஷ்டமாகிவிட்டபோது, அன்ஸாவின் தைரியமும் தளர்ந்து விட்டது. ஒரு நாள், ''உங்களுக்கு என்ன நடந்திருக்கிறது என்றே தெரியவில்லை. ஒன்றுமே சொல்வதுமில்லை'' என்று கோபத்தால் கத்தினாள்.

பீமா பெருமூச்சு விட்டவாறு, அன்று நடந்த சம்பவத்தை அன்ஸாவிடம் சொன்னான். அவள் ஒரு கணம் யோசித்து விட்டு, ''இதுதானா விஷயம்? தங்க மீன் சொன்னது உண்மையாக இருந்தால், நான் இப்போது வனதேவதைகளின் உலகத்துக்குச் சென்றிருக்க வேண்டுமே. கடவுள் அவ்வளவு விரைவாக எம்மைப் பிரித்து விட மாட்டான்'' என்று அவனுக்குத் தைரியம் ஊட்டினாள். இது பீமாவின் துயரத்தை ஒரு கணத்தில் போக்கடித்து விட்டது.

இரவு கழிந்துகொண்டு வந்தது. பீமா தோணியைக் கடலில் இறக்கினான். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவன் தொழிலுக்குப் போனதால், அவனுடைய உற்சாகம் கரைபுரண்டோடிற்று.

-ஹிந்திக் கதை-

எனவே, கடலிலே வெகு தூரம் வரை சென்றான். உதய சூரியனின் ஒளி பரவிய போது, நூறு முழங்களுக்கு அப்பால் அழகான கப்பலொன்று நின்றிருப்பதைக் கண்டான். தங்கத் தகடுகளால் கட்டப்பட்ட அந்தக் கப்பலின் பக்கச் சுவர்களில் அழகிய செதுக்கு வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நடுநடுவே வெள்ளிக் கம்பங்கள் காணப்பட்டன. தோணியை கப்பலின் பக்கமாக ஓட்டிச் சென்றான் அந்தக் கப்பலில் யாருமே இல்லாதிருப்பதைக் கண்டு அவனுக்குப் பெரிதும் ஆச்சரியமாக இருந்தது. எனினும், மனிதர்களுடைய ஓசைகள் வந்துகொண்டிருந்தன. அப்போது ஓர் இனிய குரல் கேட்டது. தப்லா வாசிப் பதற்கு ஏற்ப, சலங்கைகள் ஒலி செய்தன. கப்பலுக்கு இன்னும் நெருக்கமாகப் போக முயன்ற போது, அலைகள் அவனைத் தடுத்துவிட்டன.



திடீரென்று ஆடல்-பாடல் நிகழ்ச்சிகள் ஓய்ந்தன பதிலாக, கசமுசவென்ற சத்தம் மேலெழுந்து வந்தது. சடுதியாக ஏழு நிற மேகங்கள் திரண்டன. பார்த்துக் கொண்டிருக்கும் போதே சிவப்பு-மஞ்சள் நிறமான கடும் மழை பிடித்துக்கொண்டது.

சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு மழை நின்றது. இப்போது கப்பலின் சுவடே தெரியவில்லை. பீமா அங்குமிங்கும் கண்களை ஓட்டினான். அவன் இருக்கும் இடத்திலிருந்து சுமார் 100 முழங்களுக்கு அப்பால் கப்பல் சென்றுகொண்டிருப்பது தெரிந்தது. மந்திரத்தால் கட்டுண்டவன் போல தோணியை அதனை நோக்கிச் செலுத்தினான். 20 முழ இடைவெளியில் தோணி மீண்டும் நின்றுவிட்டது.

பீமா முழங்காலில் நின்றபடி மறைவான சக்தியை நோக்கி, ''ஓ, ஜல தேவதையே! நான் உன்னுடைய சங்கீதத்தால் வசியப்பட்டுவிட்டேன். நானும் கடல் பாட்டுப் பாடுவேன். ஆனால், உன்னுடைய சங்கீதத்தில் தான் சுவர்க்கத்தின் லயம் இருக்கிறது. நான் ஒரு முறை நெருங்கி வந்து பாட விரும்புகிறேன் உன்னுடைய தரிசனத்தால் நான் புண்ணியம் பெற்றுக்கொள்வேன்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

இப்போது பீமாவின் தோணி கப்பலின் பக்கம் இழுபட்டுச் சென்றது. கப்பலுக்குச் சமீபமாக வந்ததும், மின்னும் கயிறொன்று கப்பலிலிருந்து கீழ்நோக்கித் தொங்கியது. பீமா கயிற்றினூடாக கப்பலுக்குள் ஏறினான். அங்கே அவன் மின்னும் மீன்களைத் தரிசித்தான். அந்த மீன்கள் மனிதர்களைப் போல் பேசின, சிரித்தன, ஆடிப்பாடின. அங்கிருந்த தலைமை மீனின் வேண்டுகோளின்படி, பீமாவும் பாடினான். மீன்கள் புளகாங்கிதமடைந்தன. பாடிக்கொண்டிருந்த பீமா திடீரென்று பாட்டை நிறுத்தினான். பின்னர் பெருமூச்செறிந்தான். இதைக் கண்டு அவை திகைத்தன. பீமாவின் கவலைக்கான காரணத்தைக் கேட்டன.

தங்கமீனின் சாபத்தைக் கேள்வியுற்ற தலைமை மீன் சொன்னது: ''என் நண்பனே, நீ கவலைப் படாதே. உனக்கும் அன்ஸாவுக்கும் இடையிலுள்ள பிணைப்பு என்றென்றும் நீடித்திருக்கும். தேன் நிரம்பிய இந்தப் போத்தலைக் காண்கிறாய் அல்லவா! அதிலிருந்து நான்கு சொட்டுக்களை ருசித்துப் பார். உடனே நீ இளைஞனாகி விடுவாய். அன்ஸாவுக்காகவும் கொஞ்சம் தேன் எடுத்துப் போ! அவளும் வயதில் குறைந்தவளாகி விடுவாள். நாங்கள் உனது பாடல்களைக் கேட்டுப் பைத்தியமாகிப் போய்விட்டோம். உன் மீது மகிழ்ச்சியுற்ற நாங்கள் இந்தக் கப்பலை உனக்குப் பரிசாகத் தருகிறோம். ஆனால், ஒரு நிபந்தனை. ஒவ்வொரு பூரணை தினத்தன்றும் நீ எங்களிடம் வந்து பாட வேண்டும்.''

பீமா கரையை நோக்கி விரைந்தான். தேனின் செல்வாக்கினால் அன்ஸாவும் குமரியானாள். அவர்கள் வயதில் மட்டுமன்றி, உடற் கட்டிலும் வாலிப வயதினராக மாறிவிட்டனர்.

-தமிழில்: ஸியெம்மே

## நீங்கள் எவ்வளவு புத்திசாலி-5







மேலே உள்ள படம் தான் முதலில் வரையப்பட்டது. கீழே இருப்பது அதைப் பார்த்து வரையப்பட்டது இரண்டு படங்க்ளையும் கவனமாகப் பாருங்கள். கீழேயுள்ள படத்தில் 10 பிழைகள் உள்ளன. அவற்றை அடையாளம்இட்டு தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பிவையுங்கள். எல்லோரும் இதில் கலந்து கொள்ளலாம். வெற்றியாளர்களின் பெயர்கள்இப் பகுதியில் பிரசுரிக்கப்படும்.

-பொறுப்பாசிரியர்.

**எமக்குக் கிடைக்கப்பெற்ற நீங்கள் எவ்வளவு புத்திசாலி -4இற்கு சரியான விடை அனுப்பியவர்களின் பெயர் விபரம்.**

1. ந. கிருத்திகா,
யா/இந்து ஆரம்ப பாடசாலை,
தரம்-04,
யாழ்ப்பாணம்.

2. ஏ. எம். அல். அக்தார்
தரம்-05,
மட்/ரகுமானியா வித்தியாலயம்
ஏறாவூர்-02

## அம்மாவின் கவலை

அம்மா வீட்டில் இருக்கையிலே
அடுப்படிக்குள்ளே ஒரு சத்தம்
எலிகள் கூடி வந்தனவாம்
எண்ணற்ற பொருளைத்
தின்றனவாம்!

அம்மா மனதில் உதித்தது
அருமையான ஒரு யோசனை
பூனை ஒன்று வளர்த்திட்டால்
எலிகள் பயந்து ஓடிடுமே!

பூனை ஒன்று வீட்டினிலே
மிகச் செல்லமாக அம்மாவும்
வெல்லம் போல இனிமையாய்
பொத்திப் பொத்தி வளர்த்தாரே!

வீட்டில் எலிகள் ஓய்ந்தனவே
வீரமான பெண் பூனையால்
எதிர்க்க வீட்டில் யாருமில்லை
எட்டி விரட்டிடும் வேலை இல்லை!

பூனை ஈன்றது பல குட்டிகள்
எலிகளைப் போன்றே பெருஞ் சுட்டிகள்
வீட்டில் விளைந்தன கலகங்கள்
அம்மா மனதில் கலக்கங்கள்!

பூனையை விரட்டிட அம்மாவும்
நாயை வாங்கி வந்தாரே
நாளும் நாயும் பூனைகளும்
சண்டையிட்டே மாய்ந்தனவே!

தெருவில் திரிந்த நாய்களெல்லாம்
திரண்டன ஒன்றாய் அவ்வீட்டில்
அங்கே எப்பொழுதும் கும்மாளம்
நாயும் பூனையும் ஏராளம்!

எலிக்குப் பயந்து இவை வளர்த்தால்
எல்லா நேரமும் பெரும் கூச்சல்
அம்மா துணிந்து முடிவெடுத்தா
அடித்தே அவற்றைத் துரத்தி விட்டார்!

பயந்த எலிகள் திரும்பினவே
பலங்கொண்டு வீட்டைச் சுரண்டினவே
வீட்டில் இப்போது எலித்தொல்லை
அம்மாவின் கவலை தீரவில்லை!



வே.இராஜகுரு



# முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும் 4

**முள்ளிவாய்க்கால்வரை தாம் பட்ட துன்பங்களையும், அதனுடன் முடிவுறாது தொடர்கின்ற முள்ளுக்கம்பிக் கூண்டுச் சுமைகளையும் மனதில் சுமந்தபடி பல லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் பொதிந்துள்ளன. அதை வெளிக்கொண்டுவர எல்லோராலும் முடிவதில்லை. இதனால் அவர்களது துன்பங்கள் அவர்களுக்குள்ளேயே மீண்டும் உறங்கிப் போகின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதுதான் 'முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்'. ஈழத் தமிழரின் வரலாற்றில் வேதனைகள், சோகங்கள், மரணங்கள், பிரிவுகள் நிறைந்த வன்னி மக்களின் நெருப்பாற்றுப் பயணம் வரலாற்றுப் பதிவுகளில் கறைபடிந்த அத்தியாயமாகிவிட்டது.**

வன்னி வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர்களின் குரல்தான் எங்களுடைய அவலங்களை எடுத்தியம்பியதாக இருந்தது. இருந்தபோதும் அவர்களால் குறிப்பிடப்பட்ட காயமடைந்தோர், பலியானோர் பற்றிய விவரம் மிகமிகக் குறைவாக இருந்ததை அங்கு வாழ்ந்த எல்லோராலும் தெரிந்து கொள்ள முடிந்தது.

இருந்தபோதும் அவ்வாறு செய்தி கொடுத்த வைத்தியர்களையும் நாம் குறைகூற முடியாது. அவர்களால் எல்லா இடங்களுக்கும் சென்று பலியானோரின் விவரங்களையும், காயமடைந்த நிலையில் இருந்தோர்களது விவரங்களையும் சேகரிக்க முடியாத ஆபத்தான போர்ச் சூழல் இருந்தது.

உள்ளூர்பத்திரிகைகள், வானொலிகள் இயலுமானவரை தரவுகளையும், நிகழ்வுகளையும், புகைப்படம் மற்றும் காணொளிப்படங்களாக எடுத்து போரின் அழிவு செய்திகளை வெளிக்கொண்டு சென்றன. இச்செய்திகளால் உலகத்தின் பார்வை எம்பக்கம் திரும்பிய போதும் இவ்வாறான செய்திகள் ஒருபக்க சார்புடையவையென இலங்கை அரசினால் ஊடகங்களுக்கு மறுப்பறிக்கை விடப்பட்டு வந்தது.

அது மட்டுமன்றி ஒரு குடிமகனுக்கு கூட இழப்பு ஏற்படாதபடி மெதுமெதுவாக நிதானமாக தூரவீச்சு ஆயுதங்களையும் பாவிக்காமல், விமானத் தாக்குதல்களையும் மேற்கொள்ளாமல் படையினர் நகர்கின்றனரென இராணுவப் பேச்சாளர், பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு விவகார பேச்சாளர் உட்பட நாட்டின் மக்களுக்குப் பொறுப்பாயிருக்கின்ற பாதுகாப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கின்ற ஜனாதிபதியும் சேர்ந்து கூறியது அங்கு பிணக்குவியலின் மேல் வாழ்ந்த ஒவ்வொரு குடிமகனையும் புண்படுத்தியது மட்டுமல்ல ஆத்திரமூட்டவும் செய்தது.

அவ்வாறு கூறியவர்கள் இந்த மக்கள்முன் தோன்றி அவர்களின் முகத்தைப் பார்த்துக் கூறுவார்களா? இதற்கு ஊனமுற்ற உடலும் உறவுகளை இழந்த நிலையில் நடைபிணமாக அவர்களின் நினைவுகளைச் சுமந்தபடி வாழும் மக்களின் வாழ்வும் பதில் சொல்லும்.

இவ்வாறான மன அழுத்தங்களுடன் இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்த இரண்டு சதுர கிலோ மீற்றருக்குள் வெறும் 15 000 மக்களும் சில நூறு புலிகளுமே மீதமாக உள்ளனர் என அரச தரப்பால் கூறப்பட்டு தாக்குதல் மேலும் உச்சமடைகிறது.

### இறுதிப்போரும் சிறைப்பிடிப்பும்

அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புதுக்குடியிருப்புக்கு கிழக்காக உள்ள பச்சைப்புல்மோட்டை பகுதியில் 2009 ஏப்ரல் மாத நடுப்பகுதியில் கடும் சமர் மூண்டது. பெயர் குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு வன்னியில் நடைபெற்ற இறுதி சமர் அதுவாகத்தான் இருக்குமென நினைக்கிறேன். அந்தளவுக்கு அந்தக் களத்தினுள்ளே பெட்டியிடப்பட்ட நிலைகளில் மிக நெருக்கமாகப் படையினரும், புலிகளும் மோதிக்கொள்கிறார்கள். விடுதலைப் புலிகள் தமது முழு பலத்தையும் ஒருங்கிணைத்து மோதிக் கொண்டிருந்தனர். நீண்ட நாட்கள் அந்தக் களமும் அதைச் சூழ்ந்த ஏனைய பிரதேசங்களும் அதிர்ந்து கொண்டிருந்தன. இதனையே கோடிட்டுக் காட்டியது. நாள் ஒன்றுக்கு கிபீர் விமானங்கள் வந்து பத்து தொடக்கம் 15 தடவைகள் குண்டுகளைப் பொழிந்தது. அத்துடன் புதுக்குடியிருப்புசாலை, கேப்பாபுலவு, வற்றாப்பளை, முல்லைத்தீவு மற்றும் கடல் பகுதிகளிலிருந்து தொடர்ச்சியான எறிகணைத்

**-டொமினிக்-**

தாக்குதல்களையும் இராணுவத்தினர் மேற்கொண்டனர். இச்சமரில் விடுதலைப் புலிகள் தரப்பிலும் பலநூறு போராளிகள் மரணம் அடைந்தனர்.

மரணம் அடைந்தனரென ஒரு வரிச்செய்தியாக அதைக் கூறிவிட முடியாது. ஏனெனில் மரணம் அடைந்தவர்களில் பெரும்பாலானோர் கடந்த காலங்களில் பெரும் வெற்றிச் சமர்களைப் புரிந்தவர்கள், வழி நடத்தியவர்கள், கட்டளையிட்டவர்கள். இப்படி பல தரப்பட்ட திறமைமிகு போராளிகளை ஒரே தடவையில் இழந்த வரலாற்றுப் பதிவையும் இறுதிச் சமர்களம் என்ற பதிவையும் பச்சைப் புல்மோட்டை களம் பெற்றது. இதில் ஆயிரம் வரையான படையினர் கொல்லப்பட்டனர் என்று செய்திகள் வந்தபோதும், செய்தித் தணிக்கையை சண்டையிட்ட இருதரப்பும் பேணியதால் உண்மை நிலை இன்றுவரை வெளித் தெறியாத ஒன்றாகவே இருந்தது.

இச்சமரை அடுத்து விடுதலைப் புலிகளால் நந்திக் கடற்கரையிலிருந்து இரட்டை வாய்க்கால் ஊடாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வீதியை ஊடறுத்துக் கடற்கரை வரை ஒரு மண்அரண் இடப்பட்டுக் கொண்டிருக்க - கிபீர் விமானங்களின் தாக்குதல்களால் மண் அரண்கள் வெறும் மண் கிணறுகளாக மாறிக் கொண்டிருக்க - இராணுவத்தினர் இலகுவாக முன்னேற்ற நகர்வை மேற்கொள்கின்றனர். விடுதலைப் புலிகளால் பெருமெடுப்பிலான தாக்குதல்கள் எதையும் மேற்கொள்ள முடியாத நிலை. இந்த நிலைதான் இறுதி நாள்

## பச்சைப்புல் மோட்டையில் நிகழ்ந்த பெரும் சமர்!



வரை இடம்பெற்றாலும் சுற்றிவளைக்கப்பட்ட இராணுவ நிலைகளிலிருந்து தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் இடம் பெற்ற வண்ணமே இருந்தன. எமது எதிர்காலம் கேள்விக்குறியாகிறது.

எங்களை யார் மீட்பார்கள்? போர்ச்சூழலற்ற ஓர் அமைதிச் சூழலை யார் தோற்றுவிப்பார்கள்? எங்களுக்காக யார் குரல் கொடுப்பார்கள்? கரம் நீட்டுவார்கள்? என்ன மாற்றம் வரும்? இப்படியான ஏக்கத்துடன் செய்திகளுக்குக் காதைக் கூர்மையாக்கிக் கொண்டிருந்தோம். புலம்பெயர் மக்களது ஆர்ப்பாட்டம் எழுச்சிகள், முருகதாசனின் ஐ.நா. மன்றம் முன்பான தீக்குளிப்பு, உணவு தவிர்ப்புப் போராட்டம், தமிழக மக்களது எழுச்சிகள், போராட்டங்கள், கதவடைப்புகள், முத்துக்குமாரைத் தொடர்ந்து பலரின் தீக்குளிப்புகள், அமெரிக்காவின் சிறீலங்கா மீதான அழுத்தங்கள் மற்றும் மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள், 'வணங்காமண்' கப்பலின் வருகை இவை எல்லாம் எமக்கு ஒரு விடிவைத் தரும் என்ற நம்பிக்கை ஒவ்வொருவர் மனங்களிலும் துளிர்விட்டு ஒரு, சில நாட்களிலேயே அந்நம்பிக்கையும் செத்துவிடுகிறது.

தமிழ் நாட்டில் ஏற்பட்ட எழுச்சியையும், ஈழ மக்கள் படும் துன்பங்களையும் சரியாகக் கையாள முடியாத நிலையில் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி இதய சுத்தியுடன் மத்திய அரசுக்கு நெருக்குதல் கொடுக்காததும் -

எமது மீட்சிக்காக எதையுமே உருப்படியாக செய்ய முடியாத வகையில் கருணாநிதி இரட்டை வேடம் போட்டதும் -

இந்திய மத்திய அரசு எம்மைப் பலி எடுப்போருக்குப் பக்க பலமாகச் செயல்பட்டதும் - புலம்பெயர் மக்களது உணவுத் தவிர்ப்பு போராட்டங்களை மதிப்பதாகக் கூறிய மேற்குலக நாட்டு அதிகார மிக்க சில இராஜதந்திரிகளின் அசமந்தப் போக்கும் -

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் போதிய தீர்மானங்களை எடுக்கத் தவறிய மாநாடுகளும் - ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் மனநிலை அற்ற தன்மையும் -

நடுநிலை வகித்த நோர்வே நாட்டின் அமைச்சர் மட்டுமன்றி தமிழ் மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் உச்சரிக்கப்பட்டு எமக்கான விடிவைப்பெற்றுத் தருவாரென்ற நம்பிக்கைக்குரியவராக இருந்த எரிக் சொல்ஹெமின் மௌனமும் - ஒபாமா அரசால் கண்டனத்தைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாத நிலையும், ஒட்டுமொத்தமாக பல அழிவுகளைத் தந்த போரின் பிடியை மேலும் இறுக்கின. வாழ்வா சாவா எனத் தீர்மானிக்கும் இறுதி நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. களநிலவரம் இதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தது.

துப்பாக்கிச் சூடுகள் மேலும் மேலும் எம்மை நெருங்குகின்றன. இராணுவம் சில மீற்றர் தூரத்தில். அந்த இறுதிச் சம்பவம் எவ்வாறு அமையப் போகிறது? ஒவ்வொருவர் மனதிலும் பலதரப்பட்ட கேள்விகள் எழுந்து மறைய முன், ஒருவர் இருவராக- ஆயிரம் இரண்டாயிரமாக, இலட்சத்தைத் தாண்டிய நிலையில், பல ஆயிரம் உடல்கள் மத்தியில் இருந்தவாறு இராணுவத்தால் மே 17 ஆம் திகதி சிறைப்பிடிக்கப்படுகிறோம்.

குறிப்பிட்ட சில தூரம் அழைத்துச் செல்லப்பட்ட பின் ஆண்களின் மேலாடைகள் களையப்பட்டு உடற்பரிசோதனை செய்யப்படுகின்றது. அதனையும் தாண்டிச் சென்றபோது இராணுவத்தினர் எமக்கு பிஸ்கட்டுகளும், தண்ணீரும் தந்து வாகனத்தில் ஏற்றினார்கள். சில நூறு ஆண், பெண்கள் தனித்தனியாக இராணுவத்தால் மறைவிடம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். பின்னர் அவர்கள் எங்கு சென்றார்கள்? ஏன் கொண்டு செல்லப்பட்டார்கள்? என்பதை அறிய முடியவில்லை. அதில் குறிப்பிட்ட சிலர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்பதை இனம் காணக்கூடியதாகவிருந்தது.

(அவலங்கள் தொடரும்)

# வேலுப்பிள்ளையின் இறுதி நாட்கள்... 2

பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு திரும்பிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தனது இலங்கை விஜயம் குறித்து சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் முதலாவது பகுதி கடந்த வாரம் வெளிவந்தது. இது இரண்டாவது பகுதி.

## நினைவு தடுமாறும் பார்வதி அம்மாள்



பார்வதி அம்மாளுடன் திருமாவளவன்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**மரணச்சடங்கில் தமிழ் இளைஞர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்?**

கொந்தளிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களாக தமிழ் இளைஞர்கள் பலரும் இறுக்கத்தோடு அங்கே நின்று கொண்டிருந்தார்கள். சில இளைஞர்கள் துக்கத்தை வெளிக்காட்டும் விதமாக வெடிகளைக் கொளுத்தினார்கள். ஒன்பதாம் தேதி காலையில் நிறைய இளைஞர்கள் தைரியமாக வேலுப்பிள்ளையின் உடலைப் பார்வையிட வந்தார்கள். அவர்கள் உணர்ச்சி வேகத்தோடு, ''கண்டிப்பாக தமிழீழம் மலரும். தலைவரின் கனவு நனவாகும்!'' என சத்தமிட்டார்கள். காலை 10.40 மணிக்கு அந்த சதுக்கத்திலிருந்து, மூத்த மகள் ஜெகதீஸ்வரியின் வீட்டுக்கு வேலுப்பிள்ளையின் உடல் எடுத்துச் செல்லப்பட்டது. அங்கே பெண்கள் ஒப்பாரி வைத்து அழுதார்கள்.

பார்வதி அம்மாள் அடக்க முடியாத வேதனையில் கணவரின் சடலத்துக்கு அருகே அமர்ந்து குமுறிக் குமுறி அழுது கொண்டேயிருந்தார். 'என்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டீங்களே... ஏன்யா எங்கிட்ட சொல்லாம போனீங்க..?'' என அங்கே இருந்த நான்கு மணி நேரமும் அரற்றியபடியே இருந்தார். அவரைத் தேற்றுவதற்குள் தெம்பற்றுப் போய் நானும் குலுங்கத் தொடங்கிவிட்டேன்!''

**''பிரபாகரனின் தாயாரோடு நீங்கள் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தீர்களாமே... தன் மகன் பிரபாகரன் குறித்து அவர் ஏதாவது சொன்னாரா?''**

''தலைவர் பிரபாகரன் குறித்து நான் கேட்டபோது, ''அவர் பத்திரமா இருக்கார்...'' என்றே பார்வதி அம்மா திரும்பத் திரும்ப சொன்னார். போர்க் காலங்களில் பார்வதி அம்மா எங்கிருந்தார், யார் யாரெல்லாம் அவரை சந்தித்தனர் என்பது உள்ளிட்ட தகவல்களை என்னிடம் பகிர்ந்து கொண்டார். வயதான நிலையிலும் மிகுந்த கவனத்தோடு பார்த்துப் பார்த்துப் பேசினார். ''தலைவர் பிரபாகரன் உங்களைப் பார்த்தாரா'' என நான் கேட்டபோது, ''தம்பி உயிரோடு நலமாக இருக்கிறார். என்னை கனடாவில் வந்து சந்திப்பதாகச் சொல்லிச் சென்றார்'' என்றார். அவருடைய உறவினர்கள் சிலருடைய பெயரைச் சொல்லி நான் சில விஷயங்களை கேட்டபோதும், அவர்களின் பெயர்களை மிகத் திருத்தமாக, நல்ல சுவாதீனமாகவே சொன்னார். தற்போது சிவாஜி லிங்கத்தின் கவனிப்பில் இருக்கும் பார்வதி அம்மா வை கனடாவுக்கோ இந்தியாவுக்கோ அழைத்துக் கொள்ள அடுத்த கட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்!''

**பிரபாகரனின் தாயாருடன் வேறு என்ன பேசினீர்கள்?**

''வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்ட பார்வதி அம்மாளிடம், 'அண்ணனை (பிரபாகரனை) பார்த்து எவ்வளவு நாளாச்சு?' எனக் கேட்டேன். 'ரெண்டு கிழமையாச்சு' என்றார் அவர். போர் முடிந்து எட்டு மாதங்களாக ராணுவ முகாமிலிருந்த பார்வதி அம்மாள், ரெண்டு கிழமைக்கு முன்பு பார்த்தாகச் சொன்னதிலிருந்தே அவரது நிலைமை எனக்குப் புரிந்தது. நினைவுத் தடுமாற்றத்தில் அவ்வாறு பேசுகிறார் என்று என்னை சமாதானப்படுத்திக் கொண்டேன். 'யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது எங்கே இருந்தீங்க?' எனக் கேட்டேன். என்னை நிமிர்ந்து பார்த்த அம்மா, 'பெரிய யுத்தத்தைப் பத்தித்தானே கேக்கறீங்க... அப்ப நான் இந்தியாவில் இருந்தேன்' என்றார். இதற்கு முன்பு நடந்த யுத்தத்தைப் பற்றித்தான் சொல்கிறாரோ என எனக்குத் தோன்றியது. 'ஐயா வேலுப்பிள்ளைக்கு உடம்பு சரியில்லாம இருந்துச்சா...' எனக் கேட்டேன். 'இல்லை... நல்லாத் தான் இருந்தாங்க. எனக்குத்தான் உடம்பு சரியில்லை!' என்று வலது கையை தூக்கிக் காட்டினார். அவரது வலது கையில் விரல்கள் மடங்கி இருந்தன. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டதைத் தான் அவ்வாறு காட்டினார்.

**''பிரபாகரன் தாயாரிடம் உங்கள் செல்பேசியைக் கொடுத்து யாருடனோ பேசச் செய்ததாக சில படங்கள் வைத்திருக்கிறீர்களே... அவர் யாரோடு பேசினார்... என்ன பேசினார்?''**

''கணவர் இறந்த துக்கத்தில் இருந்த பார்வதி அம்மாளின் மனத்தைத் தேற்றும் விதமாக அவரது கவனத்தை, திசை திருப்ப முயற்சித்தேன். 'திருச்சிக்கு பக்கத்தில ராஜேந்திரன் என்னும் உங்க சொந்தக்காரர் ஒருத்தர் இருக்காரே... அவரை உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டேன். 'ம்... தெரியும்! டாக்டர் ராஜேந்திரனைத் தானே சொல்றீங்க?' என்று படுதெளிவாகக் கேட்டார். 'அவர் உங்க பங்காளியாமே... உங்ககிட்ட பேச ஆசைப் படறாரு... பேசுறீங்களா?' எனக் கேட்டேன். உடனே தலையாட்டினார். நான் ராஜேந்திரனோடு தொடர்புகொண்டு அம்மாவின் காதில் செல்பேசியை வைத்தேன். அம்மா தனது இடது கையால் போனை வாங்கி அவரே பிடித்துக்கொண்டு பேசினார். அதுவரை அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த நான் மெள்ள கைகளை எடுத்துக் கொண்டேன். அந்த முனையில் பேசியவரை அடையாளம் கண்டு கொண்டு அவர் தெளிவாக பதில் அளித்தார்.

அப்போது அறைக்குள்ளே வந்த எம்.பியான சிவாஜிலிங்கம் 'நேரமாகி விட்டது... கிளம்புவோம்' என்று சொல்ல... நான் அம்மாவிடம் இருந்த செல்போனை வாங்கி தொடர்பைத் துண்டித்தேன். 'ஊருக்குப் போகலாமா?' என்று கேட்டேன். 'எங்க வல்வெட்டித் துறைக்குத் தானே...' என்று கேட்டார். 'ஆமாம்... இப்ப நாம் எங்கே இருக்கோம் என்று தெரியு தாம்மா?' என்றேன். அந்த இடம் வவுனியா என்பது அம்மாவுக்கு தெரியவில்லை.''


**?''ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சியைக் கடந்துதானே வல்வெட்டித்துறைக்கு போனீர்கள்? இப்போது அங்குள்ள நிலைமைகள் எப்படி..?''**

''வவுனியாவிலிருந்தே வன்னிப் பகுதி ஆரம்பமாகிறது. அன்றைக்கு (ஜனவரி 9) ராஜபக்ஷ வவுனியாவுக்கு தேர்தல் பிரசாரம் செய்ய வர இருப்பதாக அறிந்தோம். அதனால்தானோ என்னவோ... அங்கு எங்கு திரும்பினாலும் படையினர் துப்பாக்கிகளோடு திரிந்துகொண்டிருந்தனர். வீதிகளில் செல்லும் வாகனங்களை மறித்து சோதித்துக் கொண்டிருந்தனர். டெலோ இயக்கத் தம்பி ஒருவரோடு நான் பயணித்த இரு சக்கர வாகனத்தை போகும்போதும் வரும் போதும் மறித்து, விசாரித்தனர். மெனிக் பாம் முகாமிலிருக்கும், மக்களும் வவுனியா முகாமிலிருக்கும் மக்களும் அனுமதி பெற்று, வவுனியா கடை வீதிகளுக்கு வந்து போவது உண்டு. அன்றைக்கு ஏராளமான மக்களை நகர வீதிகளில் பார்க்க முடிந்தது. தமிழ்நாட்டில் இருப்பதைப் போல அங்கும் சுவரொட்டி, டிஜிட்டல் கலாசாரங்களை பல இடங்களிலும் காண முடிந்தது. ராஜபக்ஷவின் படம் வரைந்த பெரிய பெரிய சுவரொட்டிகளும், டிஜிட்டல்களும் நிறைய வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்து வவுனியாவில் ராஜபக்ஷேயின் ஆதிக்கமும், ராணுவத்தின் ஆதிக்கமும் கொடி கட்டிப் பறந்ததை கண்டு, அச்சமோ இல்லாமல் தமிழர்களின் பகுதிக்கு வர முடிகிறதே என்றும் வியப்படைந்தேன். வவுனியா நகரத்தைக் கடந்து ஓமந்தை, புளியங்குளம் வழியாக முறிகண்டி எனும் இடத்தை அடைந்தோம். அங்கு பிரபலமான பிள்ளையார் கோயில் ஒன்று உள்ளது. அங்கே தேநீர் அருந்துவதற்காக வாகனத்தை நிறுத்தினோம். அந்தப் பகுதியே அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைந்து கிடந்தது. கட்டடங்கள் எல்லாம் இடிந்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. கோயில் மட்டும் எந்த பாதிப்பும் இல்லாமல் அப்படியே இருந்தது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி சாமி கும்பிட்டபடி இருந்தார்கள். பிள்ளையாருக்கு முன்பாக ஆளாளுக்குப் போடும் கற்பூரக் கட்டிகள் தீப்பற்றி திகுதிகுவென எரிந்து கொண்டிருந்தன. 'வாழ் விழந்து நிற்கும் எங்கள் நெஞ்சமெல்லாம் இப்படித்தான் எரிந்து கொண்டிருக்கின்றன!' என அங்கு வந்த தமிழ் மக்கள் சாட்சியம் அளிப்பதை போல அந்த கற்பூர நெருப்பு காட்சி அளித்தது.

நானும் அந்த நெருப்பை தொட்டுப் பார்த்தேன். அங்கே என்னை அடையாளம் கண்டு கொண்ட இளைஞர்களும், பெண்களும் என் கைகளைக் குலுக்கி 'வல்வெட்டித் துறைக்கு போறீங்களா?' என்று கேட்டனர். 'எங்களுக்காக இனி என்னதான் செய்யப் போறீங்க?' என்றவர்கள், கடைகளில் எழுதப்பட்ட சிங்கள எழுத்துகளைக் காட்டி, 'பார்த்தீங்களா... சிங்கள ஆதிக்கத்தை?' என்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே பேசினார்கள். ராணுவத்தினர் யாராவது கவனிக்கிறார்களா என்ற அச்சத்துடன் பேசினார்கள். ஒரு சிலர் தம் செல்போன்களில் என்னோடு சேர்ந்து படம் எடுத்துக் கொண்டார்கள். வெறுமையும் விரக்தியும் அவர்களது கண்களில்! அங்கிருந்து சில நிமிடங்களில் எமது பயணத்தைத் தொடங்கினோம். கொஞ்ச தூரத்தில் கிளிநொச்சி வந்துவிட்டது. ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் ராணுவத்தின் ஆக்கிரமிப்புகளைக் கண்டு விவரிக்க முடியாத வேதனைகளுக்கு ஆளானேன்.''

**''புலிகளின் தலைநகராக விளங்கிய கிளிநொச்சி எப்படி இருக்கிறது?''**

''இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் முற்றிலுமாக உருக்குலைந்து கிடந்தது அந்த உன்னத நகரம். 57, 58 ராணுவப் படையணிகளின் தலைமைபீடங்கள் கிளிநொச்சியில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. புலிகளின் நிதித் துறை, நீதித் துறை, கல்வித் துறை, காவல் துறை போன்றவற்றின் தலைமை அலுவலகங்கள் எல்லாம்கிளிநொச்சியில் ஏ-9 வீதியின்




(26ஆம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணன் கடந்த வாரம் பதவியிருந்து மாற்றப்பட்டு மேற்குவங்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அரச இயந்திரத்தில் அரசியல்வாதிகள் தவிர்ந்த ஏனைய நிர்வாகப் பதவிகளில் முதன்மையானது இதுவே. மிகவும் செல்வாக்கு நிறைந்த நிர்வாக அதிகாரியாக இந்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விளங்கினார்.

கேரளத்துப் பிராமணரான நாராயணன் 2004 ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு பதவிக்கு வந்ததில் இருந்து இந்தப் பதவியில் நீடித்து வந்தமை குறிப்பிடத் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு பல முனைகளில் வெறுக் கப்பட்ட நாராயணன் தொடர்ந்து தப்பித்து வந்தார். எனினும் உள்துறை அமைச்சர் சிதம்பரத்தின் கழுகுக் கண்ணை உச்ச அவரால் முடியவில்லை. 2008 டிசம்பர் மும்பை மீது நடந்த தீவிரவாத தாக்குதலை அடுத்து அதிரடியாக சிதம்பரம் உள்துறை அமைச்சராக சோனியாவால் நியமிக்கப்பட்டார். செயல் வீரர் என்பதிலேயே சிதம்பரம் இவ்வாறு கனதியான பதவிக்கு உரித் தாளியாக் கப்பட்டார் என்பது கண்கூடு. இதற்கு போதாதென்றே அமைச்சை இரண்டாக பிரிக்கும் படி சிதம்பரம் யோசனை முன்வைத்திருந் தார். தமது அமைச்சின் கீழ் பல திணைக் களங்களை கொண்டு வருவதற்கே இலங்கை போன்ற நாடுக்ளில் அமைச்சர்கள் முயற்சிப்பது வழக்கம். சிதம்பரமோ யதார்த்தத்தை உணர்ந்தவராக இவ்வாறு கூறியது பாராட்டத் தக்கது. காரிய சமர்த்தர், செயல் வீரர் எனப்பட்ட சிதம்பரம் இதைச் சொல்லி இரண்டு வாரங்களில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து நாராயணன் தூக்கப்பட்டுள்ளார்.



# மன்மோகன் அரசைப்பிடித்த கடைசிச் சாபமும் நீங்கியது!

தக்கது. இது உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்களில் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையின் கொள்கை வகுப்புக


ப.சிதம்பரம்

ளில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய பதவி ஆகும். குறிப்பாக இலங்கையில் கடந்த ஆண்டு நடந்துமுடிந்த யுத்தத்தின் போது இந்தியாவில் தேர்தல் மும்முர மாக நடந்துவந்தது. எனவே கொள்கை முடிவுகளை எடுப்பதை நாராயணன் போன்ற அதிகாரிகளிடம் விட்டுவிட்டு சோனியா, மன்மோகன் உள்ளிட்ட அரசுத் தலைவர்கள் பிரசாரத்தில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தனர். எனவே நாராயணன் தாறுமாறான முடிவுகளை இவ்விடயத்தில் எடுத்தார் என தமிழகத் திலுள்ள பல தலைவர்கள்


சிவ்சங்கர் மேனன்

குற்றம் சாட்டி வந்ததும் நினைவு கூரத்தக்கது. அதற்கு முன்னர் சார்க் மாநாடு இலங்கை யில் நடந்தபோது நாராயணன் இந்தியப் பிரதமருடன் வந்த குழுவில் இடம்பெற்று இருந்தார். அவருக்கு செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளில் ஏற்பட்ட குளறுபடியால் நாராயணன் கொழும்பில் வீதிகளில் நடந்து தான் தங்கிய ஹோட்டலுக்கு சென்றதும் குறிப்பிடத்தக்கது. இலங்கை யர்கள் இந்த சின்ன விஷயத்தை கூட ஒழுங்குபடுத்துவதில் தவறியது கூட நாராயணனுக்கு இலங்கை மீது அதிருப் தியை ஏற்படுத்தவில்லை. இலங்கை அரசுக்கு முற்றுமுழுதாக சார்பான நிலைபாட்டை அவர் எடுத்ததும்

முன் குஜ்ரால், தேவகவுடா அரசுகளில் நிதி அமைச்சராகவும் 2004க்குப்பின் நீதியமைச்சராகவும் அவர் செய்த திருப் தியான பணிகளை அடுத்தே சோனியா வும் பிரதமரும் உள்துறை அமைச்சை அவரிடம் கையளித்தனர் என்று கருதப்பட்டது. எனினும் அவர் பதவி ஏற்ற சகுனமோ என்னவோ சீன ஆக்கிரமிப்புக் கரங்கள் இந்தியா மீது பலதிசைகளில் இருந்தும் படரத் தொடங்கின. ஒரு புறம் மாவோ தீவிர வாதிகள். மறுபுறம் நக்சலைட்ஸ்கள். மற்றொரு புறத்தில் வழமை யாக பாகிஸ்தானிய அட்டகாசம் என சிதம்பரத்தின் வேலைப்பழு பலமடங்கு திடீரென அதிகரித்து விட்டது. இதனால் கடந்த வருடம் நடந்த லோக்சபா தேர்தலில் தனது தொகுதியில் தோல்வியின் விளிம்பு வரை சிதம்பரம் சென்றார். கடைசியில் தில்லு முல்லுகள் செய்து அதை வெற்றியாக் கியது வேறு கதை. இவ்வாறு திணறிய சிதம்பரம் வழமை யான தனது பாணியில் வேலையில் முழு மூச்சாக இறங்கியதன் பலனே நாராயணன் தூக்கி எறியப்பட்டதாகும்.


சில வாரங்க ளுக்கு முன் உள் துறை அமைச்சை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென சிதம்பரம் வெளிப் படையாக கருத்து வெளியிட்டிருந்தார். இந்தியாவின் உள்துறை அமைச்சர் என்பது பிரதமர் பதவிக்கு அடுத்த பதவியாகும். உள்நாட்டில் மத்திய - மாநில அரசு உறவு, ஆளுநர் நியமனம் உளவுத்துறை, மத்திய பொலிஸ்படை, சி.பி.ஐ எனும் சக்தி வாய்ந்த மத்திய புலனாய்வுப் பணியகம் என பல முக்கிய அமைப்புகள் அவரின் கீழ்தான் வருகின்றன. இவற்றையும் கையாண்டு வெளி சக்திகளான பாகிஸ்தான், சீனா ஆகியவற்றின் எல்லைப்புற ஆக்கிரமிப்பைத் தடுத்தல். உள் நாட்டில் தீவிரவாத தாக்குதல்களை கட்டுப்படுத்துதல் என தலைக்கு மேல் வேலைகளை சுமப்பது கடினம் என்பதை சிதம்பரம் தெளிவாக உணர்ந்தார். இப்பிரச்சினையை ஒட்டித்தான் உள்துறை அமைச்சுக்கு இரு இணை அமைச்சர்கள் உள்ளனர். அதுவும்

நாராயணனின் பதவி நேரடியாக பிரதமருக்கு பதில் சொல்லும் பதவியே எனினும் சிதம்பரம் உள்துறை அமைச்சர் என்ற வகையில் அவருக்கு கீழும் சில விடயங்களில் பணியாற்ற நேரிடும். பாகிஸ்தான் - சீன ஆக்கிரமிப்பு, மாவோ தீவிரவாதிகள், நக்சலைட்கள் என்பனவே சிதம்பரத்துக்கு இப்போதைக்கு மிகவும் தலைவலி தரும் விடயங்களா கும். எனவே இதை சரியாக செய்ய புதிய செயல்திட்டம் சிதம்பரத்தால் வகுக்கப்பட்டது. அதன்படி நாராயணன் நாளாந்தம் குறித்த விடயங்கள் பற்றி சிதம்பரத்துக்கு அறிக்கை தரும்படி அறிவுறுத்தப்பட்டார். தள்ளாடும் வயதில் சுகமாக இந்த பதவியில் ஆசுவாசமாக பணியாற்றி வந்த நாராயணனுக்கு இதனால் வேலைப் பழு அதிகரித்து விட்டதாக கூறப் படுகிறது. எனவே அவர் மீது சிதம்பரம் திருப்தியடையவில்லை என்பதும் தெளிவானது.

உண்மையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவி என்பது உள்துறை அமைச்சருக்கு அடுத்து பிரதானமான, வேலைப்பழுமிக்க பதவியே. அதில் தீவிரமாக பணியாற்றாது அப்பதவியை நாராயணன் லேசாக எடுத்துக் கொண்டதே நாட்டில் பல சிக்கல்க ளுக்கு காரணம் என்பதை சிதம்பரம் கண்டுகொள்ள வெகுநாள் ஆகவில்லை. அவரது வயதில் இப்பதவி அவருக்கு அழுத்தங்களைமிக அதிகம் கொடுக்கி றது என்பதை சோனியா மற்றும் மன்மோகனுக்கு சிதம்பரம் நாசூக்காக தெரியப்படுத்தினார். சோனியா காந்தியினதும் பிரதமரதும் செல்லப் பிள்ளை போல நாராயணன் இருந்த போதும் சிதம்பரம் சொல்வதை இவ் விருவராலும் தட்டமுடியாதளவுக்கு அவரது சொல்திறன் உள்ளது. மேலும் மன்மோகன், சோனியா இருவருமே தலை கொளுத்தவர்களாக இல்லாமல் சிதம்பரம் போன்ற மூத்த நிர்வாகிகளின் ஆலோசனையை தட்டிக்கழிக்காத மன நிலையுடன் இருப்பதை நாராயணன் பதவிமாற்றம் காட்டியது. திடீரென வந்த வேலைப்பழுவை கண்டு திகைத்த கிழவரான நாராயணன் இனிமேலும் தனது பாச்சா சிதம்பரத்திடம் பலிக்காது என்பதை உணர்ந்து கொண்டார். இதன்விலைவாக அவரை நீக்காது கௌரவமான ஆளுநர் பதவி ஒன்றை ஏற்குமாறு கட்சியும் அரசும் கேட்கவும் அவரும் இணங்கினார். அதன்படி முக்கிய மாநிலங்களில் ஒன்றான மேற்கு வங்கத்தின் ஆளுநராக நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு மற்றொரு கேரளத்துப் பிராமணரான சிவ்சங்கர் மேனன்


எம்.கே. நாராயணன்

அல்லது காலநிலை மாநாட்டில் பிரதமரில் தூதுவராக இருந்த ஷியாம் சரண் நியமிக்கப்படுவாரெனத் தெரிகிறது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் வெளியுறவு அனுபவம் உள்ளவரை நியமிக்க பிரதமர் விரும்பியதும் நாராயணன் நீக்கப்பட மற்றொரு காரணம் என தெரிகிறது. நாராயணனைபடபோல் அன்றி இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் சிவ்சங்கர் மேனன் தூதுவராக


ஷியாம் சரண்

இருந்ததால் இலங்கையின் உள்நாட்டு இனவாதம் பற்றி நாராயணனை விடவும் சிறப்பாக அறிந்திருப்பதும் கவனிக்கத் தக்கது. எனவே அதே கேரளத்துப் பிராமணர் என்றாலும் நாராயணனை விட அவர் மேலானவராக இருக்கக் கூடும் என நம்பலாம்.

*****

-எஸ். சுரேந்திரஜித்-

# பித்தன் பதில்கள்



மதன்,
வவுனியா.

**கேள்வி:-** யுத்தகாலத்தில் விலைவாசிகள் உயர்ந்து காணப்பட்டன. இப்போதும் அப்படியே... இதற்காக வீதியில் இறங்கிப் போராடலாமா?

**பதில்:-** பொறுத்திரும். ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா களமிறங்கியதைத் தொடர்ந்து சில பொருட்களின் விலைகளாவது குறைந்திருப்பதை யோசித்துப் பாரும்... சிலவேளை இன்னும் கொஞ்சம் இறங்கி னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தர்சினி,
மட்டக்குளி.

**கேள்வி:-** பல்கலைக்கழகக் கல்வி தரம் குறைந்து போய்விட்டதாகச் சொல்கிறார்களே...?

**பதில்:-** அதுமட்டுமா..?அரச நிறுவனங்கள், அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் பெரிய பதவிகளில் இருப்போருடைய தரங்களும் அப்படித் தானே இருக்கிறது. தரமில்லாதவர்கள உயர் பதவி வகிப்பது நமது தலைவிதியாகிப் போய்விட்டது.

றெஜி,
கொழும்பு.

**கேள்வி:-** ஆளும் கட்சியினது தேர்தல் வன்முறைகள் ஒருபோதுமில்லாதவாறு அதிகரிக்கக் காரணம் என்ன பித்தரே...?

**பதில்:-** தலைவரினதும், அவரில் தங்கியிருப்போரினதும், தங்கியிருப்போரில் தங்கியிருப்போரினதும் - எதிர்கால ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் வீதத்தை அளவிடுவது அதைக் கொண்டு தானே!

அமீர்,
அட்டாளைச்சேனை.

**கேள்வி:-** தமிழ்ச் சிறுகதையின் மன்னனாக புதுமைப்பித்தன் கொள்ளப்படுவது போல் ஹிந்தியில் சிறுகதை மன்னனாகக் கொள்ளப்படுபவர் யார்?

**பதில்:-** பிரேம் சந்த்.

ரமேஸ்,
தெஹிவளை.

**கேள்வி:-** சர்ச்சைக்குரிய பாதாளக் குழுவினர் இப்போது எங்கே இருக்கிறார்கள்?

**பதில்:-** மாற்றுக் கட்சியினரின் பதாதைகள், 'கட் அவுட்'கள் இருக்கும் இடங்களில் சுற்றிக்கொண்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

குமார்,
அரியாலை.

**கேள்வி:-** ஆரம்பகாலம் தொட்டே ஆட்சிக்கு வந்த அரசுகள் எல்லாம் செய்த பெரும் தவறு என்ன பித்தரே?

**பதில்:-** சிறுபான்மை மக்களை அசட்டை செய்தது தான்.

ஜோன்சன்,
பதுளை.

**கேள்வி:-** நீண்ட ஆயுள் வரமா, சாபமா?

**பதில்:-** உமக்கு வாய்ந்த 'கிரஹலட்சுமி' யைப் பொறுத்தது அது.

தருண்,
கொழும்பு

**கேள்வி:-** உலகமெங்கும் திடீர் திடீரென பூகம்பங்கள் ஏற்பட்டு மனிதர்கள் மரணிக்கின்றார்களே....?

**பதில்:-** மனிதனின் அக்கிரமங்கள் எல்லை மீறிச் செல்லும்போது, இறைவன் விடுக்கும் எச்சரிக்கைகள்தான் இவை.

பாத்திமா,
மருதமுனை.

**கேள்வி:-** பித்தரே! நீங்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருந்ததுண்டா?

**பதில்:-** என் மனைவி என் பக்கத்திலேயே இருப்பதினால், நிச்சயமாக ஒரு நாள் நானும் போகவேண்டி வரலாம்.




தயாளன்,
திருகோணமலை.

**கேள்வி:-** இந்தியாவில் சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் தீக்குளிக்கிறார்களே?

**பதில்:-** எல்லாப் பொருட்களையும் போல் இந்தியாவில் உயிரும் மலிவாக இருக்கலாம். அதனால்தான் ஒரு கூத்தாடி (நடிகர்) இறந்தாலும் தீக்குளிக்கிறார்கள்.

சகி,
யாழ்.

**கேள்வி:-** இராணுவத்தினர் எம்மைப் பரிசோதிக்கிறார்கள். அவர்களைப் பரிசோதிக்க யாராவது இருக்கிறார்களா பித்தரே?

**பதில்:-** ஆமாம். அதற்கு 'வேறு' இராணுவ வீரர்கள் இருக்கிறார்கள்.

கண்ணன்,
வவுனியா.

**கேள்வி:-** வியாபாரத்தில் போட்டியிடுவது கூடுமா?

**பதில்:-** போட்டியிருந்தால் பரவாயில்லை; ஆனால் பொறாமை கூடாது.

பார்த்தீபன்,
கொக்குவில்.

**கேள்வி:-** மென்ட்டல் வரக் காரணம் என்ன பித்தரே...?

**பதில்:-** ஒருவர் செய்த நன்மைகளை மறந்து தீமைகளை மட்டும் மனதிற் போட்டு மறக்க முடியாமல் மரண அவஸ்தைப்படும் போதுதான் மென்ட்டல் வரும்.

ஜபில்,
சாந்தமருது.

**கேள்வி:-** ஆபாசம் என்பது கண்ணைப் பொறுத்ததா, காட்சியைப் பொறுத்ததா?

**பதில்:-** என்ன நோக்கத்தோடு பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தது.

ரஜீவன்,
வத்தளை.

**கேள்வி:-** அரசியல்வாதிக்கு வயது வரம்பு வைத்தால்....?

**பதில்:-** இன்றிருக்கும் பீடைகள் எவ்வளவோ குறைந்துவிட்டிருக்கும்.

ராம்,
சங்கானை.

**கேள்வி:-** பாடலா, பின்னணி இசையா முக்கியமானது?

**பதில்:-** இரண்டும் முக்கியம்தான். ஆனால், தலைகீழான இந்த யுகத்தில் பாடலின் இடத்தைப் பின்னணி இசை ஆக்கிரமித்துவிட்டது. பாடலைவிட பின்னணி இசைதான் ஓங்கி ஒலிக்கிறது! பழைய பாடல்களைக் கேட்டுப் பாருங்கள்... பாடல் எப்படி இனிக்கிறது! இசை எப்படி ஜொலிக்கிறது...!

## சொற்சிலம்பம் போட்டி இல. 402

சொற்சிலம்பம் 402 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 07 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி 21 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 400 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.402

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ம் | 2 ப | 3 து | ■ | 4 த | ர | 5 கு |
| ப் | ■ | 6 கை | லா | 7 சா | லை | ■ | டு |
| 8 ப | 9 தி | ல் | ■ | 10 கு | வ | ளை | ம |
| 11 சி | றை | ■ | 12 ந | ர | ன் | ■ | பு |
| ■ | 13 சே | 14 வ | க | ம் | ■ | 15 உ | ம் |
| 16 து | ரி | த | ம் | ■ | 17 த | ரு | ■ |
| ம் | ■ | ன | ■ | 18 ப | டு | க் | 19 கை |
| 20 பு | ல | ம் | ப | ல் | ■ | 21 கு | தி |

## சொற்சிலம்பம் போட்டி இல.400

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ந | 2 வ | 3 ர | 4 ச | ம் | ■ | 5 பு | 6 வி |
| 7 வ | ரா | க | ன் | ■ | 8 க | ய | ல் |
| க் | ■ | 9 சி | ன | த் | த | ல் | ■ |
| 10 கி | 11 ர | ய | ம் | ■ | க | ■ | 12 து |
| 13 ர | க | ம் | ■ | 14 தெ | ளி | 15 த | ல் |
| 16 க | ளை | ■ | 17 ஏ | ன் | ■ | க | லி |
| ம் | ■ | மா | ர் | ■ | 18 உ | ரா | ய |
| ■ | ப | சி | ■ | எ | ன் | று | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 402

### இடமிருந்து வலம்

1. அரைச் சதம்.
4. இதை 'கமிஷன்' என்பர்.
6. பல்கலைக்கழகம்.
8. கேள்விக்கான விடை.
10. ஒரு வாயளவு கொண்ட உணவுத் திரளை.
11. கைதிகளை தடுத்து வைத்திருக்கும் இடம்/ மறியல்.
12. மனிதன்.
13. பணிவிடை செய்தல்/ ஊழியம்.
15. உமது.
16. வேகம்/ சீக்கிரம்.
17. மரம்.
18. துயிலுமிடம்.
20. அரற்றுதல்.
21. பாய்.

### மேலிருந்து கீழ்

1. ஒரு தமிழ் மாதம்.
2. வெளிச்ச வேளை.
3. கிணற்றில் நீர் அள்ள உதவும்.
4. வழி நடத்திச் செல்பவன்.
5. அம்மா, அப்பா, பிள்ளைகள் ஒன்று சேர.
7. கடல்.
9. அரசிறைக் களஞ்சியம்.
12. விரலில் வளர்வது.
14. முகம்.
15. எ**கு.
16. தேங்காய் மட்டையிலிருந்து பிரித்து எடுப்பது.
17. மறி.
18. இது போனால் சொல்லும் போகுமாமே...?
19. மறியலில் இருப்பவர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 400

### பரிசு பெறுவோர்

1. கே. இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
2. நா. விஷ்ணுவர்த்தன், 200, பாடசாலை வீதி, சேனைக் குடியிருப்பு-01, கல்முனை.
3. T. செல்வதுரை, 296, டைக் வீதி, திருமலை.

### சொற்சிலம்பம் போட்டி இல. 400

### பாராட்டுப் பெறுவோர்

01. எம்.ஜே. பெர்ணான்டோ, கொழும்பு-13.
02. திரு. சி.பரிமளகாந்தன், யாழ்ப்பாணம்.
03. திருமதி. கமலாதேவி வீரசிங்கம், வவுனியா.
04. அ. சௌமியா, வவுனியா.
05. தாமோதரம் வடிவேல், செங்கலடி.
06. சி.மேகலா, கொழும்பு-13.
07. ஜே.எச். பாத்திமா முஹ்ஸாஸ், புத்தளம்.
08. ஜெ. அபிஜித்தன், கொழும்பு-06.
09. ஜெ. நவபுத்திரன், கல்முனை.
10. கோ. சஞ்சய், சேனைக்குடியிருப்பு-01.
11. கௌ.மு.சார்ல்ஸ், வவுனியா.
12. திருமதி. சி.ஜெயராணி, செங்கலடி.
13. க. அஸ்வினி, யாழ்ப்பாணம்.
14. ஜே.எஸ்.எச். மௌலானா, கல்கிசை.
15. சு. பாலசூரியன், வவுனியா.

குறுங்கதை

# விமர்சனம்!

ம.நிரேஸ்குமார்

ஒரு நாளும் இல்லாதமாதிரி அருமையாக அந்தச் சனிக்கிழமை நான் வீட்டில் நின்றேன். வாசலில் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டது.

''அப்பா ஐஸ்கிறீம் வேண்டித்தாங்கோ'' எனது மகன் கேட்டான்.

''இல்லயடா.....அது மீன்காரன்''

நான் வழமை போலவே பொய் சொல்லி ஏமாற்ற முனைந்தேன். மணிச்சத்தம் திரும்பவும் கேட்டது.

''ஒருக்கா என்னெண்டு எட்டிப்பாருங்கோவன். நான் இஞ்ச சும்மாவே நிக்கிறன். எல்லாருக்கும்தான் அவிச்சுக் கொட்டிக்கொண்டு நிக்கிறன். பொம்பிள மட்டும் முறியட்டும் எண்டு பேசாமல் இருக்காதையுங்கோ''

நான் தேங்காய் துருவி, வெங்காயம் வெட்டிக் கொடுக்காத கோபத்தை பொருத்தமான தருணத்தில் வெளிக்காட்டினாள் என் மனைவி.

''அம்மா மெதுவாக் கதையுங்கோ கொம்பியூட்டரில பாட்டு விளங்குதில்ல''

நான் எனக்குள் சிரித்தபடி வாசலை எட்டிப் பார்த்தேன். கேற்றடியில் தபால்காரன்.

திரு.எஸ். செல்வராகவன்
(எழுத்தாளர்)
இல 16, வேப்பங்குளம்,
வவுனியா.

அழகான அச்சுப் போன்ற கையெழுத்து. நிச்சயம் ஒரு பெண்ணின் கையெழுத்தாகத்தான் இருக்க வேண்டும் என்ற என் எண்ணம் பொய்க்கவில்லை, From காயத்திரி என்று என்று போட்டிருந்தது.

எனது ஒரு சில சிறுகதைகள் மாத்திரமே பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. தத்தித் தத்தி நடை பயிலும் எனக்கு முதன் முதலாக 'எழுத்தாளர்' என்ற அந்தஸ்து ஒரு பெண்ணிடமிருந்து கிடைத்துள்ளது.

''என்ன வந்தது? கடிதமே''

''இல்ல.... ஆற்றயோ விலாசம் விசாரிச்சவன்''

மத்தியானச் சாப்பாட்டு நேரம் முடியுமட்டும் காத்திருந்து, என் மனைவி உறங்கிய பின் அவசரமாய் வாசித்தேன்.

*அன்புக்கும் மதிப்புக்கும் உரிய எழுத்தாளர் செல்வராகவன் அவர்களுக்கு;*

*ஆயிரம் கோடி வணக்கங்கள். உங்கள் சிறுகதைகளை தொடர்ந்து வாசித்து வருகிறேன். உங்கள் கதைகளில் நடமாடும் பாத்திரங்கள் என்னை மாத்திரமன்றி என் வகுப்பு தோழிகளையும் வெகுவாகக் கவர்ந்துள்ளன.*

*உங்கள் கதைகளில் வருகின்ற கந்தையர், கனகம், கமலம், ராசாத்தி, செல்லம், செல்வம், ராசன் போன்றவர்கள் உண்மைப் பாத்திரங்களா? அல்லது கற்பனைப் பாத்திரங்களா? என்ற சந்தேகம் எமக்கு உண்டு. ஏனெனில் அவ்வளவு இயல்பாக அவர்கள் உங்கள் கதைகளில் நடமாடுகிறார்கள்.*

*உங்கள் கதைகளில் 'நான்' என்ற பாத்திரத்தை சிறப்பாக பயன்படுத்துகிறீர்கள். அது உண்மையிலேயே நீங்கள் தானா? என்ற சந்தேகம் என் நண்பிகளில் பலருக்கு உண்டு. ஆனால், நான் தெளிவாக உள்ளேன். அதில் வருகின்ற சில 'நாங்கள்' வேண்டுமானால் நீங்களாக இருக்கலாம். அனைத்து 'நாங்களும்' நீங்கள் அல்ல மனித மனங்களின் விகார எண்ணங்களை வெளிப்படுத்துபவர்களாக, உங்கள் கதையின் நாயகன்கள் தோன்றுகின்றபோது, மற்றவர்களின் கேள்விக் கணைகளிலிருந்து தப்பிப்பதற்காக, 'நான்' என்பதை பயன்படுத்துகிறீர்கள்.*

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் ஆள்மனதின் எண்ணங்களை, என் எழுத்தினூடாக ஊடுருவி பார்த்து, அறிந்து கொள்ளும் திறமையை பெற்றிருக்கும் அந்த க.பொ.த உயர்தர வகுப்பு மாணவியை நினைக்க எனக்குப் பெருமையாக இருந்தது.

எனது கதைகள் தொடர்பான கருத்துக்களையும் எழுதியிருந்தாள். என்னைப் பாராட்டி எழுதியதற்காகவன்றி, அவளை ஊக்குவிப்பதற்காக ஒரு பதில் எழுதிப் போட்டேன். தொடர்ந்து வாசிக்கும் படியாகவும், வாசிக்க இன்னும்திறமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், விமர்சிக்கும் பழக்கம் படைப்பாற்றலை எம்முள்ளே வளர்த்துக் கொள்ள உதவும் எனவும் எழுதியிருந்தேன்.

*சில நாட்களின் பின்னர், ஒரு கடிதம் அவளின் தகப்பனிடமிருந்து வந்தது. நல்ல வேளையாக அந்தக் கடிதம் அவளது பாடசாலை அதிபரின் கைகளில் கிடைத்ததாகவும், அவர் அவளைக் கடுமையாகக் கண்டித்ததாகவும், தன்னை தனியாக அழைத்து, அவளின் நலன் கருதி, அவளைக் கண்டிக்கும்படி கூறியதாகவும் எழுதியிருந்தார்.*

*'ஒரு குமர்ப் பெட்டை கடிதம் போட்டால், உடன் பல்ல இளிச்சுக்கொண்டு கடிதம் போடுறதோ? நீயெல்லாம் எழுதி என்னத்தக் கிழிக்கப் போறாய்? இனிமேல் உந்த வேலை செய்தாயெண்டா நான் சும்மா இருக்க மாட்டன்' என்று என்னை மிரட்டியும் இருந்தார்.*


எனக்கு ஒரு பக்கம் சிரிப்பாகவும், இன்னொரு பக்கம் விரக்தியாகவும் இருந்தது. ஒரு குழந்தையின் வாசிப்புப் பழக்கத்தையும் விமர்சிக்கும் திறனையும் ஊக்குவிப்பதற்காக நான் எழுதிய கடிதத்தில் அதிபர் என்ன பிழையைக் கண்டாரோ? அவளின் தகப்பன் என்ன தவறைக் கண்டாரோ நான் அறியேன்.

அன்றிரவு, என் மன விரக்தியை மனைவியிடம் பகிர்ந்து கொண்டேன். அவள் மூக்கைச் சிந்தி, அழுது குளறி, 'அம்மா முந்தியே சொன்னவா.... ஆம்பிளயள நம்பக் கூடாதெண்டு. ஏனெனக்கு துரோகம் செய்யுறியள்' என்று பேசித் தீர்த்து திரும்பிப் படுத்து விட்டாள்.

இது என்ன உலகம்? என்று சிந்தித்தவாறே நான் உறங்கி விட்டேன். இச் சம்பவங்களை நான் மறந்து சில நாட்களின் பின் அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

எமது உறவை யாராலும் பிரிக்க முடியாதென்றும், யார் தடுத்தாலும் அது தொடர வேண்டும் என்றும் எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்திற்கு நான் பதில் போடவில்லை.

***



---

## வேலுப்பிள்ளையின்...

(23ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இரு மருங்கிலும் இருந்தன. இப்போது அதற்கான எந்த அடையாள மும் இல்லை. ஏராளமான கட்டடங்கள் இடித்து நொறுக்கப்பட்டிருந்தன. எங்கு பார்த்தாலும் சிங்கள எழுத்துகளாலான அறிவிப்புப் பலகைகள், பதாகைகள்... கொழும்பு நகரத்தில்கூட சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்று மூன்று மொழிகளிலும் அறிவிப்புகளைக் காண முடியும். ஆனால், கிளிநொச்சி முழுவதுமே சிங்கள மயமாக்கப்பட்டு விட்டது. பெட்டிக் கடைகள், தேநீர் கடைகள், சிற்றுண்டி விடுதிகள், பெட்ரோல் டீசல் நிலையங்கள் எல்லாமே ராணுவத்தினரால் நடத்தப்படுகின்றன. தமிழும் தமிழனும் ஆட்சி செய்த அந்த மண்ணில், இப்போது சிங்களமும் சிங்கள ராணுவமும் ஆதிக்கம் செய்வதைப் பார்த்தபோது, இவற்றை எல்லாம் எப்படி, எப்போது மீட்க முடியும் என்று எண்ணி எனக்குப் பெருமூச்சுதான் வந்தது. வாகனத்தை மெதுவாக ஓட்டும்படி கேட்டுக்கொண்டு கிளிநொச்சியின் இரு புறங்களையும் மாறி மாறி பார்த்துக் கொண்டே போய் பரந்தன் எனும் இடத்தில் நின்றோம்.

மதிய உணவு ஏதாவது சாப்பிடலாம் என்று செல்வம் அடைக்கலநாதன் ஒரு கடைக்கு அழைத்துப் போனார். ராணுவத்தில் உள்ள சிங்களப் பொடியன்கள்தான் அந்த கடைகளில் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தக் கடைக்கு முன்னால் மட்டும் சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்பட்டிருந்தது. அந்தத் தமிழைப் படித்ததும் எனக்கு சிரிப்புதான் வந்தது. 'சோறு சாப்பிடுங்க' என்று எழுத நினைத்து, 'சோரு சாப்புங்க' என்று தமிழையும் கொலை செய்து வைத்திருந்தார்கள். அங்கு வீதியில் ஒரு பீடம் இடிக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தைப் போய்ப் பார்த்தோம். பீடத்தை அவர்களால் முழுமையாக அகற்ற முடியவில்லை. ஆனால், அது அடையாளம் தெரியாத அளவு தகர்க்கப்பட்டிருந்தது. அங்கு நின்றுகொண்டிருந்த சிங்களப் பொடியனிடம், 'இது ஏன் இடிக்கப்பட்டுள்ளது' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சிங்களத்தில் சொன்னது விளங்கவில்லை. அப்போது என்னோடு வந்த சிங்களம் தெரிந்த தமிழ் நண்பரிடம் அவனை விசாரிக்கச் சொன்னேன். அது புலிகள் கட்டிய ஒரு நினைவிடம் என்றும், அதை ராணுவம் இடித்து விட்டது என்றும் அந்த சிங்களப் பொடியன் சொன்னான். அந்தளவுக்கு அங்கே தமிழர்கள் வாழ்ந்ததாகவோ, புலிகள் இருந்ததாகவோ எந்த ஓர் அடையாளமும் இல்லாத அளவுக்கு வெறித்தனமாக அனைத்தையும் சிதைத்துள்ளனர்.''

''விடுதலைப் புலிகளின் அனைத்து வரலாற்றுச் சிறப்புகளும் அடியோடு அழிக்கப்பட்டு விட்டதா?''

''ஆமாம். நாங்கள் ஆனையிறவுக்குப் போனபோது அந்த அழிவை வலுவாக உணர முடிந்தது. புலிகளின் சாதனைகளுக்கு அடையாளமாக இராணுவத்திடம் கைப்பற்றிய பீரங்கி ஒன்று ஆனையிறவுக்கு சற்று முன்னதாகவே பொதுமக்களின் பார்வைக்கு ஏற்கெனவே புலிகளால் வைக்கப்பட்டிருந்தது. அந்த இடம் வந்ததும் வாகனத்தை நிறுத்தி, இறங்கிப் போய்ப் பார்த்தோம். அந்த பீரங்கி, பீடத்தில் இருந்து தரையில் இறக்கப்பட்டிருந்தது. அங்கே வருவோர் போவோர் எல்லாம் நின்று படமெடுத்துக் கொண்டிருந்தனர். நாங்களும் படம் பிடித்துக்கொண்டோம்.

பின்னர் அங்கிருந்து நகர்ந்து ஆனையிறவைத் தொட்டோம். புலிகளின் விடுதலைப் போர் வரலாற்றில் ஆனையிறவு மீட்சி என்பது இமாலய சாதனை! சாலையின் இரு மருங்கிலும் கடல்நீர் சூழ்ந்துள்ளது. அந்த மாலைப் பொழுதில் அந்தப் பகுதி அப்படி ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதை என்னால் ரசிக்க முடியவில்லை. ஏனென்றால், ஆனையிறவின் ஒரு முனையில் மிகப் பிரமாண்டமான முறையில் பல கைகள் இலங்கையை தாங்கிப் பிடிப்பதைப் போல ஒரு மாபெரும் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க எனக்கு அடிவயிறெல்லாம் பற்றி எரிந்தது. அந்த நினைவுச் சின்னத்தை தாங்கிப் பிடிக்கும் கைகள் இந்தியாவின் கைகளாக, குறிப்பாக காங்கிரஸின் கைகளாக எனக்குத் தெரிந்தன!

அந்த நினைவுச் சின்னத்தையும், குறிப்பாக இலங்கையை தாங்கிப் பிடிக்கும் அந்தக் கைகளையும் உடைத்தெறியும் நாள் வராதா? என்ற வேதனை என்னைத் திணறடித்தது.

கொடிகாமம் கடந்து சாவகச்சேரிக்கு முன்னதாக நெல்லியடி வழியாக பருத்தித்துறை வீதியைப் பிடித்து வல்வெட்டித்துறையை அடைந்தோம். ஏ-9 வீதி மட்டுமல்ல, இந்தப் பாதையிலும் கூட அங்குலம் அங்குலமாக ராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்களையும், கெடுபிடிகளையும் காணமுடிந்தது. ஒட்டுமொத்தத்தில் புலிகள் நிறுவிய ஈழம் சிங்களமயமாகவும் ராணுவ மயமாகவும் ஆக்கப்பட்டிருந்தது.''

(தொடரும்...)

# எம். ஜி. ஆரின் அதிஷ்டப் பார்வை பட்டதால் நட்சத்திர நடிகையான மஞ்சுளா





அண்மையில் நடிகர் விஜயகுமார், நடிகை மஞ்சுளா தம்பதிகளின் இளைய மகள் ஸ்ரீதேவியின் திருமண வரவேற்பில் ரஜனி, கமல் உட்பட தமிழ்த் திரை உலகமே திரண்டுவந்து தம்பதிகளை வாழ்த்தியது. ஸ்ரீதேவி ஏற்கனவே 'தித்திக்குதே', 'தேவதையைக் கண்டேன்', உட்பட சில படங்களில் நடித்திருந்தாலும் ஏனோ தன் பெற்றோரைப் போல பெரியளவில் பேசப்படவில்லை. ஆனால், இவரின் தாயார் மஞ்சுளா மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் கடைக்கண் பார்வையால் அவருக்கு இணையாக நடித்ததன் அபிப்பிராயம் ஏற்பட்டது!

எம்.ஜி.ஆர். 1972 இல் ஜெயலலிதாவுடன் இணைந்து 'ராமன் தேடிய சீதை', 'பட்டிக்காட்டுப் பொன்னையா' ஆகிய படங்களிலும், 'நல்லநேரம்', 'நான் ஏன் பிறந்தேன்' ஆகியவற்றில் கே.ஆர்.விஜயாவுடனும் நடித்தார். 1972 இல் மறுபடியும் 'மஞ்சுளா'வுடன் இணைந்து 'இதய வீணை' என்ற வித்தியாசமான கதையம்சம் கொண்ட படத்தில் நடித்தார். இப்படத்தின் கதை அன்றைய பிரபல எழுத்தாளர் மணியனின் கதையாகும். தயாரிப்பும் அவரே. 'இதயவீணை' நூறு நாட்கள் ஓடியது.

'ரிக்ஷாக்காரன்' மற்றும் 'இதய வீணை' ஆகிய படங்களின் வெற்றியானது எம்.ஜி.ஆருக்கு ஒன்றைப் புரிய வைத்தது. அதாவது அவரின் ரசிகர்கள் அவருடன் புதிய இளம் நடிகைகள் ஜோடி சேருவதைப் பெரிதும் விரும்புகிறார்கள். எம்.ஜி.ஆரும் தன்னை மிகவும் இளமையாகக் காட்டிக்கொள்ள இப்படியான இளம் நடிகைகளுடன் ஜோடி சேர்வதையே பெரிதும் விரும்பினார். எனவேதான், தனது மூன்றாவது சொந்தத் தயாரிப்பான 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்துக்கு மஞ்சுளாவுடன் லதாவையும் அறிமுகப்படுத்தினார்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் மஞ்சுளாவுக்கு பிரதான வேடம் தரப்பட்டது. இளம் நடிகைகளுடன் சேர்ந்து மூலம் இமையமாக உயர்ந்தார்.

எம்.ஜி.ஆர் தொடர்ந்து ஜெயலலிதாவுடனேயே இணைந்து பல வெற்றிப்படங்களில் நடித்து வந்துகொண்டிருந்தார். 1971 இல் எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவுடன் 'குமரிக்கோட்டம்', 'நீரும் நெருப்பும்', 'ஒருதாய் மக்கள்' ஆகிய படங்களில் இணைந்து நடித்தார். இவற்றில் ஒருதாய் மக்களைத் தவிர மற்ற இரண்டு படங்களும் 100 நாட்கள் ஓடின. சத்யா மூவிஸ் ஆர்.எம். வீரப்பனுக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையில் அப்போது இலேசான முறுகல் நிலையிருந்தது. 'கண்ணன் என் காதலன்' படம் எம்.ஜி.ஆர்., வாணிஸ்ரீ, ஜெயலலிதா நடிப்பில் சத்யா மூவிஸ் 1968 இல் தயாரித்தது. இதில் ஜெய்லலிதாவைவிட வாணிஸ்ரீக்குத் தான் அதிக வாய்ப்பு இருந்தது.

சத்யா மூவிஸ் சார்பாக 1970 இல் எம்.ஜி.ஆர், பத்மினி பிரதான வேடமேற்று நடிக்க அப்படத்துக்கு கதாநாயகியாக யாரைப் போடுவது என்பதில் எம்.ஜி.ஆருக்கும் ஆர்.எம்.வீரப்பனுக்கும் இடையில் காரசாரமான விவாதமே நடைபெற்றது. ஜெயலலிதாவையே போடும்படி எம்.ஜி.ஆர். சொன்னார். ஆனால், ஆர்.எம்.வீரப்பன் பிடிவாதமாக இருந்ததுடன் புதுமுகமான மஞ்சுளாவை எம்.ஜி.ஆருக்கு அறிமுகப்படுத்தினார். மஞ்சுளாவை பார்த்தவுடனேயே எம்.ஜி. ஆருக்குப் பிடித்துவிட்டது. அப்போது மஞ்சுளாவுக்கு வயது 18.

எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவை சமாதானப்படுத்தினார். எம்.ஜி.ஆர்., மஞ்சுளா,

**-பாலா. சங்குபிள்ளை-**

பத்மினி, மேஜர் சுந்தரராஜன், அசோகன், மனோகர், சோ நடிப்பில் உருவான 'ரிக்ஷாக்காரன்' வெகு நாட்கள் தயாரிப்பிலிருந்தது. 1970 இல் பூஜை போடப்பட்ட இப்படம் ஒரு வருடத்துக்குமேல் இழுத்துக்கொண்டு போனது. இறுதியில் 1971 இல் தீபாவளிக்கு வெளியான 'ரிக்ஷாக்காரன்' இருநூறு நாட்களுக்கு மேல் ஓடியதுடன் இந்தியாவில் மிகவும் பெறுமதி மிக்க 'பாரத்' பட்டத்தையும் எம்.ஜி.ஆருக்குப் பெற்றுத் தந்தது. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, சரோஜாதேவி, வாணிஸ்ரீ, கே.ஆர்.விஜயா, பாரதி உட்பட பல நடிகைகளுடன் இணைந்து நடித்திருந்தாலும் மஞ்சுளாவுடன் நடித்த போதுதான் அவருக்கு 'பாரத்' பட்டம் கிடைத்தது. எனவே, மஞ்சுளா மீது எம்.ஜி.ஆருக்கு அதிகளவில் நல்ல

எம்.ஜி.ஆர் இன்னமும் இளமையுடன் அழகாகத் தோன்றினார். 'உலகம் சுற்றும் வாலிபன்' 200 நாட்களுக்கு மேல் ஓடி வசூலில் சாதனை படைத்தது.

1974 இல் எம்.ஜி.ஆருடன் லதாவுக்கு மேலதிகமாக மஞ்சுளாவும் 'நேற்று இன்று நாளை' படத்தில் தோன்றி நடித்தார். அதேபோல 1975 இல் 'நினைத்ததை முடிப்பவன்' படத்தில் இரட்டை எம்.ஜி. ஆர்களில் ஒருவருக்கு ஜோடியாக மஞ்சுளா இணைந்து நடித்தார். எம்.ஜி. ஆருடன் ஜோடியாக இணைந்து மஞ்சுளா ஐந்து படங்களில் தோன்றி நடித்திருந்தார். இந்த ஐந்து படங்களும் மஞ்சுளாவுக்கு ஐந்து நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தன. எனவேதான், இவர் சிவாஜி கணேஷனுடனும் இணைந்து 'எங்கள் தங்க ராஜா', 'டொக்டர் சிவா', 'அன்பே ஆருயிரே', 'அவன்தான் மனிதன்' உட்பட பல நல்ல திரைப்படங்களிலும் இணைந்து நடித்தார். மஞ்சுளா சிவாஜியைத் தவிர முத்துராமன், சிவகுமார் போன்றவர்களுடனும் இணைந்து நடித்தார். இந்நிலையில்தான் 'பொண்ணுக்குத் தங்கமனசு' படத்தில் அறிமுகமான விஜயகுமாருடனும் ஜோடி சேர்ந்து நடிக்கக்கூடிய வாய்ப்பு மஞ்சுளாவுக்குக் கிடைத்தது. ஆரம்பத்தில் சாதாரண நட்பாகத் தொடங்கி கடைசியில் காதலாகி பின்பு திருமணத்தில் முடிந்தது. ஏற்கனவே திருமணமாகியிருந்த விஜயகுமார் மஞ்சுளாவையும் கைப்பிடித்தார். இவர்களின் மகன் அருண்குமாரும் ஒரு நடிகராவார். இவர் நடித்த 'மலை மலை' சமீபத்தில் வெளியாகி 100 நர்ட்கள் ஓடியமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் எம்.ஜி.ஆரின் பார்வை பட்டதால் பட்டொளி வீசி திரையில் பிரகாசித்த மஞ்சுளாவின் புகழுக்குக் காரணமான மக்கள் திலகத்தை நிச்சயமாக அவர் மறக்கமாட்டார்தானே! ✱

# ராசி பலன்

25-01-2010 முதல் 31-01-2010 வரை

பொ.ப.சந்திரலிங்கம்




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத் தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**கார்த்திகை 2, 3, 4, ரோகினி, மிருகசீரிடம் 1, 2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவார். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது.




**புனர்பூசம், பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறையில் முன்னேற்றம் இருக்காது, எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**மகம், பூரம், உத்தரம் 1**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்கும்.




**உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.




**சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நில்வும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர், பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**விசாகம் 4, அனுஷம், கேட்டை**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




**மூலம், பூராடம், உத்தராடம் 1**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலம் உண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.




**உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.




**அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3**

கா[illegible]த்தடை இரு[illegible]ம். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்[illegible] நிலவும். உற[illegible]ர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். ந[illegible] வீடு, வா[illegible]ம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நல[illegible]டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடு[illegible]ால் இலாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழிற்றுறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதியிருக்காது.





**புரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கல[illegible].பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. ப[illegible]பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் இலாபம் அதி[illegible]கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

# இடிபாடுகளில் இருந்து அவலக்குரல்.....


உலகில் மிக வறிய நாடான ஹெய்ட்டி பூகம்பம் ஏற்பட்ட பின்னர் உலகத்தின் கவனத்தை முற்றாகக் கவர்ந்துள்ளது. இரண்டு இலட்சம் பேர் உயிர் கொடுத்துள்ள நிலைமை



எடுத்து மோதிக் கொண்டனர். இவர்களுக்கு உலக உதவிகளைப் பங்கிடுவதற்கு இராணுவத்தை அனுப்ப வேண்டிய நிலைமை ஹெய்ட்டி அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

தற்போது 10,000 பேர் கொண்ட அமெரிக்க இராணுவம், உதவிகளை வழங்குவதற்காக அனுப் பப்பட இருப்பதாக அமெரிக்க அதிபர் தெரிவித்தார். மேலும், அமெரிக்கா இந்த விடயத்தை மிகவும் முக்கியம் கொடுத்து நோக்குவதாகவும், முன்னாள் அமெரிக்க அதிபர்களான ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பில் கிளின்டன் ஆகிய இருவரையும் இதற்காக நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிக்குப்பட்டு, இடிபாடு களின் அடியில் உயிருக்குப் போராடி வருகிறார்கள். ஹெய்ட்டியின் தலைநகர் போட் ஒவ் பிரின்ஸில் பல மாடிக்கட்டடங்களைக் கொண்ட பல்பொருள் அங்காடி ஒன்று இடிந்து கிடக்கிறது. இதன் இடிபாடு களின் கீழே இருந்து மூவர் அவலக்குரல் கொடுத்து வருகிறார்கள். இவர்களுடன் தொடர்பு கிடைத்துள்ள தாகவும், முதல் கட்டமாக நீரை அனுப்பும் முயற்சி சாத்தியமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், பெரும் கற்குவியல்கள், பிளாட்டுக்களை விலத்தி இவர்களை மீட்கும்வரை



உள்ள டொமினிக்கன் குடியரசுக்குக் கொண்டு செல்லப்பட் டுள்ளார்கள். சுனாமி பேரனர்த்தம் போலவே இந்தப் பூகம்பத்தின் தாக்கம் உள்ளதாக அங்கு சென்ற டைந்த டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிக்கிறது.

யிலும் அங்குள்ள மக்கள் அதைச் சரியாக உணர முடியாத நிலையி லேயே உள்ளனர். நிவாரணப் பொருட்களான ஷேட், பைகள், விளையாட்டு உபகரணங்களைப் பெறுவதற்கு அங்குள்ள மக்களி

முன்னாள் அதிபர்கள் இருவரும் இணைந்து அமெரிக்க மக்களிடம் பாரிய நிதியைத் திரட்டவுள்ளனர். இதற்கிடையில் அமெரிக்க வெளி நாட்டமைச்சர் திருமதி கிளாரி கிளின்டன் ஹெய்ட்டிக்கு விரைந்து நிலைமைகளைப் பார்வை யிட்டார்.



அனர்த்த நிவாரணப் பணிகளில் அமெரிக்க இராணுவம்...



டையே பலத்த மோதல் ஏற்பட்டுள்ளது. சுமார் 1,000 பேர் வரை வாள், கத்தி, கோடரிகளை

கடந்த வாரம் இடம்பெற்ற அனர்த்தத்தில் இறந்தவர்கள் போக மேலும் சிலர் உயிருடன்

உயிருடன் இருப்பார்களா என்பது சந்தேகமாகியுள்ளது.

இதேவேளை, இந்த அனர்த்தத் தில் ஐ.நாவின் அலுவலகமும் இடிந்து பலர் மடிந்துள்ளனர். இதில் பணியாற்றிய டென்மார்க்காரர் ஒருவர் தொடர்ந்து தேடப்பட்டுக் கொண்டிருக்கிறார். மறுபுறம் அங்கிருந்த டென்மார்க் திரைப்பட எழுத்தாளர் ஜொகான் லெத்தும் மூவரும் காப்பாற்றப்பட்டு அருகில்

ஹெய்ட்டி சிறிய தீவாக இருப்ப தால் உதவிகளை நெறிப்படுத்தி பூகம்பத்துக்குப் பிற்பட்ட ஒரு தேசத்தை உருவாக்க வசதிகள் இருக்கின்றன. உலகளவில் வரலாற்று சேற்றைப் பூசிக்கொண்ட அமெரிக்கா தன்மீது தானே பூசிய சேற்றை துடைத்துக்கொள்ள இந்த நிகழ்வு ஒரு வாய்ப்பாகியுள்ளது. வாய்ச் சொல்லால் சொல்லாது செய லால் செய்வதே நோபல் பரிசு பெற்ற ஒபாமாவுக்குப் பெருமை தரும்.

***


SONDERVERKAUF!

Möbel Ferrari

Kleine Preise

Grosse Auswahl

Polstergruppe Rosa,
Textil-Leder schwarz

995.-
statt 1450.-





Schlafzimmer Claudia,
alpinweiss

590.-
statt 1090.-

www.moebel-ferrari.ch

HINWIL Wasseristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit
- 6 Monate ohne Zins